


நம் நாடு

பொங்கல் மலர் - 1979

விலை
ரூ. 2.

ஆசிரியர்: மு. கருணாநிதி

R. நடராஜன்

ஒன்றுகூடும் பொங்கட்டும் இந்த நாளில்!



பொங்கல், ஆண்டுதோறும் வருகிறது. தமிழ்த் திருநாள் என ஏற்றிப் போற்றிக் கொண்டாடுகிறோம் மஞ்சளும் இஞ்சியும் கழுத்தில் பூண்ட புதிய பானைகள், அவற்றை அடுப்பிலேற்றிப் ''பொங்கல் பொங்குக'' என இசையொலி எழுப்பும் புத்தாடை யணிந்த மங்கல மங்கையர் — அவரைச் சுற்றிநின்று கரும்புத் துண்டுகளைச் சுவைத்துக் குதித்தாடும் மழலையமுதங்கள் - இல்லத்தின் இன்பங்கண்டு வெல்லமெனத் தித்திக்கும் உள்ளங்கொண்டு கோதையழகை, குழந்தையழகை அள்ளிப்பருகும் குடும்பத்தலைவர்கள். இவை, பொங்கலன்று காணுகின்ற பூரிப்புக் காட்சிகள்!

பச்சைப் பட்டெனக் கழனியில் விரிந்து கிடந்த நாற்றுக்கள், பயிராகி — சந்தன வண்ணச் சால்வை போர்த்திக்கொண்டதுபோல் முற்றிய பயிர்கள் தலை சாய்ந்து வயலே மூடி — முத்தரிசிகளை உள்வைத்து மாணிக்க நெல்மணிகள் களத்தில் குவிந்து — வளம் பெருக்கும் இந்த மாட்சி, தமிழகத்தில் தொன்று தொட்டுக் காண்பதுதான்!

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரையென்று பழம்பாடல்கள் விளக்கிடத் தவறிய தில்லை.

உழவர்க்கு விழா! உழைக்கும் வர்க்கத்துக்கு விழா: தமிழுக்கு விழா! தமிழ் இனத்துக்கு விழா! இப்படியடுக்கிக்கொண்டே போகும்போது சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடத்தான் செய்கிறது. புன்னகை பூக்கிறது! புத்துணர்ச்சி, தென்றலெனக் குளுமையாக வீசுகிறது!

ஆனால்! ஆனால்! இந்த மகிழ்ச்சி நீடிப்பதில்லையே! நிலைத்து நிற்பதில்லையே!

புதுப்பானை — புத்தாடை — புதுப் பொங்கல் — புன்னகை தவழ் குடும்பங்கள் — தமிழ்நாட்டில் எல்லா

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலுமா? இல்லையே! ஒரு பகுதி மக்கள் இன்று நேற்றல்ல; நீண்ட நெடுங்காலமாக நீள் விழிகள் நனைந்திடப் பொங்கலன்று சுருண்டு கிடக்கிற காட்சிகளும் தொடர்கின்றனவே!

கசந்துபோன அவர் தம் வாழ்வில் கரும்பு எங்கே? கற்கண்டுத் தேன்பாகுதான் எங்கே? பூனை படுத்துறங்கும் அடுப்பில் புதுப்பானை வைத்துப் பொங்கலிடும் திருவிழாதான் எங்கே?

அவர்தம் இன்னலைப் போக்கிய பிறகன்றோ — கன்னல் சுவைத்திடும்! கற்கண்டு இனித்திடும்!

பெரும்பகுதி மக்கள் உழைக்கின்றனர் — ஆனால் வாழ்வில்லை! வயிறு பிழைக்கின்றனர்; அவ்வளவுதான்!

அவர்களும் கலகலவெனச் சிரித்து — கணீர் கணீர் எனப் பொங்கல் வாழ்த்திசைத்து — அவர்தம் குடும்பங்களும் குதூகலத்தில் ஆழ்ந்திடும் அந்தநாள் தானே — தமிழக முழுவதும் மகிழ்ச்சி தழைத்திடும் திருநாளாக இருந்திட இயலும்!

கதிருடன் எழுந்து கழனியை நாடி காலை முதல் மாலை வரை பாடுபடும் உழவர்க்கு விழா என்கிறோம்! ஏதோ, கடமைக்கு எடுக்கும் விழா என்றுதான் உழவர் பலர் கருதுகின்றனரேயன்றி களிப்பிலாடும் உணர்வு அவர்தம் மனைகளில் பட்டுப் போய்த்தானே கிடக்கிறது.

தமிழர்க்கு விழா என்றும் தைத்திருநாள் என்றும் புகழ்கிறோம்! பிறமொழி ஆதிக்கப் பெருவெள்ளத்தில் தமிழ்மொழி வீழ்ந்திடாது காப்பாற்றப் பட்டால்தானே; தமிழுக்கு விழா எடுக்க முடியும் தொடர்ந்து' தமிழ் விழா எடுக்கத் தமிழ் விழாது இருக்க வேண்டுமல்லவா?

இன்றென்ன நிலை? ''கட்டாயமில்லை'' என்ற கணக்கற்ற உறுதிமொழிகளையும் கடந்து மூன்றாண்டுக்காலமாக, இந்தி நுழைவு தமிழகத்தில் எல்லாப் பக்கங்களிலும் நடைபெறுங் கொடுமையைக் காணுகிறோமே!

சமதர்மம் மக்களுக்குக் கிடைத்தால்தான் ''எங்கும் பொங்கல் இனிது பொங்குக'' என்ற வார்த்தைக்குப் பொருள் இருக்க முடியும்!

சமத்துவம் மொழிகளிடையே ஏற்பட்டால்தான் தமிழுக்குத் திருநாள் — எனவே இது தமிழர் திருநாள் எனக் கூறுவதற்கு அர்த்தமிருக்கும்!

பொங்கல் நாளில் இந்த உணர்வினைப் பெறுவோம்!

'இல்லாதான்' என்று என்னைப் படைத்தது யார்? இறைவனல்ல! இங்குள்ள பொல்லாதார் செய்திட்ட அரும்பணிதான் அது' இந்த உண்மையை உணர்ந்தோர் பொங்கியெழுந்து பெரும் புரட்சிகள் விளைத்த நாடுகள் உண்டு நானிலத்தில்!

பிரளயம் அதுபோல் ஏற்படுவதற்கு முன்பு, பேரரசை நடாத்துவோர் பிற்போக்குச் சக்திகளிடமிருந்து விடுபட்டு முற்போக்குச் சிந்தனையில் நாட்டம் கொண்டிட வேண்டும். மூப்பதுக்குமேல் ஆண்டுகள் ஒன்றிரண்டு உருண்டும் சுதந்திரச் சுவையை முழுமையாக அனுபவிக்கவில்லை இந்தப் பெருநாடு!

அதில் கவனம் காட்டுவதற்குப் பதிலாகப் பிற மொழிகளைக் காலில் போட்டு மிதிக்கத் திட்டம் தீட்டுகின்றார்!

பொதுவுடைமை பூத்துக் குலுங்கிட இத்தனை ஆண்டுகள் மத்தியப் பேரரசு ஆர்வம் காட்டியிருக்க வேண்டும்! மாறாக, பொது மொழி எது? எனக் கேட்டு; அது இந்திதான் என்பதிலன்றோ தனி அக்கறை செலுத்துகின்றது?

தேவைதானா? நாற்பதாண்டுகளாகக் கேட்கிறோம்—இப்போதும் கேட்கிறோம். 1965-ல் அண்ணா வகுத்த போர்முறையைப் பின்பற்றி அணி வகுக்கிறோம்'

பரந்து கிடக்கும் இந்த நாட்டில் நாம் ஒரு பழம்பெரும் தேசீய இனம்! பல தேசீய இனங்கள் — பல மொழிகள் — உள்ள நாடு இது! அவர்தம் உணர்ச்சிகளையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு; இந்திக்கு முடிசூட்ட இத்துணைத் துடிப்பு ஏன்?

உலையில் அரிசி கொதிக்கிறதோ இல்லையோ; பொங்கலன்று உள்ளத்தில் பொங்க வேண்டியது — மக்களுக்குத் தேவையான சமதர்மச் சிந்தனை! மொழிகளுக்கிடையே சமத்துவம் தேவையென்ற உரிமை உணர்வு!

''என் தமிழ்மொழியும் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகும் வரையில் நான் திருப்தி கொள்ளமாட்டேன்''

என்று அறிவித்தாரே அண்ணா; அந்தக் குறிக்கோளை அடையும் எழுச்சியும் இணைந்து பொங்கட்டும் இந்த நாளில்!

அன்புள்ள
அண்ணா

தமிழனே நீ தாழ்ந்தது ஏனடா?

முரசொலி மாறன்

தமிழனே நீ தாழ்ந்தது ஏனடா?
தரணியில் நீயே முதற்குடி மகனடா!
தமிழனே...
உனக்கென உள்ளது உயர்தனிச் செம்மொழி!
உலகினில் அதற்கிணை உள்ளது எம்மொழி?
கணக்கிலா இலக்கியம் கண்டதும் உன்மொழி
கரைகண்ட இலக்கணம் கொண்டதும் அம்மொழி!
தமிழனே...
வாழ்வுக்கே இலக்கணம் வகுத்தவன் நீயே'
வளர்கலை அனைத்தையும் தொகுத்தவன் நீயே!
தாழ்விலாக் கல்வியை விரித்தவன் நீயே!
தனக்கென முத்திரை பொறித்தவன் நீயே!
தமிழனே...
வீரமும் காதலும் கலந்ததுன் வாழ்க்கை!
வெற்றியும் புகழும் தணியாத வேட்கை!
ஈரமும் ஈகையும் சுரந்திடும் நெஞ்சம்!
என்றென்றும் வாழ்வில் இன்பமே கொஞ்சும்
தமிழனே...





மக்கள் ஆட்சியும் ஆட்சி மொழியும்



பல்லாண்டுகளாகவே இந்தியாவின் மத்திய ஆட்சி மொழி பற்றி நாட்டு மக்கள் எல்லோரும் கற்றவரும் கல்லாதவரும், அரசியல் பற்றுடையோரும், அரசாங்கப் பணி புரிவோரும், கல்வித் துறையினரும் ஆழ்ந்த சுவலோடு எண்ணத் தலைப்பட்டுள்ளனர். உரிமை பெற்றஒரு பரந்த துணைக் கண்டத்தின் மக்கள், அந்த உரிமையை நுகரத் தொடங்கி, ஆட்சிஉரிமை தமது என்னும்தெளிவுபெற்ற பின் அந்த ஆட்சி எப்படி இருக்கவேண்டும், எம்முறையில் நிகழ வேண்டும். எந்த மொழியை ஆட்சி நிருவாக மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணுவது இயற்கையேயாகும் நீண்ட தொலைவிலிருந்து வந்து ஆங்கிலேயரைப் போன்று நாட்டு மக்களோடுநெருக்கங்கொள்ள முடியாத அந்நியர் ஆட்சி நடந்தபோது, விடுதலை வேட்கை மட்டுமே மிகுந்து உரிமைத் தெளிவு ஏற்படாத நிலையில் ஆட்சிமொழிபற்றிய கருத்துக்களைத் தெளிவாக மக்கள் எண்ணிப் பார்ப்பது கடினமேயாகும். ஆனால் ஆட்சி உரிமை ஏற்பட்டதன் விளைவாக குடியாட்சி நெறிவளர்வதன் பயனாக ஆட்சிமொழி பற்றிய சிந்தனை, மக்களிடையே எழத்தான் செய்யும். அப்படி எழுகின்ற இன்றைய நிலையில் இந்திய ஆட்சிமொழி பற்றிய பழைய எண்ணங்களையும், முன்னுள் முடிவுகளையும் அவை அரசியல் சட்டத்திலே இடம் பெறச் செய்யப்பட்டுவிட்ட முடிவானாலுங்கூட அவற்றை அடிமுதலே ஆராய்ந்து காண மற்பட வேண்டும். பலப்பல மொழி பேசும் நாட்டு மக்களிடம் கல்லெண்ணம் கொண்டவர்கள். ஆட்சிமொழி பற்றி மறுபரிசீலனை செய்ய முன்வர வேண்டும்

'தாய் மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்று' என்பது அன்றும் இன்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஓர் உண்மை. உடம்பு வாழ்வது நிலத்திலே என்றால், உள்ளம்வாழ்வதுமொழியிலே. 'மொழி' இல்லாத மக்கள் இல்லை அம்மொழிகொண்டே அவர்கள் பிறரால் அறியப்படுகின்றனர் மொழிதான் அவர்களது அன்றாட வாழ்க்கையை மட்டுமின்றி, அவர் தம் முன்னோரோடு அவர்கட்குள்ள உரிமைத் தொடர்பை வரலாற்றுப் பெருமையை நிலைபெறச் செய்கிறது. சமுதாயத்தின் கண்களாகத் தாய்மொழியே விடம் பெறுகிறது. எனவே, தாய் நாட்டிடம் பற்றுஅரும்பவளரத் தாய்மொழியே கருவியாகிறது. விளக்கம் வேண்டுவதில்லை

அத்தகு தாய்மொழியை ஒட்டித் தோன்றும் இயற்கை உணர்ச்சிகளை, உரிமை வேட்கையை மதிக்காது எந்த மொழிச் சிக்கலுக்கும் தீர்வு காண முடியாது, காணினும் அது நிலைபெற முடியாது.

இந்தியாவில் பலமொழி நாகரிகம் கலை பண்பாடுடைய மக்களையும் இணைத்துஅரசியல் முறையால் ஒரு மத்திய ஆட்சி ஏற்பட்டுள்ளது. மத்தியஆட்சி ஒன்று என்பதாலும், அதன் பல்வேறு பகுதிகளான மாநிலங்களிடையே ஒற்றுமை காக்கப்பட வேண்டும், இணைப்பு நிலைக்கச் செய்யப்பட வேண்டும் என்பதாலும். மக்களின் தாய்மொழி அடிப்படையில் ஏற்படும் உணர்ச்சிகளை மதிக்காமல் ஒதுக்கிவிட்டுஒற்றுமை காண முடியாது.

மக்களின் தாய்மொழிகளை மதிக்காமல் நாட்டுப்பற்றை ஊட்ட முடியாது என்பதை நாட்டு விடுதலை இயக்கத் தலைவர்கள் அறிந்திருந்ததால்தான் மொழிவழி மாநிலஅடிப்படையில் முதலில் காங்கிரசே பணியாற்ற முற்பட்டது. பின்னர் மொழிவழி மாநில அரசுகளும் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டனவாயின.

சில மொழிவழி மாநில அரசுகள் அமைக்கப்படுவது காலங் கடத்தப்பட்டபோது அந்தந்த மொழிபேசும் மக்கள் கொண்ட கொந்தளிப்பும், நடத்திய கிளர்ச்சிகளும் நாம் அறியாதனவல்ல.

எனவே — தாய்மொழி அடிப்படையில் — மாநில அரசுகள் அமைக்கப்படுவதில் இருந்த நியாயத்தை, தேவையை மத்திய ஆட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. அரசியல் சட்டமும் அதனை மதிக்கின்றது.

அடுத்து, ஒவ்வொரு மாநிலத்துக்குள்ளும் வாழும் பிற மொழி பேசும் மக்களும், சற்றே வேறுபட்ட கலாச்சார முடையவர்கள் ஒரு சுற்றுப் பிட்ட வட்டாரத்தின்மேல் இருப்பார்களானால் அவர்களுக்கென பல தனிச் சலுகைகளும், உரிமைப் பாதுகாப்புக்களும் வழங்கப்படுவதற்கு அரசியல் சட்டம் வழி செய்திருப்பது மட்டுமின்றி அவ்வாறே பல மாநிலங்களில் அளித்தும் இருக்கிறார்கள். ஒரு மாநிலத்துக்குள்ளேயே ஒரு சமூகம் சிறுபான்மையினராக இருந்தாலும், அவர்கள் மொழி கலாச்சாரப் பாதுகாப்புக் கிடைக்கச் சில தனிமுறைகள் ஏற்கப்படுகின்றனவெனில் மொழி அடிப்படையின் முக்கியத்துவம் விளங்காமற் போகாது.

எனவே, மத்திய ஆட்சி மொழி பற்றி எண்ணுவோர் மக்கள் பேசும் பல மொழிகள் அடிப்படையில்தான் அதைப் பற்றி ஆராய வேண்டும். இந்தியாவில் வாழும் எல்லா இன மொழி மக்களும், ஒத்த நிலையில் ஒரேஅளவு உரிமை வாய்ப்புக்களோடு வாழவேண்டும் என்னும் கொள்கையை ஏற்போர் அவர் தம் மொழிகளைச் சம நிலையில் வைத்து அவை செயல்படுவதற்கு வாய்ப்பு அளிப்பதன் மூலமாகத்தான் அதனை நிறைவேற்ற முடியும். மாறாக அந்த மொழிகளிலே ஒன்றை மட்டும் — (இந்தியை) ஆட்சிமொழியாக்குவது மற்ற மொழியினருக்குச் செய்யும் தவறேயாகும்.

இந்தியாவின் மொத்த நலனும் பாதுகாப்பும் இந்தியாவின் மத்திய ஆட்சியினாலேயே காக்கப்படும் என்பது உண்மையானாலும் இந்திய ஒரே மத்திய இணைப்பு கூட்டாட்சி கொண்டது என்ற அடிப்படையில் செய்யும் முயற்சி தான் பயன் தருமே தவிர ஒரே நாட்டு ஆட்சி, ஒரே மொழி ஆட்சி என்ற எண்ண அடிப்படையில் உருவாக்கப்படும் திட்டங்கள் வெற்றி யளிக்க மாட்டா.

எடுத்துக் காட்டாக - மாநில ஆட்சி. இவற்றையெல்லாம் இணைத்துப் பிணைத்து ஒரு வழிப்படுத்தி செயல்படுத்த லாமேயன்றி உருக்கி வார்த்துச் செய்த வெண்கலம்போல் உருவழித்து வடிவம் மாற்றி ஒரே உருக்காக ஆக்கிவிட முடியாது; ஆக்க முடன்றாலும் அது பயன் தராது. உலோகங்கள் சிலவற்றை உருக்க முடிகிறபோதே — அவற்றை ஒரு கலவை உலோகமாக — புதிய உலோகமாக ஆக்க முடிகிறது அதைப்போல பல மொழி பேசும் தனித்தனி நாகரிகம் பண்பாடுடைய மக்களின் தனிக்கலாச்சார அடையாளங்களை உருத்தெரியாமல் உருக்கி அழிக்க முடிந்தால்தான் இந்தியா முழுவதற்கும் ஒரேவகையான கலப்புக்கலைப் பண்பாட்டை உருவாக்கலாகும்.


அவ்வாறு ஒருமொழி பேசும் மக்களின் தனி அடையாளங்கள் அழியுமாறு உருத்தெரியாமல் ஆக்குவது விஞ்ஞான வளர்ச்சியற்ற பழங்காலத்தில் ஒரு வகையில் நிறைவேறி இருக்கலாம். இந்த நாட்களில் அப்படி ஒரு நோக்கம் எங்கேனும் தோன்றுமானால், அது சர்வாதிகாரக் கொடுங்கோன்மையையோ, காட்டுமிராண்டித்தனத்தையோ தான் வெளிப்படுத்துவதாகக் கருதப்படும்.

இந்தநாட்களில்ஒவ்வொரு மொழியும் கலாச்சாரமும்பிற மொழி தொடர்பால் ஒவ்வோர் அளவு மாற்றம் எய்தலாமேயன்றி, உருவழிந்து புது வடிவம் பெற்றிடல் இயலாது. இந்நிலையில், எந்த ஒருமொழி பேசும் மக்களாயினும் — அவர் தம் அடிப்படையான மொழி — கலாச்சார உரிமையை, அதன் மூலம் பெறலாகும் முழு உரிமை வாய்ப்பையும் எப்படிப்பட்ட அரசும் இறுதி வரையில் புறக்கணித்துவிட முடியாது.

எனவே — மத்திய ஆட்சி பல மொழி கொண்ட மக்களின் உரிமைகளை மதிக்கும் முறையில் — பல மொழிகளி

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)





பேரன்பு கொண்டோரே. பெரியோரே,
பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
ஒன்றெனக் கருதும் நல் உளம் செல்வங்காள்!
ஒரு வயிற்றில் பிறப்பதற்கு அவ்வயிற்றில் இடமில்லே
—அதனாலே
ஒருகோடி தாய் வயிற்றில் பிறந்திட்ட
—உடன்பிறப்புத் தமிழர்களே
அனைவர்க்கும் வழங்குகிறேன்
பொங்கற் புதுநாள் வாழ்த்துக்கள் ஏற்றிடுவீர்!

ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்
சிலம்பொலி கேட்குது
சிந்தையில் இனிக்குது
ஆயிரம் நிலவுகள் ஆயிரம் மாதர்கள்
ஆயிரம் கதிரவர் ஆயிரம் ஆடவர்
ஞாயிறு போற்றினர்
ஞாயிறு போற்றினர்
ஆயிரம் கோடியாய் ஆயினர் தமிழர்
பாயிரம் பலப்பல பாடினர் தமிழர்
ஞாயிறு போற்றியே கூடினர் பொங்கலில்
ஞாயிறு போற்றியே ஆடினர் பொங்கலில்
மாவிலே தோரணம் மஞ்சள் வாழை
கோயிலின் முரசம் கோலம் கண்டனர்.
பொங்கலோ பொங்கல்
பொங்கலோ பொங்கல்
குறிஞ்சி, முல்லே நெய்தல், மருதம், பாலேநிலமெனப்
பிரிந்து வாழினும் தமிழர் பண்பைப்
புரிந்து வாழ்ந்தனர்.
கல்தோன்றி மண்தோன்றுக் காலத்து
முன்தோன்றி மூத்தகுடி எனினும்
காடுகொன்று நாடாக்கக்
குளம் தொட்டு வளம் பெருக்க —கற்றனர் அன்னர்
வில்தோன்றும், தோள்களிலே —அது
வீரமே காட்டும்.
நெல்தோன்றும் வயல்களிலே — அது
வேளாண் திறத்தைக் காட்டும்
சொல்தோன்றம் புதிதாக—அது
மொழியின் வளத்தைக் காட்டும்.
எழுத்து, சொல், இரண்டே யன்றிப்
பழுத்த நல் தோல்காப்பியன் — தமிழர் தம்
செழிப்பு மிகுவாழ்வுக்கும்
தொகுத்தளித்தான் உலக்கண நூல்.
கொய்யாக்கனித் தமிழால் — குறள்
நெய்தான் உலகுக்கு வள்ளுவனும்
பெய்யாமழை பெய்ததுபோல் மகிழ்ச்சி
—கொள்வோம் அவன்

பொய்யா மொழிக் கவிகேட்டு;
சிலம்பும் வளையும் சீர் மேகலையும்
சிந்தாமணியுடை குண்டல கேசியும்
அன்னைத் தமிழின் அணிகளாய் உயின
அந்நாள் புலவர் ஆற்றிய பணிகளால்!

எத்துணே நூல்கள் எத்துணே புலவர்
கற்றுணர் மக்கள் உற்றுணர் பெட்டகம்
பெற்றுநம் தமிழர் வாழ்ந்தனர் அந்நாள்!
பழந்தமிழர் பெரு நூல்கள் நினைத்தவாறு
படுக்கையிலே சாய்ந்திருந்தேன் ஓர்நாள்...
பக்கமது நெருக்கமாகப் படுத்துக் கொண்டு
வெட்கமது ஒரு சிறிதும் இல்லாமல்
ஒருத்தி தழுவிக் கொண்டாள்.
அவளே.
அள்ளி அணேப்பதற்கு நான் முயலவில்லே என்றாலும்
தள்ளிவிட மனமில்லே; தழுவட்டும் என்றிருந்தேன்.
அதன் பின்னர் மற்றொருத்தி வந்தாள் --அவள்
வானவில் சதிராட்டக்காரி!
வானம்பாடியென இசை கூட்டும் மாயக்காரி!
என்ன இது? இருமங்கை — ஒரு படுக்கை
எனக் கேட்பீர்! பொறுத்திடுக.
முதலில் வந்தவள் பேர் தூக்கம்,
மற்றொருத்தி கனவு மங்கை,
அந்தக் கனவினிலே நான் கண்ட காட்சி யெலாம்
தமிழ்க் காட்சி! தமிழர் மாட்சி!
மன்றமொன்றில் இசைவாணன்
கீத மழை பொழிகின்றுள்



மக்கள் எல்லாம் மதுகுடித்த வண்டுபோல் மயங்குகின்றார்
மங்கலமாய் இசை நிகழ்ச்சி முடியும் போழ்தில்
மக்கள் சிலர் ஆர்வமுடன்மேலும் ''பத்தும்பாட்டு''ப்பாடு
என்றார்.
மலைத்துவிட்ட இசைவாணன், கனைத்துக் கொண்டு
''பாடுகின்றேன், மேற்கொண்டு
என்னதொகை தருவீர்'' என்றான்
வெடுக்கென ஓர் புலவன் எழுந்துநின்று விடையிறுத்தான்
''எட்டுத்தொகை'' தருவதாக!
இசைவாணன் புரிந்துகொண்டு, இஃதென்ன நியாயம்?


(தொடர்ச்சி அடுத்த பக்கம்)



இனவுணர்வுத் திருநாள்

(கலைஞர் கவிதை தொடர்ச்சி)

என்றன் பத்துப்பாட்டுக்கு எட்டுத்தொகையா?
அஃதெனக்கு 'குறுந்தொகை'' என்று சொன்னேன்.
ஓகோ, 'ஐங்குறுநூறு' வேண்டுமோ எனக்
—கடிந்தார் புலவர்.
நூறு வேண்டேன்—அதனைத் நீண்டேன். தீண்டேன்.
நானூறு தருவீரோ புலவீரறே! அதுவும்



அகத்தில் நானூறு — புறத்தில் நானூறு
என்று வள்ளுவனன் இசையில் வல்லவன்.
புறத்தில் நானூறு அகத்தில் நானூறு
புரிந்துகொண்டார் புலவர் பெருமகன்
''புறநானூறு'' கையில் நானூறு
''அகநானூறு'' கறுப்பில் நானூறு
பொல்லாச் செயல் அது; பொல்லார் செயல் அது!
வருமான வரிதனை ஏய்ப்போர் செயல் அது.
காய்த்திருக்கும் கனிமரம் வெட்டும்
கோடரிக் காம்பின் செயல் அது
அதனலே,
பாட்டுக்குத் தொகை கேட்கும் பேச்சுதனை விட்டொழிப்பீர்
பசும்பால் தருவோம் தொண்டைக்கு; தேவையெனில்
மூப்பாலே தருவோம் பாடிடுக என்று சொன்னார்.
மூப்பால் தருவதாக மொழிந்திட்ட புலவரய்யா!
பொருட்பால் ஒன்றுக்க லி என் தொண்டை பேசும்
என்று இசைவாணன் எழுந்துவிட்டான்
நீண்டதுயில் கலைந்தெழுந்தேன்;
'நெடுநல் வாடை'' பட்டதாலே
கனவன் நினைப்பெல்லாம் நெஞ்சில்
கரும்பாக இனித்ததம்மா;
தமிழ் நினைத்து, இதயத்தைத்
தமிழால் நனைத்து
இமிழ் கடலில் ஆடிக்கம் செலுத்தியவர் நம்தமிழர்
உமிழ்நீரை வாயில் தேக்கி
ஊத்தைப் பல் துலக்கிவிட்டு மீண்டும்
உடலுக்குள் கொப்புளித்து விழுங்குதல் போல்
அமிழ்தான இனப்பண்பு கலைமாண்பு, இலக்கியங்கள்
— மாய்ப்பதற்குத்
தமிழர்களே ஒப்பிவிட்டார் — கெடுட
உமிழ்நீரை உடலுக்குள் துப்பிவிட்டார்
அழுக்குச் சேர்ந்த குடலை வெளுத்திட வேண்டும்
அதற்கு மருந்தெனும் நல்ல சலவைத் தொழிலாளி வேண்டும்
முழுச்சுப் போடுவதால் உடல்புறத் தூய்மையாகும்
உள் தூய்மை ஒளடதத்தால் —
உளத் தூய்மை வாய்மையாலே ஆகும்.
இந்த வாய்மைக்கு வழிவைத்து
வைதீகக் கோட்டைக்கு வெடிவைத்து
அறுபது ஆண்டுகள் அஞ்சாது போரிட்டார்
நம் அண்ணலின் தலைவர் பெரியார்!
அவர் போட்ட அடிப்படிலேதான்
இன்று
பொங்கல் பொங்குது,
போலிகள் மங்குது,
பொய்மைகள் எரியுது
பத்துத் தலையுடையள் இருபது கையுடையள்
கத்துக் கடல் வாயுடையாள் கண்கள் பல நூறுடையள்
மாட்டு முகமுடையள் மனித உடலுடையள்
மகர சங்கராந்தெனும் பேருடையள்
மலை போல மூக்குடையள்
என எழுந்த ஏமாற்றப் புனைந்த கதை
முடிமுன்னே பாம்புப்பால மடைந்திழிந்து
ஈரோட்டு முழக்கத்தால் மாய்ந்ததன்றோ!
அதைத் தொடர்ந்து நம் அண்ணா
இன உணர்வுத் திருநாளாய் பொங்கல் கண்டார்
ஏர் உழவர் பெருநாளாய்ப் பொங்கல் கண்டார்!

ஆமை புகுந்த வீடும்...?

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

"ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது" என்பது நம் தமிழ் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று. அமீனா புகுந்த வீடு உருப்படாமற் போவது பலரும் நன்கறிந்த உண்மை ஆனால், ஆமை புகுந்த வீடு எவ்வாறு உருப்படாமற் போகும்? என்ற ஐயப்பாடு எவர்க்கும் எளிதாகவே தோன்றும்!

ஆமை யானையைப்போன்ற பெரிய உருவமுடையதுமல்ல; சிங்கம் ஒலிப்பது போன்ற பேரொலியையும் அது ஒலிப்பதில்லை. பாம்புக்கு இருப்பது போன்ற நச்சும் அதற்கில்லை. நான்கு குறுகிய கால்களையும் மறைத்துக் கொள்ளும் தலையையுமுடைய ஒரு சிறிய உயிர்! இது புகுந்தால் அந்த வீடு எவ்வாறு பாழாகும்? என்பது நியாயமான கேள்வியே. இந்த ஐயப்பாட்டை நீக்கப் பேரும் புகழும் பெற்ற கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் ஒரு புதிய பொருளைக் காட்டினார். அந்த ஆமை நம் கண்ணுக்குத் தெரியும் ஆமையல்ல; காண முடியாத அமையாகும் அதன் பெயர் பொறுமை என்பதே.

ஆமை என்றதும் மக்கள் தாமதையும்நினைக்கிறார்கள்: அது தவறு. இது ஆற்றுமை.

இந்த ஆமை வாழும் ஆறு எந்த ஆறு என்று கேட்பீர்கள்? அது விண்ணாறும் அல்ல, வெட்டாறுமல்ல: பாலாறு மல்ல; பெரியாறுமல்ல. இது வாழும் ஆறு அழுக்காறு ஆகும்.

பிற ஆறுகளின் இரு கரைகளிலும் கோட்டுப்பூ கொடிப்பூ ஆகிய பல பூக்கள் பூக்கும், இந்த ஆற்றின் இரு கரைகளிலும் எரிப்பு ஒன்று மட்டுமே பூக்கும்

ஆற்றுமை என்பதும், அழுக்காறு என்பதும், எரிப்பு என்பதும் பொறுமை என்பதைக் குறிக்கும் சொற்களேயாம்.

இவற்றைக் கொண்டு பார்க்கும்பொழுது 'அமீனா புகுந்த வீடும், பொறுமை புகுத்த வீடும் உருப்படாது என்பதே பழமொழியின் உண்மைப் பொருளாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

ஐயோ பாவம்! பொறுமை புகுந்த வீடுமட்டுமா? அது புகுந்த தெருவும், சிற்றூரும் நகரமும் நாடுங்கூட கேடு அடையும் என்றே தோன்றுகிறது.

எத்தனையோ மன்னர்களின் உள்ளத்தில் இவ் ஆமை புகுந்து அவர்களின் உடலைச் சுட்டுச் சாம்பராக்கி அவர்களின் அரண்மனைகளைத் தவிடு பொடியாக்கி, அவர்களின் நாடுகளையும் பாழாக்கி வந்திருக்கிறது.

எத்தனையோ இயக்கங்களில் இவ் ஆமை புகுந்து, அவற்றின் வளர்ச்சிகளைத் தடைப்படுத்தி, நோக்கங்களை நிறைவேற வொட்டாமல் தடுத்து, சிரித்து மகிழ்ந்து செழித்து வளர்ந்து, வாழ்ந்து வந்திருக்கிறது.

எத்தனையோ சமூகங்களுக்குள் புகுந்து, அச்சமூகங்களின் அறிவைப் பாழாக்கி அவர்களை முன்னேறிச் செல்ல முடியாத அளவுக்கு முடமாக்கி, அடுத்தவருக்கு அடிமைப் படுத்தி, அழுது, அழுது மடியச் செய்து ஆனந்தக் கூத்தாடி வந்திருக்கிறது.

எத்தனையோ மந்திரிசபைகளுக்குள் புகுந்து, அவர்களின் நாட்டுப் பற்றையெல்லாம் வீட்டுப் பற்றுக்கி, ஆள் மீது ஆளைத் தூக்கி அடித்து அண்டிக்கொரு முறை ஆள் மாறச் செய்து எவரையும் உட்கார்ந்து உருவான வேலைகளைச் செய்ய வொட்டாமல் விரட்டி அடித்துக்கொண்டே வாழ்ந்து வந்திருக்கிறது.

முடிவாகக் கூறுமிடத்து



இந்த ஆமை புகுந்த வீடு எல்லாம் இடமெல்லாம் குட்டிச் சுவராக ஆகிவருகின்றன என்றே கூறவேண்டியிருக்கிறது.

நாடோ, நகரமோ, வீடோ, வியாபாரமோ இயக்கமோ, சமூகமோ சங்கமோ, வேறு எதுவோ, அது கூத்து நிற்க வேண்டுமானால் அது இந்த ஆமை நுழைவதற்குச் சிறிதும் இடங் கொடாதிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது

இவ்வாமையின் உயிர் நிலையை நீங்கள் நன்கு அறிந்து கொள்ளலாம். இது பேராசைத் தண்ணீரில் வாழுமே தவிரப் பெருந்தன்மைத் தரையிலே வாழாது, ஆமை தரைக்கு வந்தால் மடியும்; பொறுமை பெருந்தன்மைக்கு வந்தால் மடியும்.

ஆகவே நாட்டின் நலனைக் கருதும் மக்கள் தங்களின் அரசியல் கட்சிகளில் இவ் ஆமை தோன்றுமையையும் தோன்றின் ஒருக்க இடமில்லாமையையும்செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

நாட்டுப் பற்றுள்ள அறிஞர்கள் மக்களைச் சீர்திருத்தப் புறப்படுமுன்னே முதலில் தங்களைச் சீர் திருத்திக் கொண்டு, இவ் ஆமைக்குச் சிறிதும் இடங்கொடாமல் இருந்து கொண்டு, பிறருக்கும் இவ் ஆமையின் கேடுமைகளை எழுத்தாலும், சொல்லாலும் எடுத்து விளக்கி மக்களை எச்சரிக்கையோடு வாழச்செய்வதை ஒரு முதன்மையான தொண்டாகக் கொள்ள வேண்டும்.

இவ் ஆமையை நேரடியாக ஒழிக்க முடியாவிட்டால் குறுக்கு வழியாலும் ஒழிக்கலாம்; அது வைரத்தை வைரத்தால் அறுப்பது போல, ஆமையால் ஆமையால் அழிப்பதாகும். இந்த ஆமைக்கு சில பகையாமைகளும் உள்ளன.

அவை:

இம்மையினில் நிமைதனை எண்ணுமை: எக்காலும் பொய்மைதனைச்சொல்லாமை வஞ்சத்தாற் பிறர் பொருளை கவராமை வலுருத்தும் நெறிபுடைமை தவருமை களைத்தாள்தொடுமையினைச்செய்யாமை: கண்ணற்றோர்உரிமைகளைப் பறியாதை ஆகிய பகைமைகளேயாம்

இத்தகைய பகை ஆமைகள் இருக்கும் குளத்தை நீங்கள் தேடிச்செல்லவேண்டாம். நானே காட்டிவிடுகிறேன். இவ் ஆமை எவரையும் பகையாமை என்ற அழகான உள்ளத்தில் தான் வாழும்.

தீண்டாமைப் படுகுழியில் பிறந்து பொருமைப் புழுச் சேற்றில் புரண்டு அநியாயச் செயல்களில் உருண்டு ஆதரவு இல்லாமல் அழிந்த மக்களை அதிகமாகக் கொண்ட நம் தமிழ்நாடு சுதந்திரம் பெற்றும் பொறுமையாற் சுழன்று அல்லலுற்று அவதிப்படும் நம் தமிழ் நாடுவாழவேண்டாமா? வாழவேண்டும்என்றால்அதற்கு வழி ஒன்றே உண்டு

அது இந்நாட்டில் சீர்திருத்தக் குளம் ஒன்றை வெட்டி, அதனுள் நீந்தமிழ் ஊற்றை தேக்கி, நல்லொழுக்க நீர் நிறையச் செய்து எவரும் நன்மை விளை மலர்தேயே விரும்பித் பார் முழுவதும் அந் நீரைப் பருக அதனுள் பகை ஆமைதனை வளர்த்து வாழ்வோம் என்பதே தகாகும்வாழட்டும் பகையாமை! அழியட்டும் பொறுமை

மாந்தன் கற்பனை

கற்பனை மிக்கான் உலகில் – அதனால்
கடவுளைத் தந்தான் சிலையில்
அற்புதம் கூறினன் கதையில் – நல்ல
அறிவை மறந்தான் தரையில்

கல்வியைக் கற்பனைக் கண்ணால் – கண்டு
கலைமகள் என்றவன் சொன்னான்
பல்வகைச் செல்வமும் கண்டான் – தெய்வப்
பற்றுல் திருமகள் என்றான்

தோற்றமும் வாழ்தலும் கண்டான் – செத்துத்
தொலைந்திடும் ஒடுக்கமும் கண்டான்
நாட்படு கற்பனை கொண்டான் – மூன்றும்
நான்முகன் மாலரன் என்றான்

பூமியும் தேவியில் சேரும் – தோற்றப்
பொலிவொரு மன்மதன் ஆகும்
சாமான் றெதையும் கூறும் – மாந்தன்
சாற்றிய கற்பனை பாரும்

கவியரசு முடியரசன்

வானுயர் கோபுரம் கட்டிக் – கோவில்
வாயிலில் வந்துகை கட்டித்
தானொரு மண்குடில் கட்டி – வாழ்ந்து
தலையெழுத் தென்றனன் மட்டி

அருள்தரும் ஆண்டவன் என்றான் – மக்கள்
அன்பினை நெஞ்சினில் கொன்றான்
பொருள்தரும் என்றுபு கன்றான் – உழைக்கும்
பொழுதெலாம் சோம்பலில் நின்றான்

குற்றங்கள் எல்லாம் புரிவான் – சுற்றிக்
கோவிலி னுள்ளே வருவான்
முற்றிய தேங்காய் தருவான் பாலும்
மொய்த்துள பூவும் சொரிவான்

அத்தனைப் பாவமும் தீரும் – என்றே
அங்கவன் நம்பியே கூறும்
பித்தனைப் போலவல் லாரும் – செய்தால்
பிழைகள் எப்படித் தீரும்?

தொலைபேசி எண்கள்: 33213 இல்லம் 31922
தரமான நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை, மதுரை 11
தனிச்சிறப்புச் சீலைப்பிசுக்கத்தினாலும், அதிரசம், இனிப்புச் சேவு, பக்குவான், முந்திரி, முறுக்கு, கடலை, நெய்வாளி வடை மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி
72, அழகர்கோவில் சாலை, 72, டவுன்ஹால் ரோடு, மதுரை.

உரிமையாளர்
பே. தேவசகாயம்

உழைப்பின் பெருமை பொங்கல்

எஸ்.ஜே.சாதிக் பாட்சா
பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.,
கழகப் பொதுச்செயலாளர்.

பொங்கல் நன்னாளில்
எங்கள் இதயங்கனிந்த வாழ்த்து

ஆ. ச. இலட்சுமிபதி
23, புதுப்பேட்டைத்தெரு ஆலந்தூர்

பொங்கல் விழா தமிழ்ப் பெருநாட்டின் ஒப்பற்றதலிப் பெருவிழா! தமிழகத்தில் விழாக்களுக்குப் பஞ்சம் என்பதே கிடையாது. நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், திங்களுக்குத் திங்கள், ஆண்டுக்கு ஆண்டு என விழாக்கள் பலப்பல பல்வேறு உருவிலே நடைபெறுகிற நாடு நமது நாடு. அவ்விழாக்களைப்பற்றி வரிசைப்படுத்தி எழுதின் அவற்றின் பட்டியலுக்கே ஏடு போதாது; அத்தனை விழாக்கள் நமது நாட்டிலே!



ஆனால் அந்த விழாக்கள் பெரும்பாலும் மத விழாக்களாக இருந்திடக் காணலாம். ஏதோ சில, மட்டும் மாறுபட்ட சிந்தனையின் அடிப்படையில் எழுந்த விழாக்களாக இருந்திடக் காணலாம். இவ்வாறான சிந்தனைக்கு அப்பாற்பட்டு தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தமிழர்களிடையே இருக்கிற மத, சாதிச் சிந்தனைக்கு அப்பாற்பட்டு எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இல்லங்கள்தோறும் கொண்டாடப்படுகிற பெருவிழா பொங்கல் விழா ஒன்று தான். அதனால்தான் மற்றைய விழாக்களுக்கு இல்லாத சிறும் சிறப்பும், பீடும் பெருமையும் இவ்விழாவிற்கு இருந்திடக் காண்கிறோம்.

பொங்கலோ பொங்கல்! என்னும்பொழுது உள்ளத்திலே பொங்கும் மகிழ்வு சொல்லும் தரமுடையதா? சொல்லும் தரத்திற்கும் அப்பாற்பட்ட இன்ப உணர்வு நம்மை ஈர்த்துக் காண்கிறோம். அதற்குக் காரணம் என்னவென ஆராயக்கூட அல்ல, எண்ணிப்பார்த்தாலே போதும் புரியும்.

உலகில் உள்ள அனைத்துத் தொழிலுக்கும், செயலுக்கும் அடிப்படையாக இருப்பது உழவுத் தொழில். அந்த உழவுத்தொழிலே செய்யும்உழவன் வான்புகழ் வள்ளுவர்கூற்றுபடி "கை மடங்கினுல்" உலகம் இல்லை அதனை உணர்ந்த நாம் இவ்விழாவை பொங்கல் விழாவாகக் கொண்டாடுவதால் இன்ப உணர்வு எழுகிறது. நம்மை அறியாதஇனிய இன்ப உணர்வு எழுகிறது என்று கூறிடத் தோன்றும் சிலருக்கு. அதுவும், உண்மைதான். ஆனாலும் நம்மைப் போன்ற இன உணர்வும், மொழிஉணர்வும், நாட்டுணர்வும் கொண்டவர்கட்கு அதனினும் மேலான ஒரு காரணம். தலைமைத் தொழிலான உழவுத் தொழிலைக் கொண்டாடுகிறோம்.

பொங்கலோ பொங்கல்! எனும்போது இன்பநாதம் எதிலிருந்து எழுவது? இனிய தமிழிலிருந்து எழுவது அல்லவா? அந்த இனிய தமிழ் நமது தாய் மொழியல்லவா? அது தாய்த் தமிழின் ஒலி அல்லவா? அந்தத் தமிழுக்கு இன்று ஆபத்துவந்திருக்கிறது, மறைமுகமாக; "எல்லாரும் வாருங்கள் நாட்டினரே" என்று அழைக்க வேண்டியுள்ளது.

அவ்வழைப்பை 1938-லே பெரியார் விடுத்தார் தமிழர்களுக்கு. அதே அழைப்பை 1952 லே பேரறிஞர் அண்ணா விடுத்தார். இன்று, அவ் இருவரின் நிழலாகவும் நிஜமாகவும் இருக்கிற நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் விடுக்கிறார்கள். அழைப்பு விடும் இவ்வேளையில் பொங்கற் பெண்ணுக்கு நம்மை நோக்கித்தை தை யென வருகிறாள். அவள் பாதம் சதிமிதிக்க எழும் சதங்கை யொலி தை, தை யெனும் அவ்வொலி நமக்கெல்லாம் தமிழ்! தமிழ்! என்பதுபோல் அன்றே இனிய ஒலி எழுப்புகிறது. ஒரு புறம் தலைவரின் அழைப்பு, மறு புறம் பொங்கலோ பொங்கல் எனும் தமிழொலி. இரண்டும் தமிழொலிகள். உள்ளத்தில் உணர்வு பொங்காமல் இருக்குமா? உணர்வு பொங்காதவன் தமிழனு? அதிலும் தலைவரின் அழைப்பைக் கேட்ட பிறகும்.

எனவேதான், பொங்கலோ பொங்கல்! எனும் தமிழ்ப் பொங்கலோடு அதோ பார் களம்! இதோ கேள் எனது ஆணை' என்னும் தலைவரின் தமிழ் முழக்கம். இரண்டும் இவ்வாண்டு இணைந்து கேட்கிறது. பொங்கல் விழா வரும் போகும் என்ற நிலை போய்; இவ்வாண்டு பொங்கல் விழா உணர்வுள்ள இதயங்கள் எல்லாம் பொங்குகின்ற உணர்ச்சிப் பொங்கல் விழா! உணர்ச்சியோ தமிழுணர்ச்சி தமிழைக் காக்க எழும் உணர்ச்சி, தமிழைக் காக்க நமக்கு மேலும் ஒரு வாய்ப்புக் கிட்டப் போகிறது அதற்காக நம்மையே நாம் விலையாகக் கொடுக்கக் கூடத் தயங்கக் கூடாது என்னும் எண்ணம் உணர்ச்சி வடிவம் பெற்று உருவாகும் போது. அதிலே பொங்கும் இன்பம்! எண்ணிப் பார்த்துப் பார்த்துச் செயலுக்கு தயாராவோருக்குத் தான் புரியும். பிறருக்கு; "We for Hindi" என்போருக்குப் புரியாது: அதிலும் ஆணையிட வேண்டிய தலைவர் ஆணையிட்ட பிறகு அவ்வாணைக்கு நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்கிறோம் என்னும்போது எழும் இன்ப உணர்ச்சியை எந்த உவமைகளால் விளக்குவது? நம்மை நாமேஒப்படைத்துக்கொள்வோம்! உணர்ந்து கொள்வோம். 'தாய் தன் மழலைனெடு ஆடிய சுகத்தைச் சொல்லுமாறு வாங்கண்?" என்பதல்லவா சித்தர் வாக்கு.

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்

தரமான வண்ண அச்சு வேலைகளுக்கு

லோட்டஸ்
ஆப்செட் பிரஸ்

9 லோட்டஸ் இராமசாமி தெரு,
இராயபுரம்; சென்னை – 600013
தொலைபேசி: 553422

பொங்கல் நன்னாளில் வாடிக்கையாளருக்கு எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

★

ரூபன் அன் கோ
102, பஜார் ரோடு
பல்லாவரம் சென்னை – 600043
போன்: 45483
தரமுள்ள வீட்டு உபயோக பொருள்களின் சிறப்புமிகு விற்பனை

Phone: 48206
TNGST 93934/76-77
CST 14687/76-77

செந்தில் டிரேடர்ஸ்

[★]

பொட்டு, மாவு, நவீனாலிய வியாபாரம்
6, அப்துல் ரசாக் தெரு, தாம்பரம், சென்னை—45

தி.மு.க. அலுவலகம் கழகத் தலைவர் கலைஞர் அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 கற்பகாம்பாள் செட்டித்தெரு, இராயபுரம் ... ... 51) திறக்கப்பட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம். தண்டம் 508 அண்ணாசாலை. தேனாம்பேட்டை சென்னை—600018 தொலைபேசி: 44100

அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்

உங்கள் பணத்தைப் பன்மடங்கு பெருக்க ஒரு குறுக்கு வழி: அதைப்பற்றியே மறந்து விடுங்கள்!



மறந்துவிடுவதா! எப்படி? எங்களது ரீ இன்வெஸ்ட்மெண்ட் திட்டக் கணக்கில் ஒன்று முதல் 10 ஆண்டுகள் வரை முதலீடு செய்யும் உங்கள் பணம் வட்டிக்குமேல் வட்டியாக பெற்றுக் கொண்டே வளர்ந்து வரும்.

இத்திட்டத்தில் 3000 ரூபாயை முதலீடு செய்துவிட்டு பத்து ஆண்டுகளுக்கு அதைப் பற்றியே மறந்து விடுங்கள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு உங்கள் பணம் ரூ 7306.50 -ஆகப் பெருகியிருப் பதைக் காண்பீர்கள் — அதாவது, கிட்டத்தட்ட இரண்டரை மடங்காக. இதுபோதுமே. உங்கள் குழந்தைகளின் படிப்பிற்காகவோ, உங்கள் செல்வ மகளின் திருமணத்திற்காகவோ அல்லது உங்கள் வியாபாரத்திற்காகவோ இப்பணம் கைகொடுத்து உதவுமே!

குறுகிய அல்லது நீண்டகால அளவு — எந்த அளவிலும் ரீ இன்வெஸ்ட்மெண்ட் திட்டம் உங்கள் பணம் பன்மடங்கு வளருவதற்கு வழி செய்கிறது.

இன்றே எங்களது ரீ இன்வெஸ்ட்மெண்ட் திட்டத்தில் உங்கள் பணத்தை முதலீடு செய்யுங்கள் — வட்டிக்கு மேல் வட்டி பெறுங்கள். உங்கள் பணமும் வளரும், உங்கள் செல்வநிலையும் பெருகும்.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள இந்தியன் பாங்க் கிளையை அணுகுங்கள்.

இந்தியன் பாங்க்
உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

ரீ இன்வெஸ்ட்மெண்ட் திட்டம்

18/2639

கேள்விக்கு என்ன பதில்

ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.பி.

கழகத் துணைப்பொதுச்செயலாளரி

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் எதிலும் எப்போதும் வள வளா கொள கொளா தான்.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டு—என்ற திட்டவட்டமான நிலை அவரிடம் இது வரை இல்லவே இல்லை.

திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஏனோதானோவென்று இருந்தால் அவர் எப்படி இருந்தாலு கவலை இல்லை.

ஆனால்

இன்று திரு எம். ஜி. ஆர். தமிழ் நாட்டின் முதலமைச்சர். அவரின் அசைவில் தமிழ் நாட்டு மக்களின் வாழ்வும் வளமும் அடங்கி இருக்கிற காரணத்தால்தான், அவர் பேச்சும் செயலும் "பச்சைக் கொடி" காட்டுவதுபோல் இருக்க வேண்டுமே தவிர. "மதில் மேல் பூனை" போல் காட்சி தரக் கூடாது.

"இந்தி ஆட்சி மொழி"ப் பிரச்னை இதர விஷயங்களைப் போன்றதல்ல

தமிழர்களுக்கு அடிமை வாழ்வா? அல்லது சம வாழ்வா?—என்ற சுதந்திர பிறப்புரிமைப் பிரச்னை!

இந்த அடிப்படை உண்மையை தந்தை பெரியார்... அறிஞர் அண்ணா வழியில் வந்த அனைவரும் உணர்ந்து, இன்றுநேற்று அல்ல, 1938 முதல் போராடி வருகின்றனர்.

இந்தமொழி உரிமைச்சுதந்திரப் போரில் ஒரு முடிவு காண முடியாதபடி, எதிரிகள் அவ்வப்போது வளைந்தும். நெளிந்தும், குனிந்தும், பணிந்தும் பாவனை காட்டி, போர் தொடுத்தோர் (யெரியார் அண்ணா வழியினர்) சோர்வடையட்டும்—என்ற எண்ணத்தில் நடந்து வருவதால், போர் தொடர்ந்து நடைபெறுமல், விட்டு விட்டு நடந்து வருகிறது.

இந்தி மொழியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் இலட்சியத்திலே மத்திய அரசில் திருமதி இந்திரா இருந்தாலும், திரு வாளர் மொரார்ஜி இருந்தாலும் மாறுபட்ட கருத்தே இல்லை.

ஆனால்—

இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியாவதை எதிர்ப்பதிலே—இந்தி பேசாத பகுதியில் உள்ள கட்சிகளிடையே ஒருமித்த கருத்து இல்லை.

இந்தி பேசாத பகுதியில் உள்ள கட்சிகளின் கருத்து எப்படியோ இருக்கட்டும்—தமிழ் நாட்டில் உள்ள இதர கட்சிகளின் கருத்துகள் கூட எப்படியோ இருக்கட்டும்.

தந்தை பெரியார் அண்ணா வழியில்வந்த கட்சிகளிடையே யாவது, இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாவதை எதிர்ப்பதிலே கருத்து ஒற்றுமை இருக்கிறதா?

பெரியார் அண்ணா வழியிலே வந்த கட்சிகள், திராவிடர் கழகம் திராவிட முன்னேற்ற கழகம்; தமிழக ஆட்சியிலே அமர்ந்துள்ள "அண்ணா பெயர் கொண்ட திரு எம். ஜி. ஆர். கட்சி, ஆகிய மூன்று,

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தியை எதிர்ப்பதிலே—தெளிவான வலிவான திட்டங்களை வைத்துப் போர்க்களம் நோக்கி போய்க்கொண்டிருக்கின்றன


ஆனால்—

ஆட்சி பீடத்திலே அமர்ந்திருக்கிற "அண்ணா" பெயர் கொண்ட திரு எம் ஜி ஆர். கட்சி?

வளவளா! கொள கொளா!!

இந்தியைத் திணிக்க மாட்டோம்—என்று மொரார்ஜி தேசாய் திருவனந்தபுரத்திலே பேசியதைப்பாராட்டி எம் ஜி. ஆர். தந்தி கொடுத்துள்ளார்.

அதே மொரார்ஜி தேசாய் அதே திருவனந்தபுரத்திலே அதே கூட்டத்திலே, அரசியல் சட்டப்படி இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி; நம் முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளதை மாற்ற முடியாது—என்றும் பேசியிருக்கிறாரே—இதற்கு இவர் திரு. எம். ஜி. ஆர் அனுதாபத்தந்திகொடுக்கப் போகிறாரா?



ஏன் இந்த வளவளா?

நாம் ஏமாந்த காலத்தில், வெள்ளைக்காரன் ஆட்சிபீடம் ஏறி, அரசியல் சட்டப்படி நம்மை எல்லாம் அடிமைகளாக்கியதை மாற்றி அமைக்க வில்லையா? இதேபோல் சுயராஜ்யம் வாங்கிய சூடு ஆறுவதற்குள் — எல்லோரும் மெய் மறந்த "போதை"யில் இருந்தபோது—அரசியல் நிர்ணய சபை அமைத்து, தென்னாட்டவர் எதிர்த்தும்—இந்திதான் ஆட்சிமொழி என்ற அரசியல் சட்ட 17 வது ஷரத்துக்கு ஆதரவு இல்லாமல் சம வாக்குகள் கிடைத்தபோதும். அதை ஒத்திவைக்காமல், கூட்டத் தலைவரின் ஒரு வோட்டை இந்திக்கு ஆதரவாக்கி அதர்மமாக சட்டமாக்கியதை மாற்றி அமைக்க முடியாதா?

மாற்றவேண்டும்! மாற்றியே தீரவேண்டும்! மாற்றுமல் விடமாட்டோம்!

இதுதான் திராவிடர் கழகத்தின், திராவிடமுன்னேற்ற கழகத்தின் திட்டவட்டமான முடிவு

திரு. எம் ஜி. ஆர். முடிவு என்ன?


1. இந்திய அரசியல்சட்டம் 17 வது பிரிவில் இந்தி மட்டும்தான் ஆட்சிமொழி என்றிருப்பதை மாற்றி, எட்டாவது பிரிவில் உள்ள எல்லா மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்க வேண்டும்.
2. இந்தியாவுக்கு ஒரே ஒரு ஆட்சிமொழி தேவை என்றால்—17 வதுபிரிவில் இந்தியோடு சேர்க்கப்பட இருக்கும் இந்திய மொழிகளுள் எதாவது ஒரு மொழி அந்த நிலைக்குப் பக்குவமாகிற வரை இங்கிலீஷ் மட்டுமே இந்திய மத்திய அரசின் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்.

இதை விளக்கிப்பேசி மகளிர் கூட்டத் திரட்ட ஜனவரி 25.ல் நாடெங்கும் கூட்டம்.

இந்திய அரசுக்கு இந்தி ஆட்சிமொழி எதிர்ப்பைக் காட்ட குடியரசு தினம்என்று கூறப்படுகிற ஜனவரி 26.ல் நாடெங்கும்துக்கத்தோற்றம்! ஊர்வலம்!

அண்ணாவின் பெயராலே கட்சியும் ஆட்சியும் நடத்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



இந்தியதேசியமா? இந்து தேசியமா?



கே.கந்தப்பன்

கழகக் கொள்கைபதிப்புச் செயலாளர்

"தேசியம்" போன்ற குழப்பமான வேறெருசொல்லை அரசியல் விளக்க நூல்களில் காண்பது கடினம்!

எவராலும் — எந்தக்காலத்திலும் — எந்த நிலையிலும் — ஒருவன் தன் தாய்மொழியல்லாத பிறிது ஒரு மொழியைத் தெரிந்து கொள்வதும், அதைத் தன் அன்றாட வாழ்வில் கையாளுவதும் "தேசியம்" என்று கூறப்பட்டதில்லை! இந்தியாவில் மட்டுமே இந்த விசித்திரமான நிலை உள்ளது:

தேரிந்ததோ தெரியாமலோ புரிந்தோ, புரியாமலோ ஒருவன் தன் நாட்டின் மீது காட்டுகிற அக்கறையையும் ஆர்வத்தையும், அதன் வழிப்பட்ட செயலையும், 'தேசியம்' என்று பொதுவாகக் குறிப்பிட்டு, வருகிறோம்! எனினும் தேசிய வெறிகொண்டவர்கள் கூட எந்த நாட்டிலும் தாய்மொழி அல்லாத மற்றெருமொழியைப் படிப்பதும், புழங்குவதும் தேசியத்தின் பாற்பட்டது என்று கருதியதாகத் தெரியவில்லை — இந்தியா நீங்கலாக! இந்த விந்தையான பாரத மண்ணில் மட்டுமே இந்தி மொழி தேசியத்தின் பெயரால் கட்டாயப்படுத்தித் திணிக்கப்படுகிறது,

'இந்தியைக் கற்பது தமக்குத் தேவையில்லை' எனச் சொல்லுவோரைப் பிரிவினைவாதிகள் என்று கூறும் அளவுக்கு அறியாமை இந்த நாட்டில் கொலுவிருக்கிறது.

மக்கள் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள இந்தி தெரிந்தால்தான் இயலும்' என்னும் நிலையை உருவாக்குவது கட்டாயம் அல்லாமல் வேறென்ன?

எனவே நிர்ப்பந்தம் இல்லை என்பது நடைமுறை உண்மையை மூடி மறைக்கும் அயோக்கியத்தனம்,

தமிழன் வாழ்வில் எல்லா நிலைகளிலும் தமிழே இடம் பெற வேண்டும் என்ற உணர்வை, தி. மு. க வினர்க்கு உணர்த்த முயலுவது. தாய்க்குப் பிள்ளைப் பாசத்தைச் சொல்லிக் கொடுப்பது போன்ற வேண்டாத வேலை! கழகத்தால் இந்த நாட்டுக்கே ஊட்டப்பட்ட உணர்வு அது!

தமிழன் இந்த நாட்டின் எல்லாத் தொடர்புகளுக்கும் தமிழை மட்டும் வைத்துக் கொண்டால் போதும் என்ற நிலை இருக்குமானால், அதை விட மகிழ்ச்சி தருவது வேறொன்று இருக்க முடியாது ஆனால் அந்த நிலை இல்லையே?

தங்களை அறிவுத்திசாலிகள் என்று கருதிக் கொண்டு "ஆங்கிலம் இன்னும் எதற்கு? அனைத்தையும் தமிழ் மயம் ஆக்கு" என்று அறிவுரை சொல்பவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதைத்தான் நாமும் செய்ய விரும்புகிறோம். ஆனால் அதற்கு இந்திய அரசு வழி விட வேண்டுமே?

இந்தியாவின் தலைநகரத்திலோ பிறவிடங்களிலோ இயங்கும் அலுவலகங்கள் ஒரு புறம் இருக்கட்டும். தமிழக எல்லைக்குள் செயல்படும் மத்திய அரசின் அலுவலகங்களோ அல்லது நிறுவனங்களோ. தமிழுக்கு என்ன வாய்ப்பைத் தருகின்றன? எங்கே தருகின்றன?

"தமிழனுக்குத் தமிழே போதும்; அதற்கு முதன்மைதந்திட வேண்டும்" என்பதை அவனுக்கு எவரும் அறிவுறுத்தத் தேவையில்லை; மொழியைத் தெய்வத்தோடு ஒப்பவைத்துப் போற்றியபெருமை அவனுக்கு மட்டுமே உண்டு!

ஆனால் தமிழன் இந்தியனாகவும் இருப்பதற்கு (இருந்தாகவேண்டும் என்று தமிழன் கட்டாயப்படுத்தினான் என அவன் மீது யாரும் குறை சொல்ல முடியாது!) தமிழோடு இன்னொரு மொழியும் பயின்றுதான் ஆகவேண்டும் என்றால் அந்த மொழி ஆங்கிலமாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே!

ஏனெனில் நம்மில் பலருக்கு அது ஏற்கனவே தெரிந்திருக்கிறது. எனவே தொடர்ந்து அதனைப் பயில்வது எளிது. பயிலப் போதிய பள்ளிகளும், பயிற்றப் போதிய ஆசிரியர்களும் ஏற்கனவே உள்ளனர். புதிதாக எதனையும் தேடி, பொருளையோ காலத்தையோ விரயமாக்க வேண்டியதில்லை! இந்தியா போன்ற ஏழைநாட்டில் எதையும் விரயமாக்கக் கூடாதல்லவா? அதுதானென்பன்னெடுங்காலமாக இந்திய நாட்டுத் தலைவர்கள் நமக்குத் தொடர்ந்து தந்துவரும் அறிவுரை.

அறிவுலகின் வளர்ச்சிவேகத்திற்கு ஈடுகொடுப்பதற்கும் அந்தமொழி எப்படியும் இப்போதைக்கு நமக்கு தேவைப்படுவதாகத்தான் உள்ளது. அதனால்தான் பண்டித நேரு அவர்கள் அதனை அறிவுலகத்திற்குப் பலகணி என்றும், நூலகமொழி என்றும்வர்ணித்தார்.

மூன்றாவதாக தமிழ்க் குடிமகன் இந்தியக் குடிமகனாக மட்டும் இருந்து விட்டால் போதாது தமிழ்க் குடிமகனாக இருக்கும்போது அவன் குடிக்க முடியாத மகனாக இருக்கிறான் என்பதும் இந்திய குடிமகன் ஆகும்போது தமிழக பாஸ்போர்ட் இல்லாமலே தமிழக எல்லைக்கு அப்பாலே சென்று குடித்துவிட்டு வர முடிகிறது என்பதையும் தவிர இப்போதைக்குக் கண்கண்ட பலன் அதில் வேறொன்றும் இல்லை! எனவே அவன் உலகமனிதனாகவும் உலகவி ஆகவேண்டும். இந்தியமகன் ஒருவன் இந்தநாட்டு எல்லைக்குள் தான் நடமாட வேண்டும் என்ற எண்ணம் நம் தேசத் தலைவர்கள் எவருக்கும் இருந்ததில்லை; இருக்க முடியாது!

உலகளாவிய தொடர்பை நாம்தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறோம். ஏனெனில் அது நமது நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் இன்றியமையாதது என்கிறார்கள். அவ்வகை உலகத்தொடர்புகளுக்கு ஆங்கிலம் உதவியாக இருக்கிறது என்பதை மறுப்பார் எவரும் இல்லை.

இந்த மூன்று கோணங்களிலும் பயன்படும் ஆங்கிலத்திற்குமேல் எதற்காக இன்னொரு மொழிச்சுமை?

தமிழ்ப் பொறுத்து தமிழ்தான் அவனுக்குத் தேசியமொழி. தமிழை ஆளவிரும்பும் எந்த அரசும் புழங்கித் தீரவேண்டிய மக்கள்மொழி.

எனவே இந்தியைக் கழகம் எதிர்ப்பது, ஆதிக்க அரசின் ஆகாத திட்டத்திற்குக் காட்டப்படும் எதிர்ப்பே தவிர, நாட்டுக்கோ அதன்நலனுக்கோ

எதிரான ஆர்வக் குறைவோ அக்கறையின்மையோ அல்ல!

இன்னொரு வகையாக இந்திக்கு வக்காலத்து வாங்கும் சில கோமாளிகளும் நம் மிடையே உண்டு. தமிழ்நாட்டுக்குத் தமிழ்போல, இந்தியாவுக்கு இந்தி என்பது அவர்தம் கோமாளித் தத்துவம்!

இந்தியநாடு என்பது இந்திக்காரர்கள் நாடல்லவென்பதை உணர முடியாத அறிவிலிகளும் இருக்கிறார்களே என்பதை நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை ஆனாலும் இந்தித் திணிப்பு இல்லை என்ற பிரதமர் வார்த்தையை நம்பி வரவேற்று நன்றி கூறிக்கொண்ட இந்தித் திணிப்பை தீர்த்துத் திட்டமிட சர்வகட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசப்போகிறேன் என்றும் சொல்லுகிற ஒருவர் முதலமைச்சராக இருப்பதை நினைக்கும்போது அதில் வியப்படையொன்றுமில்லை!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் எம். ஜி. ஆர். என்ன செய்யப் போகிறார்?

வாழ்வா சாவா - பிரச்சினையில் வளவளா கொளகொளா வேண்டாம்

1. ஜனவரி 26 — தமிழக அரசு குடியரசு தினம் கொண்டாடாது!
2. அ. இ. அ. தி. மு. கவும் ஜனவரி 26 ஐ துக்க தினமாகச் செயல்படுத்தும் — இப்படி அறிவிக்க திரு. எம். ஜி. ஆர். முன்வருவாரா?

இந்திய எதிர்ப்பதிலே தி.மு.க.வும், நானும் இரட்டைகுழல் துப்பாக்கியாக இருப்போம் — என்று சொன்ன எம். ஜி. ஆர் சொன்னபடி நடப்பாரா?

தொலைபேசி: 487161

பி. அந்தோனிசாமி அன் பிரதர்

மளிகை, அரிசி, கப்பு, மேற்வரு, சடலைப்பிண்ணாக்கு, மாட்டுத் தீவனம்
மற்றும் நவதான்ய வியாபாரம்

நெ. 20, அய்யாசாமி முதலி தெரு,
மேற்கு தாம்பரம், சென்னை 600 045

காலத்தால் தமிழ்மொழியே தலைமைகொள்ளும்

'பைங்கிளிக்கை'

'ஏனத்தான்! இனறரவு வடிநது விட்டால்
எல்லோயிலா நம் மகிழ்வுப் பொங்கல் அன்றே!
'தேன்' அத்தான் இத்திருநாள்! ஆனல் நீங்கள்
தெளிவின்றி இருப்பதும் ஏன்?' என்றுள் மங்கை;
மானத்தான் மணிமொழியான், நிமிர்ந்து நோக்கி,
''மங்கை! கேள்! நமதினிய பொங்கல் நாளில்,
வானத்துப் புகழ் நலத்தான் — நற்ற மிழ்த்தாய்
வாழ் வெண்ணிச் சிந்தனையில் ஆழ்ந்தேன்;'' என்றான்;
'சிந்தித்துச் சிந்தித்துத் தீட்டும் உங்கள்
திருவேட்டுக் கருத்துக்கள் உலகை வெல்லும்;
முந்து நிலை பெறுமன்றே! என்க ழுத்தில்
முத்தாரம் உம்மெழுத்துப் பொருளால் அன்றே;
இந்த நிலை போதும் அத்தான்! எதற்காய் நீங்கள்
'ராப் பகலாய்க் கலங்குகின் றீர்?'' என்றுள் மங்கை?
செந்தீயைத் தொட்டதுபோல் துடித்த தெழுந்தே
சப்பலுற்றான் மணி மொழியாம் எழுத்தாளன்! ஆம்!
''எனவடி நீ சொல்லுகின்றாய் தமிழை வைத்தே
இன்பமாக வாணிகத்தை நடத்தி வாழும்
புன்மைனத் தடிமை என்று நினைத்தாய்! என்னே?
போடி. போ! புல்லர் சிலர் இந்நாள் நந்தம்
கன்னிமொழி யால் வயிறு வளர்த்த லுக்கும்,
கைக்கூலி பெறுவதற்கும் பயன்ப டுத்தி
அன்னை மொழி உயர்வெண்ண அடிமை யானர்!
அத்தகைய புல்லனென்று எனை நினைத்தாய்?
''போற்றுமொழி நம்தமிழும் இந்தி யாவின்
புரியாட்சி மொழியாக்க வேண்டும்'' என்றே
நேற்றுழைத்த பேரறிஞர் அண்ணு கொள்கை
நீடு புகழ் வெற்றி கொள நம் கலைஞர்.
தோற்றுவித்தார் போராட்டம்; அப்போராட்டம்
தொடங்தார். கொடர்ந் திடும் அதில் நான் குதித்தே
...தீர்வேன்;
ஆற்றலிலா 'இநதி' மொழிக் கடிமையாக
அருந்தமிழை வைத்தபின்பு வாழ்வும் கேடே!''
புரிகிறதே உம்முடைய பெரிய திட்டம்!
புறப்பாட்டுத் தலைமகனே! வாழ்வு தந்த
உரிமைமொழி — நம் தமிழின் வாழ்வுக் காக
உம்முடனே யானும்தான் வருவேன்! எந்தக்
கரிமனத்தார் வஞ்சகமும் தமிழை வீழ்த்தா!
காலத்தால் தமிழ்மொழியே தலைமை கொள்ளும்
நரிவேலை தோல்வியுறும்! கலைஞர் கண்ட
நற்றமிழ்த்தேர்ப் படைவெல்லும்! உறுதி!! ''என்றுள்
''மங்கையுன தாற்றுமொழி இன்பம்! இன்பம்!
மன்னும்நம் தாய்நாடு இந்நாடே என்றும்,
இங்கமொழி பைந்தமிழும். மத்திய ஆட்சி
செய்யட்டும் ஆட்சிமொழி யாக இன்றேல்
''எங்களுடைத் தாய்நாடு தமிழர்நா டென்றே
எந்தமிழர் உறுதி செய்வர்!'' என்றே இத்னைப்
பொங்கல்நாள் சூளுரைப்போம்!'' என்றான்; மங்கை
புன்னகையால் சம்மதித்தாள் இன்பம் பொங்க

With best compliments from

Chekind Leathers Private Ltd.

Manufacturers and Exporters of Shoe Uppers.

113, ARIGNAR ANNA ROAD, NAGALKENI, MADRAS-600044.
PHONE No. : 497326

With best compliments from

a Well Wisher.

Best Compliments From

JOTHI CEMENT PIPEWORKS

Manufacturers of RCC Spun Pipes conforming to I. S. Specification in all classes suitable for Drainage, Culverts on National Highways and irrigation Purposes.

83, M. K. N. Road, Alandur,

Madras-600 032.

PHONE : 431985.

SCOTCHPHARMACEUTICAL WORKS

MANUFACTURERS OF QUALITY PHARMACEUTICALS,

SCOTCH - COF - EXPECTORANT PAINIL - MUMMY'S GRIPEWATER. ETC, ETC.,

Present Their Heartiest Greetings And Best Wishes For a Happy Pongal And Prosperous New Year.

With best compliments

from



Coramandel Agencies

IMPORTERS' AGENT & REPRESENTATIVES

8, Second Street, Ganapathy Colony,

MADRAS–86.

(INDIA)

PHONE: 81444


PHONE: 48519 PHONE: RES. 48452

With Best Compliments From:

YESKAY TEX

APPROVED RETAIL STOCKISTS FOR

BOMBAY DYEING



42-C, M. R. THEATRE BUILDINGS

TAMBARAM, MADRAS–600045

SAREES, SUITINGS, SHIRTINGS, FURNISHINGS ETC. ETC.

AT MILL PRICE,

TAILORING ATTACHED

NINE GEMS TAILORS



எம். ஜி. ஆர். இந்தியை ஏற்கப் போவதில்லையாம்—எதிர்த்துப் போராடப் போகிறாராம்: அண்மையிலே கூட இப்படி அறிவித்திருக்கிறார்! எம். ஜி. ஆரா? இந்தியை எதிர்த்துப் போராடப் போகிறாரா? என்று நாம் ஏளனம் செய்யவில்லை

1938ல் இராஜாஜி சென்னை இராஜதானியின் பிரதமராயிருந்தபோது இந்தியைத் திணித்தார். அதை எதிர்த்து இந்தி எதிர்ப்புப் போர் மூண்டது அப்போது எம். ஜி.ஆர். அப்போரில் கலந்து கொண்ட துண்டா என்று நாம் கேட்கவில்லை.

1948 ல் ஓமந்தூரார்முதல் வராக இருந்தபோது மீண்டும் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்றதே அதிலாவது எம். ஜி. ஆர், கலந்துகொண்டதுண்டா என்றும் நாம் கேட்கவில்லை

195 ல் புகைவண்டி நிலையங்களில்பெயர்ப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்த போராட்டத்தில் அவர் எந்தஊரில் எந்தப்புகை வண்டி நிலையத்தில் இந்திப் பெயர்களை அழித்தார் என்று நாம் கேள்வி எழுப்பவில்லை.

அப்படி யாராவது கேட்டாலும் அவருடைய கட்சித் தொண்டர்கள் எங்கள் புரட்சித் தலைவர் அப்போதெல்லாம் தேசிய இயக்கப் பெரும் தலைவராக இருந்தார்; எனவே திராவிட இயக்கங்கள் நடத்திய போராட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்று சொல்லக் கூடும். அல்லது அப்போதெல்லாம் அவர் தெய்வீகத் திருச் சபையின் திருத் தொண்டராக இருந்தவர்; நாத்திக இயக்கம் நடத்திய போராட்டங்களில் கலந்து கொள்ள வில்லை என்று கூறக் கூடும்?

அப்படிக் கூறினாலும் நாம் எதிர்வினாக்கள் தொடுக்க முடியும். இந்தி எதிர்ப்பு என்பது உயிர்க் கொள்கை. அந்தக் கொள்கை அரசியல் கொள்கைகளை அழுத்திவிட்டுமேலெழுந்து நின்றது. எனவே தான் எத்தனையோ தேசிய வாதிகள் அப்போராட்டங்களில் திராவிட இயக்கங்களோடு இணைந்திருந்து போராடினார்கள். எத்தனையோ சமயச் சான்றோர்கள் நாத்திகர்கள் என்று கருதப்பட்டவர்களோடு ஒருங்கிணைந்து போராடினார்கள் அப்படி எம். ஜ. ஆர். போராடியிருக்கலாமே என்று கேட்க முடியும், என்றாலும் கேட்க விரும்பவில்லை

1964 ல் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடந்தது. அப்போது எம். ஜி. ஆர். தி. மு. கழகத்தில் இருந்தார்...இப்படி மொட்டையாக இருந்தார் என்று கூறினால் ஒரு வேளை அவருக்குக் கோபம் ற்படும். அவருடைய கோபம் என்னென்ன விளைவுகளையோ ஏற்படுத்தக் கூடும். ஆகவே அவர் தி. மு. க: வின் பெரும் தூணாக இருந்தார் என்று கூறிடுவோம். அப்படி இருந்த எம். ஜி. ஆர். அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வில்லையே ஏன் என்று கேட்க விரும்பவில்லை

1965 ல் தி மு க. ஜனவரி 26 ஆம் நாளை துக்கநாளாகக் கொண்டாடிட வேண்டுமென்றும் கழகத்தவர்கள் தத் தமது இல்லங்களில் கருப்புக் கொடிகளை ஏற்றிடவேண்டும் என்றும் தீர்மானித்தது. ஆனால் எம். ஜி. ஆர் தனது வீட்டிலே கருப்புக் கொடி ஏற்றவில்லை. ஏன் என்று நாம் கேட்க விழையவில்லை,

அவ்வளவேன்? அண்மையில் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது, எம், ஜி. ஆர். கட்சியின் துணைப்பொதுச் செயலாளராக இருந்தவரும் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய நிதி அமைச்சருமான மனோகரன் "கலைஞர்தான், இந்திப் பிரச்சனையை கிளப்புகிறார் நாங்கள் (அ. தி. மு. க வினர்) இந்திக்கு ஆதரவாளர்களே" என்று கூறினர். அப்படிப்பட்டவர்களா இந்தியை எதிர்த்துப் போராடப் போகிறார்கள்? என்று நாம் கேட்டிடவில்லை,

இவைகளுக்கெல்லாம் மேலே எம். ஜி, ஆர். இந்தி மொழியைத் தமிழ் மொழியின் சகோதரி மொழி என்று குறிப்பிட்டார். அந்தக் கருத்தே கூட எத்தனையோ கேள்விகளுக்கு இடமளிக்கும் கேள்விதான்.

இந்தியாவில் இன்று இருக்கும் மொழிகள் இரண்டு பெரும் குடும்பங்களைச் சார்ந்தவை. ஒன்று இந்தோ ஆரிய மொழிக் குடும்பம்; மற்றொன்று திராவிட மொழிக் குடும்பம்; இந்தி இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. அதற்கு இந்துஸ்தானியோ, உருதுவோ அல்லது வடபுலத்திலுள்ள வேறு மொழியோ சகோதரி மொழியாக இருக்க முடியுமே தவிர தமிழ் இருக்க முடியாது தமிழ் வேண்டுமானால் கன்னடத்திற்கோ களிதெலுங்கிற்கோ துளுவிற்கோ மலையாளத்திற்கோதான் சகோதரியாக இருக்க முடியும். இது மோடி நூலறிஞர்களின் கருத்து இந்த உண்மை தெரியாமல் எம். ஜ. ஆர். இப்படி ஒரு அபத்தமான கருத்தைக் கூறலாமா என்று கூட நாம் கேட்கவில்லை

இப்படி எத்தனையோ கேள்விகளை நாம் கேட்கலாம் என்றாலும் கேட்காதிருப்பதற்கு என்னகாரணம்? கழகம் அண்ணா வகுத்த வழியில் நடைபோடுவது கழகத்தலைமை அண்ணா வழியின்று பிறழாத தலைமை 1398-ல் இந்தியைப் புகுத்திய இராஜாஜியுடன் 1956-லிருந்து ஒருங்கிணைந்து இந்தியை அண்ணா எதிர்த்தார். இந்தியைப் புகுத்தியவருடன் ஒன்று சேர்ந்தா இந்தியை எதிர்ப்பது என்று அண்ணா அன்று கேட்கவில்லை. ஆகவேதான் இன்றுநாம் எம். ஜி. ஆரைப் பார்த்து அந்தக் கேள்விகளை எல்லாம் கேட்கவில்லை

ஆகவேதான் கடந்த ஜனவரி 24-ல்திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டிலே கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தில் அ. தி. மு. க. அரசை சட்டமன்றத்தில் தமிழை ஆட்சிமொழி ஆக்கிட மத்திய அரசை வேண்டித் தீர்மானம் நிறைவேற்றிடக் கேட்டுக்கொண்டுள்ளது.

எம் ஜி. ஆர். இந்தியை எதிர்க்கிறார்என்று நம்புவோம். இந்தியை எதிர்த்துப் போராடுவார் என்று நம்புவோம். ஆனால் அதே நேரத்தில் சில கருத்துக்களை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவோம்.

ஓர் எதிர்க்கட்சி போராட்டம் நடத்துவதற்கும் ஓர் ஆளுங்கட்சி போராட்டம்நடத்துவதற்கும் சில அடிப்படைவேறுபாடுகள்உண்டு. எதிர்க்கட்சியின் போராட்ட ஆயுதங்கள், கேலிசித்திரம்; கதவடைப்பு. மறியல் இன்ன பிற. ஆனால் ஆளும் கட்சியின் ஆயுதங்கள். சட்டமன்றம், அரசு, அரசு நிர்வாக இயந்திரம் இன்ன பிற. ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைப் போல் அடக்கு முறைக்கு ஆளாகத் தேவையில்லை. மறை செல்ல அவசியம் இல்லை. இன்னும் சொன்னால் எதிர்க்கட்சியைவிட ஆளும் கட்சிமிக வலிலமயோடு அதே நேரத்தில் மிக எளிதாகப் போராடலாம். கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் எவ்வளவோ எடுத்துச் சொன்னோம், சேலம் இரும்பாலைத் திட்டமும் தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் வேண்டும் என்று. ஆனால் மத்திய அரசு கேட்கவில்லை. கழகம் ஆளும் கட்சியாக ஆனபின் அண்ணா எழுச்சிநாள் நடத்தினால் அதன் பலனாகத்திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

எனவே எம் ஜி. ஆர், தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். இந்தியை எதிர்த்துப் போராட நிறை செல்லத் தேவையில்லை சித்திரவதைக்கு ஆளாகத் தேவையில்லை அவர் மேற்கண்ட நடவடிக்கைகள் எடுத்தாலே போதும்.

திருச்சித் தீர்மானத்தின்படி சட்டமன்றத்தில் தமிழை ஆட்சிமொழி ஆக்கும்படி தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசிற்கு அனுப்பட்டும்.

மத்திய அரசிலிருந்து மாநில அரசிற்கு வரும் கடிதங்கள் உத்தரவுகள், நெறிப்படுத்

எல்.கணேசன், பி.ஏ., பி.எல்.,
வெளியீட்டுச் செயலாளர்

கும் அறிவிப்புகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் மத்திய அரசை அப்படி தமிழில் வராத கடிதங்களைத் திருப்பி அனுப்பிட வேண்டும். தமிழக அரசு மத்திய அரசிற்கு அனுப்பும் அனைத்துக்கடிதங்களும் தமிழிலேயே இருக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் மத்தியஅரசுத் துறையைச் சார்ந்த அலுவலகங்கள் எதிலும் - அவைகள் மக்களோடு தொடர்புகொள்ளும் எதிலும் கட்டாயம் தமிழ் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக அஞ்சல் அட்டையில் பணவிடைத் தாளில் கட்டாயம் தமிழ் இருக்கவேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு அரசேஅவைகளைத் தனியாக அச்சிட்டு தனியாக ஏற்பாடு செய்ய நிர்ப்பந்தம் வரும் என்று மத்திய அரசுக்குக் கடுமையாக எச்சரிக்க வேண்டும். இந்தியை எதிர்த்து இப்படிப்பட்ட காரியங்களை எம்.ஜி.ஆர். செய்திடவேண்டும். செய்வாரா என்று சந்தேகத்தோடு நாம் கேட்கவேண்டாம்.செய்வார் – நிச்சயம் செய்வார் என்று நாம் நம்புவோம் – உறுதியாக நம்புவோம்.

இந்தி எதிர்ப்பில் தாம் எவருக்கும் இரண்டாவது இடத்திலுள்ளவர் இல்லை என்று எம். ஜி. ஆர். உரிமை கொண்டாடுகிறார். தென்னகமுதல்வர்கள் மாநாட்டையேகூட்டி இந்தியை எதிர்த்ததாக பெருமைபட்டுக் கொள்கிறார். அந்தப் பெருமையை அவர் பெறுவதில் நமக்குப்பொறுமை எதுவும் இல்லை.

(தொடர்ச்சி 24-ம் பக்கம்)

முத்தொள்ளாயிரத்து முத்துக்கள்

எளிமை

மூவேந்தர் என்னும் முடி மன்னர் ஆண்ட நாடு முத்தமிழ் நாடு. பகை வெல்வதும் புகழ் கொள்வதும் அந்தப் போர்ப் புலிகளுக்குப் பொழுது போக்கு, அவர்கள் கலைஞர் களையும் புலவர்களையும் கண் ணெனக் கருதிக் காத்து வந்தனர். இலக்கியம் அவர்களுக்குப் பேச்சாகவும், மூச்சாகவும் இருந்த தண்டு. அவர்கள் பஞ்சணைப் பாடல்களை விரும்பியதைப் போலவே பாசறைப் பாடல்களையும் விரும்பினர்கள்.

முத்தொள்ளாயிரம் என்ப தொரு முத் தமிழ்ப் பனுவல், மூவேந்தரின் புகழ் பாடும் முரசு அது. மூவேந்தருக்கும் வெண்பாவில் தொடுத்த வெற்றிப் பாமாலை அது.

சோழ மன்னர்களின் வீரத் திற்கும் புகழுக்குமாக விளங்கு கின்ற பாட்டொன்று அதில் உண்டு.

அரச மண்டபத்தில் அமர்ந்திருக்கிறான் காவலன். வெளியே நீண்ட வரிசை யொன்று நெடுநேரம் காத் திருக்கிறது. அது இரவலர் வரிசையன்று; புரவலர் வரிசை. அவர்கள் வரிசையில் நிற்பது வாங்க அன்று...வழங்க,

ஆமாம்! அந்தச் சிற்றரசர் கள் எல்லாம், சோழ மன்ன னுக்குத் திறை செலுத்தத் தான் வரிசை முறைப்படி வருகிறார்கள். எண்ண முடி யாத சிற்றரசர்கள்! நேற் றிலிருந்து அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள் — இன் னும் காவலனை அணுகிக் கப் பஞ் செலுத்தும் பேற்றினை அவர்கள் பெற்றிலர். இன்றே டுமா என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் நெடிசல் வரிசை யில் நின்றுகொண்டிருக்கி றார்கள்.

அந்தோ பரிதாபம்! அவர் கள் எதிர் பார்ப்பில் மண் விழுந்தது. அரண்மனைக் காவ லன் ஒருவன் அவர்களின் கனவுகளை யெல்லாம் கலைத்து விட்டான்.

"அரசர்களே நில்லுங்கள்? நாளை வாருங்கள்— நாடாளும் காவலனுக்கு இன்று நல மில்லை. என்று அதிர்ச்சி தரத் தக்கவாறு அறிவித்தான்.

"ஏன் நலமில்லை?" என்று ஏக்கத்தோடும் விரக்தியோ டும் வினவினர் வேந்தரெல் லாம் — அதற்கவன் சொன்ன காரணந்தான் கவனிக்கத் தக்கது. அதுதான் கவிதைக் குரியது.

"நேற்று வரை திறை செலுத்திய வேந்தரெல்லாம் தங்களின் மகுடமுடி, மன்ன ரின் பாதங்களை உரசப் பணிந்து திறை செலுத்திய தால், மன்னனின் பொன்னடி கள் இன்று புண்ணடிகளாகி விட்டன — எனவே நாடாளும் வேந்தன் நலமிழந்தான்."

எப்படி இருக்கிறது காரணம்? "நின் நீயின் மன்னீர்! நெருநல் திறை கொணர்ந்து முன் தந்த மன்னர் முடிதாக்க இன்றும் திருந்தடி புண்ணுறிச் செவ்வி நிலனே பெருந் தண் உறந்தையார் கோ"

நாட்டு வரி போடும் வேந்தனுக்கு, புலவன் போட்ட பாட்டு வரி எப்படி?

முத்தொள்ளாயிரத்தில் இன்னொரு முத்தான காட்சி. வஞ்சி நாட்டுக்காரன் ஒரு வன் மேல் வாஞ்சைகொண டிருந்தாள் ஒரு வஞ்சி. அந்த வஞ்சி நாட்டுக்காரனும். அவளை மணஞ் செய்து மனை வியாக்கிக் கொள்வதாய் வாக் களித்தவனுக்கு அவளும் போக்கவித்தாள்.

காதலின் கற்பனைச் சாலை யில் அவர்களது இன்பரதம் இறக்கை கட்டிப் பறந்தது.

அவளோடு அவன் நடந் தான்; கிடந்தான். அவள் மேல் அவன் படர்ந்தான்; தொடர்ந்தான்; ஆனால் முடி வில், ஏமாற்றிவிட்டு எங்கோ நகர்ந்தான்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



பெரிங்கல் வந்தது!

கவிமாமணி. கு.மா.பாலசுப்பிரமணியம் எம்.எல்.இ

மங்களநாள் தமிழ்த்திருநாள் பொங்கல் வந்தது! — பச்சை
மஞ்சள் வாழை செங்கரும்பின் மனம் கமழ்ந்தது!

இல்லமெல்லாம் அழுக்குகளை நீக்கிட வேண்டும்!— அத்துடன்
இதயத்திலே துரோகபுத்தி போக்கவும் வேண்டும்!
கலைமகளை பாணைகளில் பொங்கிட வேண்டும்! — நல்லோர்
நமக்குத்தந்த உழவர்களை எண்ணவும் வேண்டும்!

காலையிலே துவ்விஎழும் உதயசூரியன் — மாலைக்
காலத்திலே மலைநடுவில் சேரும் வரையில்—தினம்
ஆலையிட்ட கரும்புபோல உடலைப் பிழிந்தே — நாட்டில்
அரும்பணிகள் செய்வதெல்லாம் உழவரல்லவோ? — உழவர்

நெற்றியிலே உதிர்ந்த வேர்வை முத்துக்களெல்லாம்— வயல்
நெற்பயிரில் வளர்ந்த கதிர்க் கொத்துக்களாகும்! — அவனே
பற்றிவந்த முதல் அரிசிபாலுடன் பொங்கி — தை
முதல்தாளில் கதிரவன்முன் நன்றி படைப்பான்! — அவன்

தேடித்தந்த உணவினிலே உடல்உளர்க்கும் நாம்— துன்பம்
தீர்ந்திடாமல் உழவர்களை வாட்டிடலாமோ? — மிகப்
பாடுபட்டுப் பயன்வினைந்த தானியங்களைப் — பதிர்ந்து
பாருக்கெல்லாம் படியளப்போன் தெய்வமல்லவோ?

ஏர் உழுவோர் சேற்றினிலே காலைவைப்பதால் — நாம்
இன்று பொங்கல் சோற்றினிலே கைவைக்கிறோம்!- அது
யார் கொடுத்த பிச்சை என்று நன்றி எண்ணுதல்—பெரும்
அல்லல்களில் உழவர்களைத் தள்ளிடலாமோ?

படித்தவர்கள் பதவிகளில் உயர்ந்து வாழ்கிறார்! —ஏர்
பிடித்தவர்கள் வறுமையிலும் மெலிந்து மாள்கிறார்!— மாதம்
அடுத்தவர்க்கே சம்பளம் பல ஆயிரமென்றால் — உணவை
அளிப்பவர்க்கும் ஊதியம சில நூறு வேண்டாமோ?
படித்தோரால் மறவர்கள் துடிததிடும்போதில் — தனக்கும்
பத்து படைம் வாங்குபவன் பகர்கொள்னைக ரன்! — பிறர்
கட்டத்துணி குடிசையின்றிச் செத்திடும்போதில் — மாடி
கட்டித் தோட்டம்வளைக்கிறவன் படுகொலைக்காரன்

கட்சி மாறிக் கொள்கையிற்றப் பதவி ஏற்பவன் — வீசும்
எச்சில் இலைக்காக ஓடும் பிறவிபோன்றவன்!
நச்சு மனம் கொண்டவரைப் போற்ற நிணைத்தே— நாட்டில்
நல்லவரைத் தூற்றுபவன் இதயமற்றவன்

குறைகளினால் குமுறியழும் உழவா மக்களின் — துன்பக்
குரலைக் கேட்க வெறுப்பவரே செவிடரானவர்!
முறைகளிட்டுந் திண்டாடித் தினம உழைப்பவர் — வாடும்
முகத்தைப் பார்க்க மறுபவரே குருடானவர்

கட்டங்களைச் சாடிக்கும சாகசத்தாலே — இந்தச்
சமுதாயம் சீரழிப்போர் கருப்புப்பணத்தால்' அவர்
கொட்டமெலாம் அடக்கி வேடம் கலைந்திடவேண்டும்!— சிறைக்
கொட்டடியில் கம்பி எண்ண அடைத்திடவேண்டும்!

எளியவர்க்குத் தெளிவு நெஞ்சில் பொங்கிடவேண்டும்' — மக்கள்
எது நடப்பு எது நடிப்பு அறிந்திட வேண்டும்!
உழவர்களும் உழைப்பவரும் உயர்ந்திடும்நாள்தான்— இந்த
உலகத்திலே அமைதி இன்பம் பொங்கிடும் நாளாம்!

★

முதல் மொழியும் நுண்ணறிவியலும்

கவிஞர் குடியரசு

மொழி என்றால் என்ன தந்தையே!

சுலபமாகச் சேட்டுவிட்டாய் மகனே கடவுள் பற்றிய விவாதத்துக்குக்கூட கருப்பொருள் இடைத்துவிட்ட தாகத் தத்துவங்கள் பீற்றிக் கொள்கின்றன.

ஆனால் மொழியின் தொடக்கம் எப்போது என்று இன்னும் அறியப்படவில்லை.

"உன்னை முதலில் அறிந்து கொள்ளவும் — பிறகு, நீ பிறரை அறிந்து கொள்ளவும் — உன்னைப் பிறர்க்கு அறிமுகப்படுத்திக்கொள்ளவும் — உனது தாய் உனக்குக் கற்றுத்தந்த நான் படுத்திய சத்தம் தான் 'மொழி'."

அப்படியா தந்தையே! என் தாய்க்கு அது எப்படித் தெரியும்!

இந்தக் கேள்விக்குமகனே! நாம் முதல் மனிதனிடம்தான் செல்லவேண்டும்! முதல் மனிதனுக்கோ — பரிணாம வளர்ச்சியை நோக்கி அடியெடுத்து வைத்துக்கொண்டிருந்தமுதல் உயிரணுக்களுக்கோ (செல்ஸ்) சுற்றுச் சார்பால் பாதிக்கப்பட்டநேரத்தில் (அல்பெஷன்) ஏறபட்ட ஒலியலைகளே முதல் மொழி எனலாம். பொதுவாக முதல் உயிர்க்கு முதலில் ஏறபட்ட எதிர்ப்பு—மொழி எனலாம்.

அந்த எதிர்ப்பானது தாய் வரையில் தொடர்ந்து வந்திருக்கிறது தந்தையே.

ஆம் மகனே! சத்தம் சரவதில்லையே! அதன் அலைகளை வஞ்ஞானம் பதிவு செய்து கொள்ளும் கருவிகளைக் கண்டு பிடித்திருக்கிறதே தவிர ஒலியை முழுமையாக அழித்து விடுகிற ஆற்றல் விஞ்ஞானத்துக்கும் இதுவரையில் ஏற்படவில்லை — அதனால்தான் உன் தாய் முதல் "எதிர்ப்பை" குழந்தையிலேயே உனக்கு அறிமுகப்படுத்துகிறாள்.

அப்படி என்றால் மரம், விருட்சம் — டிரீ (TREE) இந்த மூன்று சொற்களில் எந்தச் சொல் முதல் எதிர்ப்பால் உருவானது தந்தையே!

இது மொழி — சொல்லாராய்ச்சிக்கு உட்பட்ட கேள்வி மகனே! மேலும் பேச்டிரியாலஜி, ஆன்த்ரோபாலாஜி ஸ்கூல் ஆப் தாட் விஷயங்கள் ஆகும்.

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிமனிதர்களின் மண்டை ஓடுகளையும் அதன் தாடை அமைப்புகளையும் வைத்து ஆய்வு நடத்தியதில் முதல் எதிர்ப்பும் — அதன் தொடர்பாக எழுந்த ஒலியும் கடல் கொண்டதுபோக எஞ்சி இருக்கிற தமிழகத்தில்தான் எழுந்திருக்கவேண்டும் என்று ஜான் மார்ஷல் கூறுகிறார். அவரின் கூற்று இதுவரையில்மறுக்கப்படவில்லை.

அப்படிஎன்றால் தமிழொலி தான் முதல் எதிர்ப்பின் விளைவு என்று கூறுகிறீர்களா தந்தையே:

அவசரப்படாதே குழந்தாய் முதலில் (கன்செப்ட் ஆப் வாக்குவேஜ்) மொழி முதன்மை தெரிவேண்டும். மொழி முதன்மை என்றால் அதன் மூல ஒலி தெரியவேண்டும். நீ சொன்ன மரம் விருட்சம் — டிரீ என்ற சொற்களை உடைத்துப் பார்க்க வேண்டும்!

உடைத்தால் ஒலிச்சிதறல் ஏற்படாதா தந்தையே:

நான்தான் முன்பே சொன்னேனே — சத்தம் சரவதில்லை என்று — ஆனால் மொழியைப் பொறுத்தவரையில் — ஒலிச்சிதறல் — பொருள் சிதறலை ஏற்படுத்தாது மரம் என்ற சொல்லை உடைத்தால் 'மர' என்ற இன்னொரு சொல் கிடைக்கிறது,

"ஒலிச்சிதறல்" "விளாவ் — 'ம்' தெறித்தோடி விட்டாலும் 'மர' என்ற இன்னொரு சொல் தங்கி இருந்து பொருளைத் தருகிறது.

மர — என்றால் மரத்தல் — மரத்துப்போதல் என்றபொருளைத் தருகிறது.

அவ்வாறே 'விருட்சம்' 'டிரீ' என்ற சொல்லை உடை பார்க்கலாம் — பொருள் புரிகிறதா இல்லை அல்லவா

ஆகவே வேர்ச்சொல் — வேர் ஒலி இல்லாத 'எதிர்ப்பு' இருந்திருக்க முடியாது.

எனவே எதிர்ப்பு பொருளோடுதான் ஏற்படுகிறது! ஐம்புலனை நோக்கி ஓடிவரும் எந்த இயற்கைத்தாக்குதலும் ஆறறிவை எதிர்க்கவே செய்யும் — அந்த எதிர்ப்பு சத்தவடிவம் பெற்று விடுகிறது அந்த ஒலிக்கு உண்மை மட்டும் பேசத் தெரியும்.

இப்போது சொல் — மரத்துப்போன உணர்வுதானே 'மரம்' என்றாகி இருக்கிறது?

விஞ்ஞான வளர்ச்சி இல்லாத நேரத்தில் ஆதிமனிதன் ஆக்கிய சொல்லில் இருக்கிற ஆழமான பொருளை உணர்ந்தாயா?

அப்பொழுது முதல்மொழி தமிழ் என்று சொல்லுங்கள்:

ஆம் அந்த மொழி மீது தான் இந்தி படையெடுத்துப் பார்க்கிறது!

நீங்கள்தான் கூறினீர்களே — சத்தம் சாவதில்லை என்று — எந்த மொழி எதிர்த்தால் என்ன செந்தமிழ் சாகாதே!

உண்மைதான் — ஒலி சாவதில்லைதான் — ஆனால் ஒலியை மறக்கலாம் அல்லவா!

தென்ன புதுக்குழப்பம்! தந்தையே!

ஆம் மகனே! குழப்பம் மரச்தலினால்தானே ஏற்படுகிறது!

எப்படி தந்தையே!

முதலில் மனம் என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனின் அனுபவத்திற்கு (எக்ஸ்பீரியன்ஸ்) மற்றொரு பெயர் மனம் — இதைத்தான் 'நான்' என்று தத்துவமும், இட் (ID) என்று மனோத்தத்துவமும்கூறுகிறது.

மனோத்தத்துவத்தின் இட் சப்கான்ஷியஸ் மூலமாகக் கனவு, கவிதை, ஓவியம், சிறுகதை, நாடகம், இசை, இப்படிச்சம் முதலியவைகளை வழங்குகிறது.

கான்ஷியஸ் மூலமாக நடைமுறை நேரத்தில் (கிராஜுவலாஜிகல் டைம்) சட்டம் — ஒழுங்கை அறிமுகப்படுத்துகிறது.

தத்துவத்தில் வருகின்ற 'நான்' நாத்திகம் ஆத்திகச் சர்ச்சையை உண்டு பண்ணுகிறது.

ஆகவே மனம் தத்துவத்தில் சிக்கினாலும் — மனோத்தத்துவத்தில் சிக்கினாலும் சிந்தனைகளின் வெள்ளம் வற்றிவிடுவதில்லை!

எனவே புதிய சிந்தனைகள் பழைய சிந்தனைகளைச் சக்கான்ஷியஸாக மாற்றவும் கூடும்!

அப்படி மாற்றம் ஏற்படுவதைத்தடுத்து மறத்தல் என்கிறோம் — வேறுவிதமாகச் சொல்வதென்றால் 'ஒன்றின் நினைவே மற்றொன்றின் மறத்தல்' ஆகும்!

ஆகவே இந்தியின் நினைவு — தமிழின் 'மறத்தல்' ஆகிறது!

அப்படி என்றால் 'இந்தியை' யார் நினைவு படுத்துகிறார்கள் தந்தையே!

மகனே! இப்போது அரசியலுக்கு வந்து விட்டாய்!

முன்பே சொன்னேன் — கான்ஷியஸ் என்பது கிராஜுவலாஜிகல்டைம்) நடைமுறை நேரத்தில் சட்டம் — ஒழுங்கை அறிமுகப்படுத்துகிறது என்று.

சட்டம் ஒழுங்கு அரசியல் விஷயம் — சட்டத்தின் மூலம் ஒன்றை மறக்கடிக்கலாம் அல்லவா

எப்படி?

சட்டம் - ஒழுங்கு எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பயம் - ஆசை இவை இரண்டும் சக்தி வாய்ந்த மனித உணர்வுகள். ஒன்று தலை தூக்கும் போது மற்றொன்று ஒளிந்து கொள்ளும்.

ஆசை எப்போதும் எதிர் காலத்தைத் தானே ஒடும். பயம் எப்போதும் நிகழ் காலத்தை நஷ்டப்படுத்தக்கூடாது என்று எண்ணும்.

ஒரு சர்வாதிகாரி இவை இரண்டையும் தூண்டி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வான்.

மூளைச்சலவைக்கு (பிரைன் வாஷிங்) பயம் — ஆசை பக்குவப்பட்ட நிலங்கள்.

தண்டனையை பவிஷ்மெண்ட் பயத்தினும், நிறைவேற்ற முடியாத வாக்குறுதி ('பூரேகிராம்' அல்லது 'பாய்ண்ட்ஸ்') யை ஆசையிலும் பயிரிடலாம்.

சட்டம் — ஒழுங்கின் மூலமாகப் பயத்தையும் ஆசையையும் உண்டாக்கி விட்டால் — இந்தியின் நினைவு, தமிழை மறந்துவிடும் அல்லவா!

நீங்கள் சொல்கிற 'சப்கான்ஷியன்' படி அது தற்காலிகமானது (டெம்பரரி) தானே தந்தையே!

அரசியலில் டெம்பரரிகூட ஒரு தலைமுறையைக் கெடுத்து விடும் மகனே! தற்காலிகமாக இருதயம் நிற்கக்கூடாது அல்லவா?

ஆகவே, இந்தி நுழைவு, தமிழின் தலைமுறையைக் கெடுக்கும் ஓர் ஆபத்து என்பதை உணரவேண்டும்.

முத்தொள்ளாயிரத்து...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவளோ காதலின் கனவுகளைக் கலைத்துக் கொண்டு விழித்தாள்.

வஞ்சித்து விட்டான் என்ப தந்த வஞ்சிக்குப் புரிந்தது.

கண்ணீர் அருவியாகி அவள் கன்னங்களில் வழிந்தது. காத்திருக்கும் தோழி காரணங் கேட்கிறாள். அந்தப் பூவை புலம்புகிறாள். அதைப் புலம்பலை கவிஞன் கவிதையாக்கி விடுகிறான். கவிஞனின் கைகளில், எழுத்தாணி தூரிகையாகி விடுகிறது, ஓவியம் காவியமாகிவிடுகிறது.

பாடல் இது!

'வஞ்சியென் என்றவன்தன் ஊருரைத் தன் யாவுமவன்
வஞ்சியான் என்பதனால்
வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியேன்
என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ"

தான் வஞ்சி நாட்டுக்காரன் — வஞ்சியென் என்றவன் சொன்னதும் அவளும், வஞ்சியான் தன்னை வஞ்சிக்கமாட்டான் என்று உடன் பட்டாளம்.

ஆனால், வஞ்சிக்கமாட்டேன் — வஞ்சிக்க மாட்டேன் என்று சொல்லிக்கொண்டே அந்த வஞ்சி நாட்டுக்காரன் வஞ்சித்து விட்டானும்.

அட்டா! சொற்களின் சுவை எவ்வளவு எத்தனை அழகாகக் காட்சியளிக்கிறது!

தமிழின் அழகே அழகுதான், அதன் அர்த்தமே அலாதிதான்! முத்தொள்ளாயிரத் கடலில் இங்கேயுளித்தெடுத்த தவை இரண்டு முத்துக்கள் மட்டுந்தான். அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள் இன்பம் எய்துங்கள்!



பரவாயில்லை...!

ஜே.எஸ்.ஜோசு M.A., M.Litt.,

'அற்புதம்...ஆச்சர்யம்!' 'எங்கும் இல்லை. இது போன்ற முன்னேற்றம்'

சீனாவைவிட 10 கோடி மீட்டர் துணியை இந்தியா நெய்து தள்ளி விட்டது'

'17-மில்லியன் டன் உணவு தானியம் கையிருப்பு...2000 கோடி ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு'... என்பன போன்ற புகழாரங்கள் எங்கும் ஒலித்தன—இந்திராவின் ஆட்சிபற்றி!

எல்லாப் பாராட்டுகளும் ஏற்பும் லிடுவதோல் 'உணவுத் துறை உட்பட பல் வேறு முனைகளிலும் பெரிய சாதனைகளைப் புரிந்துள்ளது—இந்தியா'' என, இறுமாப்புடன் எழுதியது இந்திரா காந்தியின் மருமகள் நடத்தும் 'சூர்யா' ஏடு?

காலம் மக்களால் மாற்றப் பட்டது! இந்திரா ஏறியிருந்த சிம்மாசனத்தில் மொரார்ஜி தேசாய் அமர்ந்தார். 'நாட்டின் நிலையை சகல துறைகளிலும் உயர்த்திக் காட்ட காந்திய சிண்ணோட்டத்துடனும் அணுகு முறையோடும் நாடு படப் போவதாக' அறிவித்தார்—தனது முதல் பட்ஜட்டில்.

ஆயிற்று. ஜனதா தொறுப் பேற்று இருபத்தொரு மாதங்கள் எங்கோ மறைந்தன. கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் எழுதியதுபோல் ''ஜனநாயகத்திற்குப் புறம்பாக இந்திரா காந்தியால் செயல்படுத்தப் பட்ட சட்டங்கள்...கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் ஒன்றிரண்டை ஜனதா ஆட்சியினர் மாற்றம் செய்தனர் என்பதைத் தவிர—மக்களின் பிரச்னைகளை அணுகி ஆராய்ந்து, அவர்களுக்கு வாழ்வளிக்க—புதிய கொள்கைகளை வகுக்க ஜனதா அரசு எடுத்த தென்ன'' என்பதே. இன்று மக்களிடையே எழுந்துள்ள வினா!

இந்திரன் மாறினாலும் இந்திராணி மாறமாட்டாள்—என்பார்கள்—புராணிகர்கள்! அதுபோல் இந்திரா இடத்தில் மொரார்ஜி என்பதைத் தவிர இருவரது குரலிலும் எவ்வித மாற்றமும் இல்லை. இந்திரா பாணியிலேதான் தேசாயும் சாதனைப் பட்டியலை விளக்கி வருகிறார். கள்' பழையது தான்—மொந்தை' மட்டும் புதியது!

மத்திய ஜனதா அரசின் பரிபாலன மேன்மையால்

★ 12.5 கோடி டன்னாக உணவு உற்பத்தி உயர்ந்திருக்கிறது.

★ பணப் புழக்கம் 1977-ல் 5.3 சதவிகிதமாக இருந்து-தற்போது 7.6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது,

★ இத்தியாதி...இத்தியாதி...

ஜனதா சர்க்காரின் சாதனைகள் உட்பட—விடுதலைபெற்ற இந்தியாவின் வியத்தகு சாதனைகளை நாமும் பாராட்டுகிறோம்; பெருமைப்படுகிறோம். ஆனால்—இமயம் முளைத்த எல்லாத் துறைகளிலும் சாதனைகளை ஏற்படுத்திய இந்த நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் உண்ணவும் உடுத்தவும் உறங்கவும் வாய்ப்பின்றி உழல்கிறார்களே—என்ன காரணம்? சாதனைகளால் ஏற்பட்ட நன்மைகள் யாரிடம்சேர்ந்தன?... ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் செலவான தொகைக்கு ஈடானதா?

மொத்த ஜனத்தொகையில் 40 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ்—வாழ்வுக்கும் சாவுக்குமிடையே போராடுகிறார்கள்.இவர்களில் 24 கோடி பேர் கிராமப்புற மக்கள்.இக்கொடுமை தீர்க்கப்பட புதிய அரசின் தொலை நோக்குத் திட்டமென்ன?

குழந்தைகளை—பிள்ளைக் களையுமுதே பேசும் பொற்சித்திரமே—என்கிறோம். இந்தியாவில் 25 கோடி பேர்குழந்தைப் பருவத்தினர். இந்த மழலைச் செல்வங்களுக்குரியவைத்திய செய்ய குறைந்தது 5000 டாக்டர்கள் தேவை இருப்பதோ 2000 தான் மேலும் குழந்தை நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் முறையாகவும் முனைப்பாகவும் நடைபெறுவதால் சிசு மரணம் 1000-க்கு 160-ஆக உயர்ந்துவிட்டது... ஐ. நா. மன்றமோ 1979 க்குக் 'குழந்தைகள் ஆண்டு' எனப் பெயர் சூட்டியுள்ளது! இந்தியாவில் ஒறந்துபோகும் குழந்தைகளில் 100 க்கு 40 சதம் உயிர்வாழத் தேவையான சத்துணவுகள் இல்லாததால்தான்—என அறிவிக்கப் பட்டுள்ளது. எனவேகுழந்தைகளைக் காப்பாற்ற மத்திய அரசு கண்டுள்ள 'புதிய ஏற்பாடு' என்ன?

செம்மாந்து நிற்கும் 100 பல்கலைக் கழகங்கள்—கவர்ச்சியான கணக்கற்ற கல்லூரிகள்—பல லட்சம் பள்ளிகள் பாரதத்தில் பரவிக்கிடந்தும் 40 கோடி மக்கள்தற்குறிகளாகவே விடப்பட்டிருக்கிறார்கள் ''மக்கள் வளம் ஒரு நாட்டின் இன்றியமையாத சொத்து அது சமுதாயத்திற்குப் பயன்படவேண்டுமானால் கல்வி யறிவு முக்கியம்'' — என்பதெல்லாம்—வெறும் மேடை உபதேசம்தானே? கல்வி வளர்ச்சிக்குக் 'காந்தீயக் கண்ணோட்டத்தில்' பிரதமர் தீட்டிடும் திட்டம்தான் யாது?

முடைநாற்றம் வீசுகின்ற மூடப்பழக்கங்கள்—நரபலி—உட்பட தொடர்கட்டிப் பறக்கிறது. அறிவுப்பாதையில்அடிவைக்க அனுமதிக்காமல் ஆத்திகமும் ஜோதிகமும் மக்களை அடிமுட்டாள்களாகவே வைத்திருக்கிறது. அறிவொளி பரவ அரசு எவ்வகை முயற்சிகளை எடுத்துள்ளது?

ஜாதி வெறியும்—அதனால் விளையும் 'விழுப்புரங்களும்' அலிகார் சம்பவங்களும் சமகத்தின் அணிவகுப்பை அரித்து வருகிறது. இந்த வேதனையை வேரறுக்க எவ்வாறான கருத்தோட்டத்தை ஜனதா அரசு உருவாக்க நினைக்கிறது?

குருடர் தொகை இங்கு ஒரு கோடி! அவர்கள் மட்டும் கண்ணொளி பெற்றவர்களாக இருந்தால் அவர்களது அறிவாற்றல், உழைப்பால், ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி 'ரூபாய் உற்பத்தியாகு'மென கணக்குப் போட்டிருக்கிறார்கள் பொருளாதார வல்லுனர்கள். சுகாதாரமான குடியிருப்பும் சுத்தமான சத்துணவும் மக்களுக்கு இனியும் மறுக்கப்பட்டால் குருடர்களின் எண்ணிக்கை விரைவில் இரண்டு கோடியாகப் பெருகிவிடும் என எச்சரிக்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்! இந்தக் கண்ணொளியைப் போக்க இந்திய அரசு என்ன செய்யப் போகிறது?

மன நோயால் பாதிக்கப்பட்ட 'பைத்தியங்களின்' தொகை 26 லட்சம். கவனிக்கப்பட வேண்டிய விஷயம்—இவர்களில் கால்வாசி பேர் உரிய உணவின்மையால் இத்தகைய இரங்கத்தக்க நிலையை எய்தியவர்கள்

குட்டரோகம்—தொழுமையான நோய் உலகிலுள்ள குட்டரோகிகளில் மூன்றில் ஒரு பகுதியினர்—25 லட்சம் பேர் இந்தியாவில்தான் இருக்கிறார்கள். புண்ணிய பூமி என்கிறார்களே நமது நாட்டை! வளர விடலாமா இந்த ரோகத்தை?

மனதை நெகிழ வைக்கும் மற்றொன்று—அனுதைக் குழந்தைகளின் எண்ணிக்கை பதினேந்தரை லட்சம்.

மிகவும் முக்கியமான பிரச்னை—வேலையில்லாத் திண்டாட்டம். பட்டதாரி விஞ்ஞானிகள் 24000 பேருக்கு இன்றுவரை வேலை கிடைக்கவில்லை. பல்வேறு பட்டதாரிகள் வெளிநாடுகளுக்குசென்று விட்டனர். ஆனால், ''விஞ்ஞான தொழில் நுட்பப் பயன்களை கிராம மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்—சமூக நலத்தை மையமாகக் கொண்டதாக விஞ்ஞான ஆராய்ச்சி இருக்கவேண்டும்'' என்று, 'வார்தாவில்' விரிவுரையாற்றியுள்ளார் நமது பிரதமர்! மற்றும் இன்றைய கணக்குப்படி அறவே வேலை வேலையில்லாதவர்கள் 4 கோடி பேர்!

வேடிக்கையான—ஆனால் வேதனை மிகும் வேறொரு விபரம் இதோ; நாளொன்றுக்கு சராசரி 470 கிராம் சத்துணவு ஒரு இந்தியனுக்குத் தேவை. ஆனால் ஏழரை கோடி பேர்—எலி—பெருச்சாளி ஒரு நாளைக்கு எவ்வளவு 'கலோரி' உணவைக் கபளீகரம் செய்கிறதோ அதைவிடக் குறைவான உணவையே உண்கின்றனர். எலியைவிட இந்நாட்டு மன்னர்கள் அற்ப ஜந்துக்களா? எலியைவிட நிச்சயம் மனிதன் உயர்ந்தவன் என்பதை நிலை நாட்ட 'காந்தீய அணுகு முறையில்' தேசாய் வைத்துள்ள திட்டம்தான் யாதோ?

மொத்தத்தில்—இந்தியாவின் மூன்றில் இரண்டு பகுதி பகுதி சகல துறைகளிலும் பிற்போக்கான நிலையில் இருப்பதாக மத்திய அரசு அரசு அறிவித்துள்ளது—அண்மையில்.

கண்ணீர் வரவழைக்கும் இத்தகைய விவரங்கள்—விபரீதங்கள் — எண்ணிக்கையில் ஏராளம்.

முடிவே இல்லாத இத்தகு சமூக பொருளாதார நிலைமைகள் இங்கு மட்டும் இருப்பானேன்?

ஐந்தாறு ஐந்தாண்டுத்திட்டங்கள்; கிட்டங்களை நிறைவேற்ற மக்கள் அளித்த மாளாத வரிப்பணம்...

வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கோடிக்கணக்கான கடன் தொகை...

இமைமாகப் பெற்ற ஏராளமான உதவிகள்.

1967 — வாக்கில் இந்திராவின் வறுமையே வெளியேறு' கோஷம்...

1971-ல் அவரது 10 அம்சத் திட்டம்...

1975-ல் ஈடில்லாத 20 அம்சத் திட்டம்...

சஞ்சை காந்தியின் 5 அம்சத் திட்டம்...

இறுதியில் ஜனதாவின் முழுப்புரட்சி முழக்கம்...

ஏ...அப்பா! எத்தனை திட்டம்!

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



அவள் வந்தாள்

— புலவர் பூங்குன்றன்

மங்கள மஞ்சள் துலங்கிடவும்
மணமலர் எங்கும் குலுங்கிடவும்
குங்கும வண்ணம் திகழ்ந்திடவும்
குளிர்தமிழ் நாடு மகிழ்ந்திடவும்
தை அவள் வந்தாள் இன்பமடா—தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா

கனிச்சுவை பொங்கல் வைத்திடுவார்
கரும்பினைச் சிறுவர் சுவைத்திடுவார்
பனிமலர் எங்கும் பரப்பிடுவார்
பன்னிறக் கோலம் வரைந்திடுவார்
தை அவள் வந்தாள் இன்பமடா — தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா

புதியநல் ஆடை புனைந்திடுவார்
புத்தணி கொண்டு வனைந்திடுவார்
புதுமனை போலப் புதுக்கிடுவார்
பொங்கிடும் அழகைத் தேக்கிடுவார்
தை அவள் வந்தாள் இன்பமடா — தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா

வண்தமிழ் மக்கள் திருநாளாம்
வள்ளுவர்க் குள்ள ஒருநாளாம்
வன்புலித் தமிழர் மாடணைந்து
வண்புகழ் நாட்டும் பெருநாளாம்
தை அவள் வந்தாள் இன்பமடா — தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா

மைவிழி மங்கையர் வாழ்த்திடவே
மாத்தமிழ் மறவர் ஆர்த்திடவே
மொய்வளம் உழவர் வினைத்திடவே
முகிழ்த்திடும் அன்பில் தினைத்திடவே
தை அவள் வந்தாள் இன்பமடா — தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா

வாழிய தைமகள் வாழியவே
வாழிய தமிழர் வளமுறவே
ஊழையும் வென்றிட உழைப்பவர்க்கு
உதவிட வருவாய் தைமகளே
தை அவள் வந்தாள் இன்பமடா — தமிழ்த்
தை அவள் தந்தாள் இன்பமடா!



அவளின் கவலை...

பழனி சித்தார்த்தன்

பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!''

கிராமத்து இல்லங்களில் வாலும், மக்களின் உள்ளங்களில் மகிழ்வும் பொங்கின. பெண்களின் புதுப்பு'டவைகள் சலசலத்தன; அவர்களின்சிரிப் பொலிகளுடன் இரண்டறக் கலந்து கண்ணுடி வளேடல்கள் கலகலத்தன; மஞ்சள் பூசிய பாதங்களும், வண்ணக் குங்குமம் தீட்டிய பிறைநுதல்களும் 'மூரட்டுக்காளே'களின் கூறிய கொம்புகளேத் தாவிப்பிடித்து அடக்கத் துடித்துக் கொண்டிருக்கும் இளங்காளேகளின் கண்களே ஈர்த்தன; வீரத்தையும் காதலேயும் இருகண்களாகக் கொண்டிருந்த தமிழர் நாகரிகம் மறுபிறப்பெடுக்கும் திருநாள் இது.

'பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்!'

அஞ்சலக்கு வேலே சரியாக இருந்தது. சென்னேயிலிருந்து பிள்ளேகள்வந்திருகிறார்கள். சில நாட்கள் தான் இருக்கப்போகிறார்கள். நகரத்தில் வாய்க்கு ருசியாக அவர்கள் என்ன சாப்பிட்டிருக்கப் போகிறார்கள்...உணவு விடுதி காரர்களுக்குச் சாப்பிட வருவோரின் உடல்நலன் குறித்து அக்கறை இருக்கப்போகிறதா என்ன...எப்படிய்யா மட்டரகமான நாத்தம்' பிடித்த அரிசிச்சோறும், 'புழுத்த' காய்களும் போட்டுக் காசு சேர்த்தால் போதும்...இவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டே பாய் விரித்துப் பிள்ளேகளே உட்காரச் சொன்னுள்: இனிப்புச்சோறு, இட்லி, தோசை, வடை, அதிரசம். — பிள்ளேகளுக்கே ஆச்சரியம் — அம்மா ஒருத்தியாக இருந்து என்னென்ன செய்திருக்கிறுள்!

அவள் அவாகளிடம் சொன்னுள்:

'முதல்ல சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுங்க'

'நீயும் உட்காரும்மா. முதல்ல நாங்க உனக்கு ஒரு இனிப்பான சேதி சொல்லப் போறோம்...

அஞ்சலே யோசித்தாள். அந்த இனிப்பான செய்தி என்னவாக இருக்கும்? திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் தெரிவிக்கப் போகிறூர்களா?

'சொல்லுங்க மகாராசாக்களா'

'எங்க பக்கத்துல வந்து உட்காரு.'

அவள் அவர்களருகே அமர்ந்ததும் வீரையய்யன் சொன்னுன்:

நாம நெலம் வாங்கப் போறோம். சொந்தமா — நமக்காக - நாமே நெலம் வாங்கப் போறோம்...'

'அஞ்சலே அசைவற்றுப்போனுள். நிலம் — சொந்த நிலம் அவளுடைய கணவனும் அவளும் சேர்ந்து கனவு கண்ட சிறிது நிலம் — அந்தக் கனவுதான் நீண்ட நாட்களுக்கு முன்னரே கணவன் இறந்த போதே கலேந்து விட்டதே... அவள் கண்களிலிருந்து மளமளவென்று நீர் பெருகிறது. 'உண்மையாகத்தான் அம்மா. நாங்க சம்பளத்துலருந்து சேர்த்துவைத்தபணத்தையும், கம்பனியில லோன் வாங்குன பணத்தையும் கொண்டு வந்துருக்கோம் நெலம் கிடைச்சா நாளேக்கே வாங்கிடலாம்...''

அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டேயிருந்தது. இனிப்பும் கரிப்பும்கலந்த கண்ணீர்; இன்பமும் துன்பமும் சேர்ந்த கண்ணீர்;

தான் பிறந்து வளர்ந்து வாழ்க்கைப்பட்ட கிராமத்தில் சொந்தமாகச் சிறிது நிலம் வாங்க வேண்டும் என்பது அவளின் இளமைக்கால கனவு —

0 0 0

அவர்கள் பரமகுருவின் நிலத்தை வாங்கப் போகிறூர்கள்.

பரமகுருவின் நிலத்தின் மீது இரத்தினசாமிக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு கண்; கிராமத்தில் இருக்கும் நிலங்களில் முக்கால்வாசி அவருக்குச் சொந்தம், உச்ச வரம்புச் சட்டத்தின் கண் மறைக்கும் தந்திரங்களெல்லாம் அவருக்கு அத்துபடி. பரமகுரு நிலத்தை விற்கப்போகிறூர் என்று தெரிந்ததும், அவரைத் தன்னுடைய அரண்மனே போன்ற பெரிய வீட்டிற்கு வரவழைத்துப் பேசினுர்.

பேரம் ஒழுங்காக நடக்கவில்லே.

தன்னேத் தவிர நிலத்தை வாங்கும் தகுதியோ செல்வாக்கோ கிராமத்தில் எவனுக்குமே இல்லே என்ற இறுமாப்பாலும், மகளின் திருமணத்திற்குப் பணம் புரட்ட பரமகுருவுக்கு நிலத்தை விற்பதைத் தவிர வேறு வழியே இல்லே என்பதைத் தெரிந்து கொண்டதாலும், அநியாய விலேக்குக் கேட்டார். அந்த விலேக்கு ஒப்புக்கொள்ளாது வெளியேறிய பரமகுரு தனக்குள் சொல்லிக்கொண்டார். ''பணக்காரங்களெல்லாம் பேராசைக் காரங்கன்னு சொல்றது நிசம்தான்...''

இரத்தினசாமியின் எதிரே முட்டை அவியல், மீன் குழம்பு, பிரியாணி, புரோட்டா வகையறுக்கள் தயாராக இருந்தன, அடியாட்களில் ஒருவனன முத்து இரண்டாவது தடவையாகப் பட்டுடச் சாராயத்தைக் கண்ணுடி இளாசில் ஊற்றிப் பணிவாக அவரிடம் நீட்டினுன்.

'யாரோட சரக்குடா?''

'காளியோடது தானுங்க'

'வழக்கம்போல இல்லியேடா... ஒரேயடியா எரியுது நவச்சாரம் ஜாஸ்தி கலந்துட்டான் போல...''

தேரோ, பாண்டிச்சேரி போன்ற ஈரப் பிரதேசங்களிலிருந்துதான் அவருக்கு விதேசிப் பெயர்களேச் சூடிய மதுபானங்கள் வரும். தெடுபிடி அதிகமாக இருக்கும் நாட்களில் இம்மாதிரி சுதேசி சரக்கு களேத்தான் அவரும் நாட வேண்டி இருக்கிறது, அந்தக் கிராமத்திலும், சுற்று வட்டாரக் கிராமங்களிலும் சரி, எப்போதும் போலவே சாராய சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னர்கள் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள் மாதந்தோறும் காவல் நிலேயங்களுக்குக் கப்பங்கள் செலுத்திவிடுவதாலும், மப்டியில் சைக்கிளில் வரும் போலீசாருக்கு வாய்க்கரிசி போடுவதுபோல் பத்தோ இருபதோ தந்து விடுவதாலும் சட்டம் தன் கரத்தை அங்கெல்லாம் நீட்டுவதில்லே -

மூன்றுவதுகிளாசும்உள்ளே போன போது ஊறுகாயைத் தொட்டுக்கொண்டார்; காத்திருக்கும் உணவுப் பதார்த்தங்கள் மீது படையெடுத்தார்...

அப்போது அடியாள்முத்து அவரிடம் ஒரு செய்தி சொன்னுன். அந்தச் செய்தி பரமகுருவின் நிலத்தை அஞ்சலேயின் பிள்ளேகள் வாங்கப் போகிறூர்கள் என்பதுதான்.

ஏற்கனவே சிவந்திருந்த அவருடைய கண்கள் ஆத்திரத்தால் இன்னும் சிவந்தன. அவருக்குப் போட்டியாக — அவருக்குத் தெரியாமல் — அவர் ஆசைப்பட்ட நிலத்தை இன்னெருவர் வாங்குவதா? வாங்கப் போகிறவர்கள்மேட்டுக் குடி சனங்களும் அல்லர்.

'அவுங்களுக்கு அவ்ளோ திமிர் வந்துடிச்சா? இருக்கட்டும் இருக்கட்டும்... டேய்பரமகுரு என்னேக் காட்டிலும் கீழ் சாதி சனங்க ஒனக்கு ஒசத்தியாப் போய்ட்டாங்களா''

— மன எரிச்சலேத் தணிப்பதற்கு மறுபடியும் ஒரு கிளாசு சாராயத்தை முழுங்கினுர்

ஃ ஃ ஃ

இந்த நிலம்தான், சந்தேகமேவேண்டாம். இது நல்ல நிலம்தான் — மலடியைப் போல் இது ஏமாற்றிவிடாது ஒன்றை விதைத்தால் பதினுக்கு ஒன்பதை ஈனும்...

அஞ்சலே குனிந்து நிலத்து மண்ணேக் கைகொள்ளாமல் எடுத்து முகர்ந்தாள்.

'போ, அப்பாலே...''

ஒரு முரட்டுக் கரம் அவள் கையைத் தட்டிவிட்டது. மண் சிதறியது.

இரத்தினசாமிதான். அகலப் பட்டுக் கரை போட்ட எட்டு முழ வேட்டி; சில்க் ஜிப்பா; மைனர் செயின்; ஜரிகைத் துண்டு: பத்து விரல்களில் இரண்டைத் தவிர அனேத்து நிலும் மின்னிடும் மோதிரங்கள். ஐம்பதுவயதைத்தாண்டி விட்டதால் தலேயில் நரைக்கத் தொடங்கிவிட்ட பகுதிகளேக் கருப்பாக்கப் பூசிய மைகாலே வெளிச்சத்தில் பளபளத்தது. பிள்ளேகளேப் பெற்று — பிள்ளேகள் வயிற்றுப் பேரன் பேத்திகளே எடுத்தும் ஊர்விடாமல் மேய்ந்து' கொண்டிருந்ததால்கண்களின் கிழ்கருமையான வளேயங்களும், தினக்குடியால் தொந்தியும் விழுந்திருந்தன

அவரைச் சுற்றி ஏழு அடியாட்கள் ஆளுக்கொரு நீண்ட கடிகளோடு நின்றிருந்தார்கள்.

தாயின் கரத்தைத் தட்டிவிட்ட அந்தப் பெரியமனிதனின் முன்னே வேங்கை போல் வீறுகொண்டு நின்ருன் அழகப்பன்.

'நாங்க காசு போட்டு வாங்கப் போற — எங்களுக்குச் சொந்தமாகப்போற — நிலத்துல வந்து நின்னுகிட்டு எங்களேயே போகச் சொல்றியே, எவ்வளவு நெஞ்சழுத்தம்மய்யா உனக்கு''

'உங்க நிலமா. 'ஹேய் ஹேய்ன்ஞனும் ... உங்கப்பன் நிலமா? உங்க பாட்டன் நிலமா...?'

வீரையய்யன் இருவருக்கு மிடையே வந்து நின்று அவரிடம் அமைதியாகச் சொன்னுன்

'நெலத்த நாங்கதான் வாங்கப் போறோம். முன்பணமெல்லாம் கொடுத்தாச்சு. பத்திரம் பதிய வேண்டியதுதான் பாக்கி, எதுக்கு வீணு கலாட்டா செய்றீங்க?''

''மரியாதையாச் சொல்றேன், நல்லா கேட்டுக்கோ, இந்த நெலத்த நான்தான் வாங்கப் போறேன், உசுரு மேல ஆசையாயிருந்தா இப்படியே ஒடிப் போங்க...''

அழகப்பன் கேட்டான்:

''இந்தக் கிராமத்துலேயே நிலம் வாங்குற உரிமை உங்களு ஒருத்தர்க்குத்தானு சொந்தம்?''

''கேள்வியாடா கேட்கற கேள்வி...''

''ஏன், அதுகூடக் கேட்கக் கூடாதா...?''

'பரதேசிப்பய பிள்ளேக்கு வாய்நீளத்தைப் பாரேன்!'

அழகப்பனின் இரத்தம் கொதித்தது; எந்த நிமிடமும் அவர் மீது பாய அவன் தயாரானுன் வீரையய்யன் தம்பியை அம்மா பக்கமாக ஒதுக்கிவிட்டான்,

அவள் வார்த்தைகளின் சூடு தளாது — மகனின் கரத்தைப் பற்றிகொண்டாள்.

வீரையய்யன் அவரிடம் சொன்னுன்.

''கண்ணியமாகப் பேசிப் பழகுங்க ...நீங்க யாருக்குப் பிறந்திங்கன்னு உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?''

''என்னடாசொன்னே...''

அவர் ஆத்திரத்தோடு அடியாட்கள் பக்கமாகத் திரும்பிக் கத்தினுர்;

''ஏண்டாஎச்சல்பொறுக்கி நாய்களா, நீங்க யாருக்குப் பொறந்தேன்னு இந்த பய கேக்கறான் ... நீங்க கேட்டுக்கிட்டு வேடிக்கையா பார்க்குறீங்க?...''

அடுத்தகணம் வீரையய்யன் அழகப்பன் இருவரின் தோள் பட்டைகளின் மீதும், முதுகுகளின் மீதும், தடிகள் சரமாரியாக அடிகளேப் பொழிந்தன; அவர்களால் எவ்விதத்திலும் தங்களேத் தற்காத்துக் கொள்ள முடியவில்லே. முகத்திலும் நெற்றியிலும் அடிபடாமல் இருக்க இரண்டு கைகளேயும் தலேக்கு மேல் தூக்கிக் கொண்டார்கள். அவர் தொடர்ந்து அடியாட்களேப் பார்த்துக் குரைத்தார்.

'பொறுக்கி நாய்களா. ஒத்தியாடா கொடுக்குறீங்க. போடுங்கடா நல்லா...'

தடிகள் இப்போது தலேகளேக் குறிவைத்து விழுந்தன. இருவரின் தோல் பட்டை எலும்புகளும் முறிவதுபோல் வேதனே... முன் மண்டையிலிருந்து சிவப்பு நிறக் குருதி பெருகிக் கன்னங்களில் ஓடியது...

(தொடர்ச்சி 14ம் பக்கம்)


வாழ்க தமிழ்' வெல்க கலேஞர் பணி!

தமிழரின் தனிப்பெரும் திருநாளாம் இத் 'தை' முதல்நாளில் தமிழ் இனம் காக்கவும் மொழி காக்கவும் பணியாற்றி வருகிற கழகத் தலேவர்களுக்கும், தோழர்களுக்கும் எனது இதயம் கனிந்த புத்தாண்டு வணக்கத்தையும் வாழ்த்தையும் உரித்தாக்குகிறேன்.

இவண்
எல். பெருமாள்,
தேங்காய் வியாபாரம்
46. எச்-1 திருமலேசாமிபுரம்
தண்டுக்கல் — 3
— டி. விசுவாசம்

எனது ஆசை

கலைவாணர்



என் கலையுலகப்பயணத்தின் ஆரம்ப நாட்களிலேயே நல்ல படிப்பினைகளை மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று என் உள்ளம் விரும்பியது. திரைப்படக் கலையுலகிற்கு வருமுன்னரும் நாடக நாட்களிலேயும் நான் ஒவ்வொரு படிப்பினையை ஒவ்வொரு நாடகத்தின் மூலம் சொல்லி வந்திருக்கிறேன். எனக்கு அந்தப் பழக்கம் பிறகு நன்முக உதவியது.

இப்படி மற்றவர்களுக்கு ஏதேனும் நல்ல படிப்பினை கூற வேண்டும் என்று என்மனதில் தோன்றியதற்குரிய காரணம் என்ன? பிரச்சினைகளால் சூழப்பட்ட என் இளமை வாழ்வு என்னைச் சிந்திக்க வைத்தது. சிந்தித்தேன்; அதன் பயனே யாவும்.

யாவரும் எந்தத் துறையிலும் நல்ல தேர்ச்சி டையுமுன்பு, அந்தத் துறையில் பழக்கப்பட்டவர்களைப் போல 'அபிநயிக்கக் கூடாது; அப்படி அபிநயித்தால் பிராணசங்கடமே வந்தாலும் வரலாம் என்ற படிப்பினையை 'அசோக் குமார்' என்னும் படத்தில் வைத்தியரின் மகன் போல நடித்துச் சொல்லியிருக்கிறேன்.

சாதிமத பேதம் என்பது வெறும் பித்தலாட்டம் என்ற படிப்பினையை 'சாலிவாகனன்' படத்தில் சூட்டிக் காட்டினேன்.

கள்ளக் காதலரின் சங்கடங்களையும் முடிவையும் 'அம்பிகாபதி'யில் சொல்லியுள்ளேன்.

'சின்ன வயதிலே
கன்னித் தமிழிலே
பாடினான் ஒரு பாட்டு – என்று
போடுறியே வேட்டு'

என்று 'பூம்பாவை' எனும் படத்தில் கேட்டு, ஞானசம்பந்தருக்குப் பார்வதியே 'டைரக்டாக' வந்து பால் கொடுத்த சங்கதிகளை வெளிப்படுத்தினேன்

நல்லதம்பி'யில் மதுவிலக்கு ஜமீன் ஒழிப்புப் பற்றியே அதிகம். இன்னும் உட்பிரிவில் வசனங்கள் மூலமாகவும் பாடல் மூலமாகவும் பற்பல படிப்பினைகள் உண்டு.

நமக்கெல்லாம் 1960ம் ஆண்டு நல்ல காலம் வரக்கூடும். அதற்குள் மக்கள் மனப்பண்பும் நன்முக மாற வேண்டும் என்ற படிப்பினையை மணமக்களில் சொல்லியுள்ளேன்.

ஒரு முதலாளியிடம் வேலைக்காரனாக இருப்பதற்காக, அவனுக்குநன்றி செலுத்தும் பொருட்டு நீதியை மறந்து விடக்கூடாது. அவன் போடும் சோற்றைவிட மனித நீதிதரன் பெரிது 'கர்ணனின் செஞ்சோற்றுக்கடன்' பண்பு 'கர்ணதுரியனது என்ற படிப்பினையை 'நன்னம்பிக்கை' என்ற படத்திலும், எழுத்தறிவில்லாதவனுல் எவ்வளவு தொல்லைகள் வரும்— ஒரு ஊரின் வாரிசை கெட்டுப் போனலும் போகலாம் என்ற படிப்பினையை 'குடும்ப விளக்கு' என்ற படத்திலும் கூறியிருக்கிறேன்.

இன்னும் எத்தனையோ படங்கள்! எவ்வளவோ படிப்பினைகள் இனி மேலுங்கூட படங்களில் புதுப்புதுப் படிப்பினைகளைச் சொல்ல வேண்டும் என்ற ஆவல் என்னுள்ளே வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

உலகில் வாழும் மனித இனங்களைப் பற்றிய பிரச்சினைகளை நல்ல வழியில் தீர்ப்பதற்குத்தான் கலை பயன்பட வேண்டும் என்பதே என் முடிவான முடிவு - தீர்ப்பான தீர்ப்பு!

இயற்கையின் அழகை மட்டும் வர்ணிக்கும் கலைஞன் தன் முழு வேலையையும் செய்து முடித்துவிடவில்லை அது சாதாரணமான ஒரு 'பெயிண்டரின் வேலைதான்! இதைப் படத் தயாரிப்பாளர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளும் நாள் எந்நாளோ?

'கலைச் 'சாலை' பொங்கல் மலரில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் எழுதியது 1957)

★

அவளின் கனவு...

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐயையோ ...நா பெத்த புள்ளேங்களா..."

குறுக்கே பாய்ந்த அஞ்சலியின் தலையுடியை இறுகப் பற்றிதள்ளிவிட்டார் இரத்தினசாமி.

வேரற்ற மரம்போல் கீழே சாய்ந்த அவளுடைய பின் மண்டையில் அடிபட்டுக் குருதி கசிந்தது; அடியாள் ஒருவனிடமிருந்து தடியைப் பிடுங்கி அவளையும் அடிக்கத் தொடங்கினர் அவர்...

ஃ ஃ ஃ

அவர்கள் — விரைய்யன் அழகப்பன், அஞ்சலி ஒரு மணிநேரமாகக் காவல் நிலையத்திற்கு வெளியே காத்திருந்தார்கள். ஐந்தாறுகாவலர்கள் சேர்ந்து உள்ளே ஒருவனை அடித்துக்கொண்டிருந்தார்கள்; சப் — இன்ஸ்பெக்டர் அவனுடைய கட்டைவிரலை வெண்டைக்காயை வளைப்பது போல் பின்னுக்கு வளைத்த போது அவன் சவிக்க முடியாத வேதனையால் துடி துடித்துப் போய் 'ஒஒ...' என்று வேட்டையாடப்பட்டு உயிரி முக்கப்போகும் விலங்கை போல் அலறினன்; ஒருநிருட்டு வழக்கில் அவன் சம்மந்தப்பட்டிருப்பானே என்ற சந்தேகம் உண்மையா. பொய்யா எனத் தீர்மானிக்க அவர்கள் கையாளும் வழிமுறைகள் அவைகள் என்று அஞ்சலிக்கு எப்படித் தெரியும்? அம்மனிதனின் ஓலங்களைக் கேட்டு அவளுடைய மேலிதழ்கள் நடுங்கிக் கொண்டிருந்தது.—பிறகு அம்மனிதனிடமிருந்து எந்தச் சத்தமும் வரவில்லை. ஒருவேளை மயக்கம் போட்டிருப்பானே என்னவோ!

ஒரு காவலாளி அவளிடம் வந்து சொன்னன். 'சேமான் உங்களைக் கூப்பிடுறார்...'

மூவரும் சேமானுனை சப் —இன்ஸ்பெக்டரின் எதிரே போய் நின்ருர்கள். அவர் விரைய்யனை பார்த்து முறைத்துக்கொண்டே கேட்டார்.

'என்னடா விஷயம்?'

அவன் நடந்ததை சொன்னன். மூவரும் தோள்பட்டைகளிலும் தலைகளிலும் போட்டிருந்த கட்டுகளை அவிழ்த்துக் காயங்களைக் காட்டினர்கள். அவ்வளவையும் கேட்டு சப் இன்ஸ்பெக்டர் சொன்னர்:

—'நீங்க ஏதாச்சும் வாய்க் கொழுப்பாப் பேசியிருப்பீங்க இரத்தினசாமி பெரிய மனுஷன்டா. ஏதாச்சும் அபாண்டமாப் பழிபோட்டீங்க, தோலை உரிச்சுப்புடுவேன்...'

அவர்களுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவரும் அவர்களைச் சார்ந்தவர்களும் தான் சட்டத்தைக் காப்பவர்களா? வேடிக்கைதான்! மியாதை என்றுல் இலோசன்னவிலே என்று கேட்கும் இவர்களா மக்களின் சேவகர்கள்? உங்கள் நண்பர்கள் இவர்கள் தானு? அஞ்சலிக்கு அங்கு நிற்கும் ஒவ்வொரு கணமும் முள்ளின் மீது நிற்பதுபோல் இருந்தது.

சப் – இன்ஸ்பெக்டர் எதுவும் எழுதாத மூன்று வெள்ளைத் தாள்களை அவர்களிடம் நீட்டிக் கையெழுத்துப் போடச் சொன்னர்.

அழகப்பன் கேட்டான்:

'வெறும் பேப்பரா இருக்கே. விஷயம் என்னன்னு தெரிடாம எப்படி கையெழுத்தும் போடறது?'

'சேமானுர்'க்குக் கோபம் வந்துவிட்டது.

நாமே. கிராஸ் கேள்வியா கேக்கற... போடுடா கையெழுத்து...'

இருவரும் கையெழுத்துப் போட்டார்கள். அஞ்சலி ரேகை வைத்தாள்.

அன்று சாயங்காலம் சப் இன்ஸ்பெக்டரான சேமானர் இரத்தினசாமி வீட்டிற்கு வந்தார். இருவரும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்; கிச்சடிச்சம்பா நெல் மூட்டைகள் இரண்டும், தோட்டத்தில் விளைந்த காய்களும் பழங்களும் சேமானர் வீட்டிற்கு அனுப்பி வைப்பதாக இரத்தினசாமி சொன்னர்— நட்புணர்வோடு. பதிலுக்கு வீரய்யன் அழகப்பன் இருவரிடமும் கையெழுத்துக்கள் வாங்கிய காகிதங்களையும் அஞ்சலி ரேகை வைத்த காகிதத்தையும் சேமானர் கிழித்துப் போட்டார் – நட்புணர்வோடு

ஃஃஃஃ

அஞ்சலி இப்போது இராமத்தில் இல்லை, பிள்ளைகளோடு சென்னைக்கே போய் விட்டாள். அவர்களிடம்நிலத்திற்காக வாங்கிய முன் பணத்தைத் திருப்பித் தரும்போது பரமசுகு மிகவும் வருத்தப் பட்டார்; அழாக்குறையாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்; என்ன செய்வது? இரத்தினசாமி போன்ற பணத்திமிங்கலங்களையும்,பின்நின்று அவர்களை ஆட்டுவிக்கும் அதிகார வர்க்கத்தையும் எதிர்த்துக்கொண்டு நிம்மதியாக உயிர்வாழ முடியுமா?

அஞ்சலியின் கனவு கனவாகவே முடிந்தது.

உழைப்பிற்கு!
உறுதிக்கு!!



எங்கள் சென்னை நகர்
பிரதிநிதி;
கு. எம். ஜி. மாதவன்,
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4
—டி. விதிவாசம்

தமிழ் அழைக்கிறது!

நெய்வேலி ஜி. சுப்பிரமணியன்

பொங்கற் புதுநாள் தமிழர்களின் நன்னாள். தமிழர்களுக்கென்று இருக்கின்ற ஒப்பற்ற பெருநாளும் இதுவே. தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், உழைப்பு இவைகளை காத்திடுவதும் பழமுடன் கழிதலும் புதியன புகுதலும் என்ற பகுத்தறிவுக்கொள்கை உடையதாகிய விழா பொங்கல் விழா. இந்தத் தகுதிமிக்க பொங்கல் விழாவினைப்பற்றி தான் அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் மூதிய இறுதிக் கடிதத்திலும் குறிப்பிட்டார்.

"உலக நாடுகளில் பலவற்றிலும் தலைநகரங்களில் ஒரு முறைக்கும் மும்முறை சுற்றி வந்தேன். அங்கு எங்கும் விழாக்கள் பலப்பல நடந்தபடியினும்— தமிழகத்தின் பொங்கல் புதுநாள் போன்ற தோர் பொன்விழா இல்லை — நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; தேவிக்கைகள் மதுபான விருந்துகள் பிரகாசமாக; எனினும் ஆர்ப்பரிப்பின்றி — ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுக்களின்றி — ஆனால் புதுமெருகோடு பொலிவுடன் வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கல் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை."

"நாட்டியக் கூடங்களிலே அமளி; பாதையிலே புது வேசம்! மோதல், உயிர்ச் சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு. ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே — மூவரும் மூதாட்டியரும் — ஆனாலும் இளந்தங்கையரும் சிறுமியரும் சிறுமியரும் கலந்தாடிப்பாடிப்பொங்கலோ பொங்கல்! என்ற இசை அது அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்கவிதமான சமூக அமைப்பே இல்லை."

ஆதலின் இத்தகைய விழாவினை சிறப்பாக கொண்டாடி முடிவது தமிழர்களின் கடமையாகிறது. பொங்கல்விழாவை தமிழர் திருநாளாக நாம் கொண்டாடுவது தமிழனுடைய வீரத்தை, விவேகத்தை உழைப்பை வருகின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு உணர்த்திட, மேலும் தொடர்ந்து பின்பற்றிட ஏதுவாகிறது.

தமிழர் திருநாளாம் இந்த நன்னாளில் வீட்டிலே விழா எடுப்பதோடல்லாமல், தமிழர்களின் நல வாழ்வில் முழுமையாக தம்மை ஒட்டுடைத்துக் கொண்ட நம்முடைய கழக அமைப்புகளிலும் மிகச் சிறப்போடும் கொண்டாடுகிறோம். இரு வண்ணக் கொடியேற்றுதல், இனிப்பு வழங்கல், அண்ணாவை அய்யாவை, அவர்களின் தொண்டினை, இயக்கம் வளர அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை — ஏற்றுக்கொண்ட தொல்லைகள், இயக்கத் தொண்டர்கள் தமிழ்மொழி காக்க உன்னுயிரைத் தந்திட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் பொதுக்கூட்ட வாயிலாக சொல்லுவதும், துண்டுப் பிரசுரம்மூலம் நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்துவதும், பெரியார் அவர்கள் பெற்றிருந்த மன உறுதியையும், பேராசிரியர் அண்ணா அவர்கள் கடைபிடித்த அறவழியையும் அன்பு வழியையும் பின்பற்றி இன்றைக்கு கழகத்தைநடத்திச் செல்கிற கலைஞர் அவர்களின் கட்டளை எதுவானாலும் சிரமேற் கொண்டு பணியாற்றிட உறுதி மொழியினையும் ஏற்றுக்கொள்கிறோம்.

இயற்கையின் சீற்றத்தால் பெரும் பொருட் சேதம், இன்னுயிர் நூற்றுக்கணக்கில் பலி. ஆளுவோரின் அலட்சியத்தால் அத்துமீறிய அதிகார துஷ் பிரயோகத்தால் நடக்கின்ற பல்வேறு அவலங்கள். அதிகாரிகளின் அச்சுறுத்தல் பதவிப் பித்தர்களின் வெறியாட்டம், பதவிச் சுகத்தை அனுபவித்தவர்கள் தொடர்ந்து சுகம் காண கொள்கையில் சோரம் போதல், நன்றி மறத்தல், நயவஞ்சகத் திற்குத் துணைபோதல், நாவறியப்பொய் பேசுதல் இன்னபிற கொடுமைகள் அத்தனையும் நடந்தவண்ணம் இருக்கிறது. இதுபோன்ற விடிபாடுகளால் இயக்கம் அழிந்துவிடக்கூடாது, தமிழர் நல்வாழ்வுக்குப் பங்கம் வந்திடக் கூடாது. தமிழின் வாழ தமிழ்மொழி வாழ்ந்தாக வேண்டும். காலம் மாறும். கருத்துக் குருடர்கள் காலத்தால் மாறுவர் என எண்ணி தமிழர் திருநாளாம் இந்நன்னாளை ஏற்றமிகு பெரு நாளாய்க் கொண்டாடிடுவோம். குதூகலித்து மகிழ்வோம்.

"பொங்கல் புதுநாளை ஒட்டி, தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு தமிழரின் தனிச் சிறப்புக்களை குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக் கொள்கிறேன்."

என்று நம் அண்ணன் கடிதத்திலே குறிப்பிட்டார். ஆதலின் தமிழின் இனிமையை அதன் தொன்மையை, தமிழரின் வீரத்தை விவேகத்தை பெற்ற வெற்றிகளை, விருதுகளை, வென்றிட்ட நாடுகளை, வாணிபம் நடாத்தி பெருமையோடு வாழ்ந்திட்ட நிலைமைகளை எல்லாம் நினைப்போம். நீடு புகழ் வரலாற்றினை மற்றவர்களுக்குச் சொல்வோம். தமிழை அழித்திட தாய்மொழிப் பற்றைக் குலைத்திட சதி எவர் செய்திடினும் தடுத்து நிறுத்துவோம். தயங்கோம் தமிழைக் காக்கத் தந்திட வேண்டியது நம் உயிர்தான் என்றால் தந்திடுவோம் தயங்கோம் மொழி காத்திட எத்தகைய தியாகத்தையும் செய்திட சூளுரைப்போம்.

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத் தக்கவிதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுபற்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்து கூறி வருகிறேன்"

என்று அண்ணா கூறியதற்கிணங்க காலம் பொன்போன்றது. மொழிக்கு வந்துற்ற இங்குதனைக் கண்ட அன்று தீக்குளித்து செத்தனரே தமிழ் மறவர்கள், அந்த மறவர்களின் தியாக வேள்வியால் தான் தமிழ் அழிந்துபடாமல் சிதைந்து படாமல் வேறு ஒரு மொழி ஆதிக்கம் செலுத்திடாமல் இருக்கிறது.

கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த தமிழை அழித்திட வேறு ஒரு மொழி தமிழ் மொழிமீது ஆதிக்கம் செலுத்திட எவர்கள் இந்தியை நுழைத்திட முயலுகின்றனர்.

காலம் நம்மை அழைக்கிறது. தமிழுக்கு வந்துற்ற இங்குதனைப்போக்க களம்புகத் தயாராவோம்.

மாநில மக்களெல்லாம் தங்கள் உழைப்பின் பயனை அனுபவித்திட சுயதேவையை தாங்களே பூர்த்தி செய்திட மாநில சுயாட்சி பெற்றிடுவோம்.

தமிழன் எவரையும் தாழ்த்திடான் அதேபோது யாருக்கும் தாழ்ந்தோடான் என்ற உண்மையை உலகுக்கு அறிவிப்போம். தமிழர்கள் நல்லவர்கள் வல்லவர்கள் என்ற வரலாற்றுச் சிறப்பினை நாடறியச் செய்வோம்.

★

பாதை சரியில்லை...

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

டங்கள் நமக்கு; எனினும் இரங்கத்தக்க நிலையில் இந்தியா! ஏழ்மையில் வாடும் பாரத புத்திரர்கள்! இந்த இழி நிலைக்கு எவர்தான் — எதனைதான் காரணம்?

சாதனைப் பட்டியலை சராசரியாகப்பொழியும்சர்க்கார் நடத்தோர் விரிந்து கொண்டே போகும் இந்த வேதனைப்பட்டியலுக்கு என்ன விளக்கம் கூறப்போகிறார்கள்? பொருளாதார புரட்சியின் மூலம் பொன்னுலகம் காண்பது ஒருபுறம் இருக்கட்டும் புரையோடிப்போயுள்ள சமுதாய ஜீவிகளைச் சாய்த்தொழிக்க என்னதான் செய்வதாக உத்தேசம்?

யாரோ ஒரு புத்திசாலி சரியாகச் சொன்னான் — வளப்பம் நிறைந்த ஆனால் வறுமை மிகுந்த நாடு இந்தியா — என்று! உண்மைதான் நம் வறுமை மண்மாதா தந்ததல்ல; மனிதன் செய்த பஞ்சமிது. இல்லாமை இயற்கை தந்ததல்ல; இந்தியர்களால் இந்தியர்கள் மீதே எய்யப்பட்ட விஷம் தோய்ந்த அம்பு! நஞ்சு பூசிய வாள்!

சமுதாயத் திருடர்களான அந்த இந்தியர்களை முன்னாள் தொழிலாளர் தலைவரும் இந்நாள் மத்திய அமைச்சருமான தோழர் ஜார்ஜ்பெர்னாண்டஸ் ஒதோர் அடையாளம் காட்டுகிறார் பெரிய பணக்காரர்கள் — ஆலை அதிபர்கள் — தொழில் மன்னர்கள் — நிலப் பிரபுக்கள் — கறுப்புப்பண எஜமானர்கள் ஆகியோர்தான் இந்தியாவின் பெருவாழ்வுக்கு முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள்... அவர்களது சொத்துக்களில் 2 சதத்திற்குமேல் அவர்களுக்கு சொந்தமில்லை. 98 சதவீதம் பொதுமக்களுடையது தான். இவ்வாறு பணம் அவர்களிடம் அநியாயமாகக் குவிந்திருப்பது தான் சமூக பொருளாதார அநீதிக்கு முக்கியமான காரணம். இந்தக் கும்பல் பெரும் பெரும் செல்வத்தை மட்டுமின்றி தகவல் தொடர்பு ஸ்தாபனங்களையும் தங்களது ஆதிக்கத்தில்வைத்திருக்கிறது!

ஆக — சமுதாயத் திருடர்கள் யார் யார் என்பது பெர்னாண்டஸ் போன்ற பெரியவர்களுக்குத் தெளிவாகவே தெரிகிறது. ஆனால் கையும் களவுமாக அவர்களைப் பிடிப்பதற்கு யார் முற்போக்குத் திட்டங்களையும் தீவிரமாக அமுல் செய்யாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் அதற்குத் தேவையான மன உறுதி-திடசித்தம் மத்திய அரசுக்கு இல்லை" என்பதாக!

ஒரு அற்ப ஆசை! தோழர் பட்ட செல்வத்தில் 98 சதவீதத்தைப் பிடுங்கி சமுதாயத்திற்குப் பங்கிட்டுத் தருவது தானே...

தொழில் நிறுவனங்களை நாட்டுடமையாக்கி தகவல் தொடர்பு ஸ்தாபனங்களை அரசாங்கம் மேற்கொள்வது தானே...

ஆனால் பெர்னாண்டஸ் பேசுகிறார்: இம்மாதிரியான பெரிய பெரிய தொழில் நிறுவனங்களைச் சமாளிப்பதுதான் சிரமமாக இருக்கிறது" என்று!...

பிரதமருக்கும் பெர்னாண்டசுக்கும் - சிரமத்தைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு தானே ஆட்சிக் கட்டிலும் — அதிகாரமும்! பின் தயக்கம் ஏன் — தவிப்பு எதற்கு?

இவ்வாறு பொறுப்பில் இருப்பவர்களின் தயக்கத்திற்கு என்ன காரணம் என்பதை — நாமல்ல — ஜனதாவின் தலைவர் திரு சந்திரசேகரே கூறுகிறார் "தீவிரமான சமூக பொருளாதாரக்கொள்கைகளையும் முற்போக்குத் திட்டங்களையும் தீவிரமாக அமுல் செய்யாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம் அதற்குத் தேவையான மன உறுதி-திடசித்தம் மத்திய அரசுக்கு இல்லை" என்பதாக!

சந்திரசேகர் மத்தியில் மந்திரியாவார் என்று கிசுகிசுக்கப்படுகிறது, அது நிஜமாகிவிட்டால் தற்போதைய அவரது மனவுறுதி அப்போதும் மறையாமல் இருக்குமாக!

உண்மையிலேயே இந்திய அரசின் அமைச்சர்களுக்கு நோயின் கருமை தெரிகிறது! நோய்க்கான காரணங்களும் தெரிகின்றன. எனினும் மக்கள் தந்த அதிகாரம் என்ற மருந்தைப் பயன்படுத்தி நோயைத் தீர்க்கும் மனவுறுதி இல்லை; தேவைப்படும் திடசித்தம் கிடையாது!

இந்த நிலையில் இந்திரா காந்தியைப்போல் சாதனைப் பட்டியலில் அடுக்கி வரும் தேசாய் "தாங்கள் சரியான பாதையில் தான் நடக்கிறோம்" என்று சங்கநாதம் செய்கிறார்.

'பாதை சரியில்லை' என்று எச்சரிப்பது நமது கடமை!

ஒங்குக உண்ணு புகழ்!
வாழ்க கலைஞர்!
எமது வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
இங்ஙனம்
கருணை ஸ்டோர்
மளிகை & விறகு மண்டி.
உரிமையாளர்:
ஜி. காத்தவராயன்
சோலையார் பேட்டை (வ. ஆ)

—தி. க. சிவசங்கரன்

தெருக் காட்சி

போர் வீரர்களை அழைக்கும் பாடல்.

"நாட்டுக்கு ஆபத்து, வீட்டுக் கொரு வீரன் தேவை."

வீரர்கள் எழுச்சியுடன் வருகிறார்கள்.

வீட்டின் உட்புறம் பலராமன் சோகமாகப் பட்டாளத்து உடையை அணிந்து கொண்டிருக்கிறான்.

வாளும் கேடயமும் ஒருபுறத்தில் தொங்க விடப்பட்டிருக்கிறது.

தொலைவிலிருந்து போர் வீரர்களை அணிவகுப்புக்கு அழைக்கும் சத்தம் கேட்கிறது.

அந்தச் சத்தம் கேட்டதும் பலராமன் முகத்தில் மேலும் பயம் அதிகரிக்கிறது.

மனைவி வருகிறாள்; அவன் சோகத்தைக்கண்டு கேலி செய்கிறாள்:

அ:— நீயும் ஒரு ஆம்பிள்ளைதானா? இப்படிப் பயந்து சாகறியே ஊர் நாடெல்லாம் ஒண்ணு திரண்டு போகுது நாட்டைக் காக்க; நீ இப் பத்தான் ஒய்யாரம் பண்ணிக்கறே...

ப:— ஆமாம்... ஒய்யாரம் பண்ணிக் கொள்ளுங்க, ஒய்யாரம்! கண்ணுல வீட்டுக்கில்ல இப்ப போறது (அழுகுரலில்) போற இடத்திலே என்னென்ன நேரிடுதோ — காலே போகுதோ, கையே போகுதோ— உயிரேதான் போகுதோ...

அ:— கால் போகுதோ, கைபோகு தோன்னு பயந்துக்கிட்டு வீட்டுக குள்ளே இடந்தர மானமில்ல போகும்.

ப:— (பல்லைக் கடித்துக்கொண்டு) போறேன் — போறேண்டிம்மா போறேன் — பொழைச்சி வந்தாப் பேசிக்கறேன். நீ போ, எனக்கு ஒண்ணும் புத்தி சொல்ல வேணும்...

[மனைவி வாளும் கேடயமும் எடுத்துத் தருகிறாள். உடையைச் சரிப் படுத்தி விடுகிறாள். பால், பழம் கொடுக்கிறாள்.]

ப:— பாலும் பழமும் கொடுக்கறயா, ரொம்ப அன்பா ஆத்தாளுக்குக் கிடா வெட்றபோது கழுத்திலே மாலே போட்டு, பொட்டு இட்டு இழுத்துக்கிட்டுப் போறுங்க இல்லே...

அ:— அப்படி எல்லாம் எண்ணிக் கிட்டு மனசைக் குழப்பிக்காதே... இதோ, பவானி பிரசாதம்.

[நெற்றியில் திலகம் வைக்கிறாள்]

[பலராமன் பாலும் பழமும் சாப் பிட்டுக்கொண்டு]

ப:— பாலும் பழமும் சாப்பிட்டுவிட்டு படுகளத்துக்குப் போறதைவிட, பழைய சோறு சாப்பிட்டுவுட்டு ஏரடிக்கப் போகலாம்...

[ஊதுகுழல் சத்தம் கேட்கிறது]

— [முகத்தில் சோகம் கப்பிக் கொண்ட நிலையில்] ஊதிட்டாண்டி உசிரைக் கொண்டாந்து குடுடான்னு கூப்பிடறான், பாவிப்பய...

அ:— (அவன் வாயை மூடியபடி) இப் படி எல்லாம் பேசாதே நீ ஒரு வீர னில்ல... கையிலே என்ன? கத்தி.

ப:— எதிரியிடம் மட்டும் என்னவாம்? கத்திதான்...

[வெளியே இருந்து ஒரு போர் வீரன், "பலராம், பலராம்" என்று கூப்பிட அந்தச் சத்தம் கேட்ட அன்னம்...]

அ:— உள்ளே வந்துடுவான், உன் சிநேகதன்...கொஞ்சம் புன்சிரிப்பா இரு...உம் கொஞ்சம்...அட இழவே! அந்த அழுமூஞ்சியைக் கொஞ்சம் மாத்திக்கோ...அதோ.

[நண்பன் உள்ளே நுழைகிறான். அப்போது பலராம் மனைவிக்குத் தைரியம் கூறுவதுபோல நடித்து]

ப:— கலங்காதே? போர்வீரன் மனைவி புலம்பலாமா? போருக்குக் கிளம் பும்போது...

[அன்னம் கண்களைத் துடைத்துக் கொண்டு ஏதோ நினைவிற்கு வந்த தால் இருங்க இதோ வந்து விடு கிறேன் என்று கூறிவிட்டு உள்ளே போகிறாள்]

ப:— (நண்பனிடம்) நாப்ப எவ்வளவு தான் தைரியம் சொன்னாலும் பொம்பளைத்தானே பாவம் கலங் கரு...கதறுரு... கையைக் காலைப் பிடிச்சுக்கிட்டு கெஞ்சிரு; என்ன ஆயிடுமோ ஏது ஆயிடுமோன்னு பயப்படுரு; இவ்வளவு நேரமா சமா தானம் சொல்லிக்கொண்டிருந்தேன்.

நண்பன்:— நம்ப வீட்டிலேயும் இதே தான்.

ப:— ரொம்ப கலங்கினுங்களா?

ந:— அதை ஏன் கேக்கறே, போ, ஒரே அழுகைமயம்...

ப:— இவ இருக்கிறாளே...

[அன்னம் உள்ளே இருந்துவந்து, ஒரு கங்கணம் எடுத்துவந்து பலராம் கரத்தில் கட்டுகிறாள்:]

ந:— பலராம்! உன் மனைவியின் அன் பைப் பார்த்தாயா?

ப:— பார்த்தேன்... காலையிலே இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்...

[மனைவி பலராமனை அன்புடன் பார்க்கிறாள். பலராம் பயத்துடன் பார்க்கிறான். மனைவி நண்பன் இருப் பதை ஜாடை காட்டுகிறாள். உள்ளே மறுபடி சென்று திருஷ்டி கழிக்கும் ஏற்பாட்டுடன் வருகிறாள். திருஷ்டி கழித்து வழி அனுப்புகிறாள்.]

நாட்டைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை விளக்கிடும் பாடல் கேட்கிறது.

படைவரிசைகள் செல்லுகின்றன. போர்க காட்சிகள்.

அடிபட்டவர்களைத் தூக்கிக் கொண்டு வருகிறார்கள்.

வைத்திய விடுதி.
சில வீரர்கள் அங்கு இருக்கிறார்கள்.

கண் இழந்தவர்கள், கால் இழந்த வர்கள், கரம் இழந்தவர்கள்; பலராமன் அதைப் பார்த்து பயப்படுகிறான்.


பலராமன் காலிலே பெரிய கட்டு கட்டிக்கொண்டிருக்கிறான்.
வலி தாங்க முடியாதவன்போல கூவுகிறான்.

வைத்திய விடுதிக்காரன்:— பொறுத் துக்கொள்ளப்பா...அதிகமாகக் கூவாதே...மற்றவர்களும் அதைரி யப்படுவார்கள். நாலைந்து நாளிலே குணமாகிவிடும்...

பலராமன்:— நாலைந்து நாளுக்களா? இல்லீங்க...இரண்டு நாள் போது முங்க...

வை:— அப்படியா? பிறகென்ன? இரண்டு நாள் வலியைத் தாங்கிக் கொள்ளக் கூடாதா?

ப:— (அவனை முறைத்தபடி) இரண்டு நாள்லே வலியா போய் விடும்—உயிரு ஐயா, உயிரு போயி டும் — இங்கேயே கிடந்தா — தெரி யுதா — இதுக்கு உடனே பச்சிலே வைத்துக் கட்டாப்போனு பிராணன் போயிடும் — இங்கே பச்சிலே கிடை யாது...



[மேலதிகாரி வருகிறான்; இருவரும் பேசுகின்றனர்.]

மேலதிகாரி: (வேறோர் வீரனைகாட்டி) துணைக்கு இவனை அழைத்துக் கொண்டு ஊருக்குப் போவதைய செய்துகொண்டு...

ப:— (மகிழ்ச்சியுடன்) குணமானதும் ஒரு விநாடிகூடத் தாமதிக்க மாட் டேனுங்க...

மேல:— அதுதான் சுத்த வீரனின் இலட்சணம்; போய்வா...துணைக்கு?

ப:— வேண்டாங்க...இங்கேயே போர்

(தொடர்ச்சி 17—ம் பக்கம்)

திராவிடத் திருநாளாம் இப் பொங்கல் நன்னாளில் எங்கள் உள்ளங்கனிந்த வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

இப்படிக்கு
சி. கே. சின்னராஜ வுண்டர்
முன்னாள் எம்.பி
வியாபாரர், திருப்பத்தூர் (வ. ஆ)

∴ ∴ ∴

உரிமையாளர்:
சி. கே. சி. திரையரங்கம்
திருப்பத்தூர். (வ. ஆ.)

—சி. கணேசன்



அவளால் அவர்...



வீரர் தொகை குறைவு - இவருட் என்னோடு வந்தா...

[அனுமதிச் சீட்டுப் பெற்றுக் கொண்டு பலராமன் தள்ளாடியபடி நடக்கிறான்.

களத்தைத் தாண்டி ஓரிடம் பல ராமன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கால்கட்டுகளை அவிழ்த்து உள்ளே ஓட்டி வைத்திருந்தவைகளை பய்த்தெறந்தபடி]

பல: படாத பாடுபட்டுஇவனுங்களை மொத்திவிட்டேன். ஆனா, வீட்டிலே? எம காதகியாச்சே: இவனுங்க நல்ல மனுஷனுங்க, நம்பிச்சி டானுங்க. அவ? பத்ரகாளியாச்சே விடப்போறாளா?

[யோசித்தபடி செல்கிறான்.]

பலராமன் காட்டுப்பாதையில் செல்கிறான்.

ஒவ்வொரு சத்தமும் திகிலாக இருக்கிறது.

பல: (பயத்துடன்) அந்த இடமே பரவாயில்லே போலிருக்குதே! எவன் வெட்ட வர்றான் எவன் கொல்ல வர்றான் என்ன தாவது தெரியும்...இங்கே (மிரள மிரள பார்த்தபடி) எந்தப் பக்கத்திலே இருந்து எதுவந்து பாயுமோன்னு தெரியலேயே...

[மரத்தின் ஓடுக்கில் ஒரு மூட்டை தெரிகிறது. அடே...

மூட்டையை எடுத்துப் பிரிக்க அதில், வேஷச் சாமான்கள் இருக்கக் கண்டு, பலராமனுக்கு யோசனை உதிக்கிறது. காவியுடைகளை அணிந்து கொள்கிறான். தாடிமீசை ஒட்டிக் கொள்கிறான்.

ஊர்க்கோடி சென்று ஒரு மரத் தடியில் அமர்ந்து விடுகிறான்.]

கோவில் குளத்தருகே பெரிய ஆலமரப், மண்மேடு.

பலராமன் சாது வேடத்தில் அமர்ந்திருக்கிறான். எதிரே, சிறிய பவானி சிலை!

சில சுவடிகள் உள்ளன. பெண்கள். குடம் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

சில பெண்கள், பாரமான மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்.

ஒரு மாது: நமஸ்காரம் சாமிடாரே! எந்த ஊரு...?

சாது: ஆசீர்வாதம்...எல்லாம்நமக்கு ஊரே...

மாது: இந்தச் சண்டை எப்படி முடியும்?

சாது: ஜெயம் நிச்சயம்...

மாது: நம்ம பக்கம் தானுங்களே...

இன்னொரு மாது: அவருதான் எல்லா ஊரும் அவருக்குச் சொந்த ஊர் என்கிறாரே...

எந்த நாடு ஜெயித்தா அவருக்கு என்ன?

சாது: காஷாயம் தரித்தால் என்ன? கமண்டலம் எடுத்தால் என்ன? நாட்டுப்பற்று பட்டுப்போய் விடுமா...பெண்ணே! உன்புருஷன்...

மாது: (பயந்து) அவருக்கு ஒரு ஆபத்தும் வராதுங்களே...

சாது: நீட்டு கையை - மூடு கண்ணை ...(ரேகை பார்த்தபடி) ஆஹாஹா உன் புருஷன் பேர் ரங்கன்தானே...

மாது: ஆமாம்...உங்க மகிமையே மகிமை...

சாது: மூடு கண்ணை...பிராணபயம் இல்லே, உன்புருஷனுக்கு...கண்ணைத் திற...

மாது: பிராணபயம் இல்லேயா...? ஆண்டவனே, இப்பத்தான் மனம் நிம்மதியாச்சு.

சாது: பிராணபயம் இல்லே என்று

(தொடர்ச்சி- 18ம் பக்கம்)

திங்கள்

கவிதை நா. பூபதி

மாதத்தின் மறுபெயரே திங்கள் என்பர்!
வாரத்தின் இரண்டாம்நாள் திங்கள் அன்றே
மாதவனின் முகத்திற்கோ உவமை யாகும்
முழுமதியைத் திங்களெனச் சொல்வ துண்டு!
காதலர்கள் உனைக்கண்டால் களிப்புக் கொள்வர்!
காதலுக்கோ உன்னைத்தான் சாட்சி யாக்கிக்
காதலனே வளர்த்திடுவர்! கருமே கத்தில்
கணநேரம் நீமறைந்தால் சிவக்கும் கன்னம்!

காதலனைக் காணுமல் ஏங்கங் கொள்ளும்
காதலியோ உன்னிடத்தில் தூது சொல்வாள்!
பேதையவள் பிரிவாலே வாடக் கண்டு
பெருக்கோடும் வெள்ளம்போல் ஓடு கின்றாய்!
சூதறியா அவள்நெஞ்சம் அமைதி கொள்ளும்;
சுடுநீரால் விழிமலர்கள் வாடிப் போகும்!
காதலியாம் அல்லிமலர் காண்ப தற்கே
கடிதாகச் செல்கின்றாய் அறியாள் அன்றே!

மறுநாளும் காதலனைக் காண்கி லையேல்
மனம்நோக ஏசிடுவாள் உன்னை! பின்னர்
ஒருநாளில் அவன்வந்து தழுவும் போது
உன்முகத்தில் விழிக்காமல் நாணிப் போவாள்!
திருநாளாம் திருமணமே கூடி விட்டால்
தினம்உன்னை மனதார வாழ்த்தச் செய்வாள்!
கருவாகித் தாயாகிப் பிள்ளை யோடு
கைகோத்து விளையாட அழைப்பாள் உன்னை!

வெண்ணிலவே! தண்ணிலவே! விண்ணில் மேவும்
வான்மதியே! வளர்பிறையே! தேய்பி றையே!
என்றெல்லாம் அழைப்பதுண்டு; உன்னைப் பற்றி
எத்தனையோ கதைகளுண்டு; எதனை நம்ப?
விண்மீன்கள் புடைசூழ நீல வான
வீதிஉலா வருகின்றாய்; குளிர்ச்சி யூட்டும்
தண்ணொளியைப் பொழிகின்றாய்; அதனால் தானே
தையலர்தம் முகத்திற்கே உவமை சொன்னார்!

இரவில்நீ வருவதாலே கதிரோன் தந்த
இரவல்ஒளி உனக்கென்பர் உண்மை தானே?
சிரமீது சிவன்உன்னை வைத்தான்; உன்றன்
சிரமீது கால்வைத்தார் மேலை நாட்டார்!
புரமெரித்த சிவன்எங்கே போனான்? இன்றே
புதியதொரு வரலாறு படைக்கக் கண்டோம்!
வருவதற்குத் துடிக்கின்றோம் உன்னி டத்தில்
வாழ்வளிக்க வளமுண்டா? உரைப்பாய் நீயே



ஓங்குக அண்ணாவின் புகழ்! வருக கலைஞர் ஆட்சி!!

அன்னைத் தமிழக தில் அலாது ஆங்க ங்கே
உள்ள தமிழர் தம இல்லங்களிலும் கொண்டாடி மகி
ழாதது விட்ட பொங்கல் நன்னாளில் உன்னத தலைவர்
கலைஞர் போல் ஊரார் பேரறிஞர் வாழ்க! என
உளமார வாழ்த்துகின்றோம் ஏற்றிடுக.

அன்புள்ள,

வ. ஆ. தலைமன் — மாவட்ட தி.மு.க. பிரதிநிதி
வி. இராசா — 1-வது வட்டப் பிரதிநிதி
ஜி. நடராசன் — துணைச் செயலாளர் 2-வது வட்டம்
பி. சீனிவாசன் — உறுப்பினர் தி. மு. க.

திருப்பத்தூர் (வ. ஆ)

சி. கணேசன்

அவளால் அவர்....

(17-ம் பக்கத்தொடர்ச்சி)

மட்டும்தானே, சொன்னேன், அதற் குள்ளாகவா ஆனந்தம்?

மாது: ஐய்யய்யோ! என்னங்க சாமி ஸ்ஷயம்?

சாது: உயிர் போகாது...ஆனால் அவனுடைய கரம் ஒன்று துண்டிக்கப் பட்டுப் போகும்.

சம்போ! மகேஸ்வரா!

மாது: தெய்வமே! இந்தக் கதியா என் புருஷனுக்கு...இதுக்கு ஒரு விமோசனமும் இல்லேடா...

சாது: உண்டு. உன் புருஷனுக்கு என்னென்ன பண்டம் பலகாரத்தின் மீது பிரியமோ, அவைகளே 14 நாட்கள் உங்கு கொண்டு வந்து, நாகத் துக்குப் படையல் போடு. தோஷம் போகும். கை போகாது.

மாது: ஆகட்டுங்க...ஆகட்டும்.

(வேறு சில பெண்களும் கை காட்டுகிறார்கள்,)

ஊரில் ஒரு தெரு பெண்கள் தண்ணீர்க் குடத்துடன்)

ஒருத்தி: உள்ளதை உள்ளபடிச்சொல் கிறேனடி...மகா சக்தி வாய்ந்தவரடி இந்தச் சாது...

மற்றவள்: என் புருஷனுக்குமுன்னே சண்டையிலே. ஒரு காது போயிட் டுதே, அதைக்கூடச் சொன்னதடி...

மாது: பெரிய அதிசயந்தான்! (அன்னம் இடுப்பில் கூடையுடன் வருகிறாள்.)

அன்: என்னத்தடி கண்டுட்டிங்க அதிசயம்? அத்து மீறி ஆகாசத்திலே பறந்துச்சா?

மாது: கேளண்டி, நடந்ததை. மரத் தடியிலே ஒரு சாமியாரு உட்கார்ந் திருக்காரு...

அன்: பெரிய அதிசயந்தாண்டி-மரத் தடியிலே சாமியாரு உட்காராமே, உங்க மாமியாரா போயி உட்கா ருவா?அதிசயம்சொல்லவந்துட்டா, அதிசயம்

மாது: உன்னோடு யாருடி கே வாங்க...இஷ்டமிருந்தா போய்ப் பாரேன்...உள்ளதை உள்ளபடி சொல்றது...என் புருஷன் பேரு... இவ புருஷனுக்குக் காதுபோனது— நடந்தது நடக்கப்போவது எல் லாம் சொல்றது...

(அன்னம் செல்கிறாள் சாதுவைக் காண)

மரத்தடியில் சாது அன்னம் வரக் கண்டு பயந்த கண்களை மூடிக்கொள் கிறான் பலராம்

அ:— அட, நான் வந்த நேரமாப் பாத்தா, கண்ணை மூடிக் கொள் ளோனும் சாமியாரு? எப்படிண்ணை தொறப்பாரோ தெரியல்லே; வீட் டிலே வேண வேலே கிடக்குது சாமி சாமி!

(உரத்த குரலில்) சாமீ!

(சாது கண் திறந்தபடி

சா:— சாந்தியைக் கெடுத்து விட் டாயே...

அ:— என்னங்க கோவிக்கிறீங்க: ஊரே உங்களேப்பத்தி புகழுது... தெரிஞ்சித்தா புண்யம்னுதானே வந்தேன்.— கோவிக்கறீங்களே... (கையை நீட்டியபடி) என் கையைக் கொஞ்சம் பாருங்க.

சாது, அவள் கை ரேகையைப் பார்த்தபடி)

சா:—பெண்ணே; நீ பெரிய அதிர்ஷ்ட சாலி

அ:— என்னங்க இது அண்டப் புளுகு! எம் புருஷன் ஒரு அன்னக்காவடி, வேலே வெட்டிக்கும் போவாமே சத்திரம் உண்டா சாவடி உண் டான்னு சுத்திக்கிட்டுக் கிடக்கும்...

சா:— (முறைத்தபடி) யார்? உன் புருஷனா? அபசாரம்! அபசாரம்! அன்னம்...

அ:—(திடுக்கிட்) ஐயோ, என் பேரு எப்படிச் தெரிஞ்சுது?

சா:—ஆண்டவன் அருள். அன்னம்! உன் புருஷன் சாமான்யமானவ னில்லே வீரன்...

அ:—இருங்க இருங்க சாமியாரே: நீங்க என்ன; என் கைரேகையைப் பார்த்துட்டா இதெல்லாம் சொல் றீங்க

சா:—இதோ பார். இது உன் புருஷன் ரேகை...இது புகழ் ரேகை...இரண் டும் ஒன்றுசேர்ந்துகிறது பார்த் தாயா? உன் புருஷன புகழோடு இருப்பான் என்று பொருள். அவன் மகாவீரன்.

அ:—(சிரிப்பை அடக்கிக் கொண்டு) எம் புருசனு? எம் புருசனேயா மகா வீரனுன்னு சொல்றீங்க என்னங்க இது, வேடிக்கையாக இருக்கு? எம் புருஷன் வீரனு! அது பாவம். தத்த பயந்தாங் கொள்ளி. தொடை நடுங்கி, நான், பொஞ்சம் கோவமா, தொட்டுப் போட்டா, எட்டடிக்குத் தரவும்...நீங்க என்னன்னு அவரு பெரிய வீரரு சூரருன்னு சொல் றீங்க

சா:—உன் புருஷனுடை அருமை பெருமை உனக்குத் தெரியவில்லே. நாடே கொண்டாடப் போகிறது. இப்போதே யுத்தக் களத்திலே, அவன் வீரத்தைப் புகழ்கிறார்கள் எல்லோரும்

அ:—யுத்தே பட்டாளத்தோடே போக வைக்க நான் பட்டபாடு எனக்கல்ல தெரியும்! அழுமூஞ்சி யைத் தொடைச்சி அக்கம் பக்கம் தெரிஞ்சா கேலிசெல்வாங்களேனு சொல்லி, சட்டையை மாட்டி, பொட்டு வெட்டு...

சா:—பாலும் பழமும் கொடுத்து

அ:—(ஆச்சரியப்பட்டு) அடி அதெல் லாமும் தெரிஞ்சிருக்குதா...தெரிந் தான்....ஆனு அதைப் போயி,

(தொடர்ச்சி 21-ம் பக்கம்)



"தீரகபயரத" தாகங்கள்

ச. அழகன் மு.தி.

பறிக்கப்படமுடியாதமணி மகுடத்தைச் சூடிக் கொண்டிருந்த ஜார் அரசனின் சிம்மாசனத்தைத் தூள்தூளாக்கிக் காட்டுவதற்கு மாவீரன் லெனினுக்குப் பயன்பட்டவர்கள் பெரும்பான்மையோர் இருபது வயதுக்குட்பட்ட இளைஞர்களே.

இதயத்தில் வெடித்துக் கொண்டிருந்த புரட்சிப் பிரகடனங்களைப் பகிரங்கப்படுத்தப்பட முடியாத சர்வாதிகார நாட்டில் லெனின், பாசறை நடத்திய இடங்களில் டலிருட்டுகைகளேயாகும். அச்சு பிரதிகளுக்கு வாய்ப்பில்லாத தால் எழுத்துப் பிரதிகளேயே அவனது இயக்கத்தவர் மக்களிடையே நடமாடவிட்டனர் லெனின் தன்து தோழர்களுக்குப் பயிற்சி நடத்துகிற போது, அவனது வாசகங்களில் முக்கியத்துவம் பெற்ற கருத்து—

'சர்வாதிகாரத்தை வீழ்த்துகிற நமது மகத்தான பணியில், தோழர்களே உங்களைக் கேட்டுக்கொள்வேன். முதலில் உங்கள் நெஞ்சில் நீங்கள் நிறுத்திவைக்கவேண்டிய எண்ணம்—முதலில் நீஒருதோழன; இரண்டாவது நீ ஒரு கம்யூனிஸ்ட்.''

பயிற்சியின்போது இயக்கம் நடத்துகிற தலைமகன் கூறிய இந்த வரிசைகங்கள் இதயங்களை இணைத்த விதம் தான் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்

தமிழ்க்கனல் கொப்புளிக்க மூன்று, நான்கு தலைமுறைகளாக ஏங்கிக்கொண்டு, இந்தி ஏகாதிபத்தியத்திற்கு ஒரு முடிவு ஏற்படாதா —எனறு புகைந்து கொண்டிருப்போருக்கு திருச்சியில் நடைபெற்ற மாநில இந்தி எதிர்ப்புமாநாட்டில் ஏற்பட்ட உணர்வுகள் திராவிடர் இயக்கத்தின் காக்கப்படவேண்டிய வரலாற்று மையத்தை நினைத்துப் பார்க்கும் நிலை ஏற்பட்டது.

மாநாடுகள் கூட்டினோம்
போராட்டங்கள்
நடத்தினோம்
தீர்மானங்கள்
பிறப்பித்தோம்
தோழர்களைத் தியிலும்
தாக்கினார்த்தோம்
—இப்படிப்பட்டவரலாறுகள் அமைந்துவிட்ட பின்னர்

இன்னும் இந்தி எதிர்ப்புக்கு ஒரு வழியும் இல்லையா?

இந்தக் கேள்விக்கு விடை பெறுவதற்கு முன்னர் உங்கள் சிந்தனையில் தமிழனின் இன மான உணர்வுகள் மொழிப் பற்றுமனமும் தூக்கப்பட வேண்டும் என்றுசுட்டிக் காட்டப்பட வேண்டியது அவசியம்

கேரளச் சகோதரர்கள் தங்கள் நாட்டின் எழில் வளத்தைக்கூட இழக்கத் தயாராக இருக்கிறார்கள்: எழுத்து மன்னன் தகழியை காயகர்த்தாக்கள் பொற்கொட்டை வர்க்கியை வைக்கும் பஷ்ரை இழக்கத் தயாராக இல்லை.

காரணம் அவர்கள் மலையாள மொழிக்கு அணிகலன்களைச் சூட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கர்நாடகத்துச் சகோதரன் அந்த மாநிலத்தின் உயிர் நாடியான கோலார் தங்க வயலைக கூட இழக்க தயாராக இருக்கிறான்; சவராம் கரந்த போன்ற நாவலாசிரியர்களை இழக்கத் தயாராக இல்லை.

காரணம், அவர்கள் கன்னடத் தாய்க்குப் பெருமைப் பொன்கணிகள் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்பதுதான்.

ஆந்திரத்தோழன்பெருமையோடு நம்மைப பார்த்துக் கூறுகிறான்—

'உங்களுக்கு மட்டுமா பாரதிதாசன்? இதோ எங்களுக்கு தேவுலபல்லி கிருஷ்ணசாஸ்திரி' என்று. வடமொழி கலந்துவிட்டாலும் தெலுங்குத் தாய்க்கு அவர்கள் பெருமை சூட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் அந்த இனிய நினைவுகளைப் பெருக்குகிறார்கள்.

மராட்டியத் தோழன்—

'மஹி எலி என வர்ணிக்கப்பட்டு மொகலாயப் போரசுக்குக் கல்லறை கட்டிய சிவாஜியால் ஏற்பட்ட பொறாமையை விடக் தாழ்த்தப்பட்டோர் போர் முரசம் அம்பேத்கார் பிறந்த பெருமையைவிட—எங்கள் மராட்டியத் தாயின் பெருமையை இந்திய மொழிகளில் உயர்த்திய காண்டேகர் பிறப்பால் பெருமை கொள்கின்றோம்' என்றுதலைநிமிர்ந்து கூறுகின்றனர்.

என்ன காரணம்?

'இமயத்தின் முடியிலே இருந்து குமரியின் அடிவரை ஒவ்வொருவனும் உதட்டில் தேக்கித் தொடுக்கிற 'ஜனகண மன' கீதம் தந்த தாகூர் பிறப்பால் காவிய கர்த்தாக்கள் சரத்சந்திரர் பக்கிம் சந்திரர் பிறப்பால் எங்கள் வங்கத்தாய் இந்திய இலக்கிய வானின் முழு நிலவாகிவிட்டாள். இனி வங்கக் கடலே நுழைந்து எங்கள் கல்கத்தலை அழித்தாலும் எங்களுக்குக் கவலையில்லை என்று வீம்பித் துடிக்கும் மார்பினை நிமிர்த்திக் கூறுகிறான்.

என்ன காரணம்?

இலக்கிய வளமில்லாத இருபதாண்டுகால இந்திக்கும் பெருமை சேர்த்த பிரேம் சந்தின் பிறப்பால் இறுமாப்பு தெய்துகிறான் இந்தித்தோழன உலகின் பலமொழிகளில் அவனது சிறு கதைகள் மொழி பெயர்க்கப்பட்டு. இந்தியின் பெருமை உயர்ந்திருக்கிறது என்ற இதயபூரிப்பால்!

என்ன காரணம்?

பூகோளப் படத்தில் புள்ளி போல் தெரியும் சின்னஞ்சிறு இங்கிலாந்துக்குச் சொந்தக் காரன் கூறுகிறான்.

நாங்கள் பிடித்து வைத்திருக்கும — காலனி நாடுகளை இழக்கத் தயார்; கடல் வாணிபத்தை இழக்கத் தயார்; இங்கிலாந்தையே இழக்கத்தயார் ஆனால் விழிப்பார்வை இழந்தும் எங்கள் மொழிப்பெருமை விளங்கச் செய்த சுவிஞன் மில்டனை, ஆங்கிலத்தின் பெருமையை உலகப் பலகணியில் எற்றிவைத்த நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரை— இழக்கத் தயாராக இல்லை!'

என்று துணிந்து கூறினர்.

என்ன காரணம்?

செயின்ட் ஹெலினு தீவில் சிறைக் கைதியாக்கப்பட்ட மாவீரன் நெப்போலியன் கூறிய சொற்களே நினைவுக்கு வருகின்றன!

ஒரு நாட்டை அடிமைப் படுத்துவதற்கு முன்னால்— அதன் மொழியை அடிமைப் படுத்து!'

காரணம் இப்போது புரிகிறது!

இத்தனை பேருக்கு இருக்கிற மொழியுணர்வு—ஈராயிரம் மாண்டுகளுக்கு முன்பே பெருமை கொண்டிருக்கும் தமிழனுக்கு இருக்கக் கூடாதா?

உலகில் 62500 மொழிகள்; தமிழில்தான் அதிகச் சொற்கள் 86200க்கு மேல்!

மூதாதை மொழிகள் எட்டில் மூத்த மொழி தமிழ்!

இந்தக் கபாடபுரத்தின் வரலாற்று நினைவுகளோடு. காவிரிக் கரையில் கூடிய மாவீரர் மாநாட்டில்—காசி முனிவகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளுக்கு,

ஒரு முடிவான தோற்றம் உருவாகி விட்டது.

'எங்கள் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களே, கொட்டும் மழையில் நீங்கள் பிறப்பித்த ஆணைகளைக் கேட்டோம்; ஏற்றோம்.

சனவரி 26ல் தமிழகம் நாங்கள் அணிகிற சட்டைகளால் ஏற்றுகிற கருப்புக் கொடிகளால் கருங்கடல் ஆகும்?

இனமான உணர்வினைத் தேக்கிக் கொண்டு.

இன்பத் தமிழ் உணர்வை நிரப்பிக் கொண்டு என்னுயிரீந்தும் இந்தி ஆதிக்கத்தை முறியடிப்போம் என்று முழங்கிக் கொண்டு—

உங்கள் விரல் காட்டுகிற திக்கில் நாங்கள் நடக்கிறோம்

தீர்க்கப்படாத எங்கள் தாகங்களுக்கு நீங்கள் அறிவிக்கிற போர் முறைகளே அருவி நீரென ஏற்றுக்கொண்டோம்.

உலகின் திசைதோறும் கனன்றுகொண்டிருக்கும் மக்களுக்கு மொழியுணர்வில் நாங்கள் குறைந்தவர்களல்லர் என்பதை நாங்கள் உணர்ந்திருப்பதைத், தெரிந்து வைத்திருக்கும் எங்களுள் தமிழ்க்குலம் காக்க வந்த போர் முரசம் கலைஞரே,

நீங்கள் இடுகிற ஆணைக்கு எங்கள் உயிரே பணயம்; இதுவே. இந்தப் பொங்கல் நாளில் எங்கள் சபதம்!

★★★★ ★★★★★★★

பொங்கல் வாழ்த்துக்கள்!

தமிழ்நாடு துணியகம்
திருப்பத்தூர்

எங்களிடம மலக்ஸ் ஆண்கள் ஜவுளி பகுது (மாடியில்)
பெண்கள பகுதி
ரெடிமெட் பகுதி

ஆக மூன்று பகுதிகளிலும் தமமான அணைத்து மில்களிலும் தயாராகும் ஜவுளி ரகங்களும குவிந்துள்ளன திருப்பத்தூர் நக லேயே தாமான துணி வகைகளுகு சிறந்த இடம

தமிழ்நாடு துணியகம்
123-பி. வாணியம்பாடி ரோடு
திருப்பத்தூர் [வ. ஆ]
சி. கணேசன்

★★★★★ ★★★★★★

நிறைவேற்றுவோம் செய்வோம்

நிசியூதீன் வல்லாளன்

தமிழ்நாடு' எழில்நாடு! எங்கள் அருள்வீடு!
தமிழனுக்கே உரிமையென நெஞ்சே நீபாடு!
வருபவர்கள் வரட்டுமடா பிழைத்திடவே இங்கே
வரவேற்போம் அன்புடனே பண்பதுவே நமக்கு

'எல்லார்க்கும் நாடுபொது' என்றவன்தான் தமிழன்
'எல்லாரும் உறவுகளே' நாம்சொன்ன பாடம்
இப்போதும் முழங்கிடுவோம் தப்பாது நாளும்
என்றுலும் பணிந்துவிடோம் தமிழ்ப்பகைவர் முன்னே!

நன்றியெங்கள் உயிர்ப்பண்பு குறள்காட்டும் செய்தி!
நற்றமிழே எங்களுயிர் உலகறிந்த உண்மை!
தமிழ்ப்பகைவர் கேடுசெய்து நன்றிகொல்லும் போது
தமிழர்படை விரைந்துஎழும் தூள்பறக்கச் செய்யும்!

வள்ளுவரும் காப்பியரும் வாழ்ந்ததமிழ் மண்ணில்
வான்புகழக் கொடிபறந்து ஆண்டதிரு நாட்டில்
தமிழரெலாம் தூங்குகிறார் அடிமைகொள்வோ மென்றே
தமிழ்ப்பகைவர் கூடுகிறார் எழுந்திடடா தமிழா

எச்சிலிலை காற்றடித்துக் கோபுரத்தின் மேலே
ஏறிவிட்டால் அதுதானும் பொற்கவசம் ஆமோ?
வைரக்கல் புழுதியிலே வீழ்ந்துவிட்ட போதும்
வையத்தார் கல்லென்று ஒதுக்குவதும் உண்டோ?

ஒளிகுன்று வைரமடா எங்களுயிர்க் கலைஞன்!
உள்ளமதில் தமிழ்வைத்தான் தலைவனுக்கிக் கொண்டோம்'
அருந்தமிழின் வளங்கண்ட பெரும்புலவன் அவனே
அரசனெனப் போற்றிடுவோம்! நாடாளச் செய்வோம்!

நம் நாடு பொங்கல் மலர் 1979

வாடிக்கையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும்

எங்களது

மகிழ்வான பொங்கல் வாழ்த்துக்கள்!

ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட்.,

59-ஏ, 15, பி. எஸ். சுந்தரம் ரோடு

தபால் பெட்டி நம்பர்: 65

திருப்பூர் - 638601.

நாங்கள் பல ஆண்டுகளாக அயல் நாட்டு மற்றும் உள் நாட்டு உயர்ரக பருத்தியிலிருந்து 20 முதல் 60 நெம்பர் நூல்வரை கைத்தறி, விசைத்தறி மற்றும் பனியன் தொழிற் சாலைகளுக்குத் தேவையான கோம்புடு, கார்டடு, ஹொசைரி நூல்கள் உற்பத்தி செய்து உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்து வருகிறோம்.

எங்களுடைய தயாரிப்பான SRG 2001, SRG 2002 ஜ, காடா மற்றும் சலவைத்துணி, உள்நாட்டு உபயோகத் திற்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் நல்ல முறையில் தயாரிக்கிறோம்.

அவளால் அவர் ...

வீரர்னு சொன்ன, விழுந்து விழுந்து சிரிக்கலாம்னு தாங்க தோணுது...

சா —வீட்டிலே சாதுபோல இருந்தான்...

அ:—ஐயோ, அதுக்கு வீட்டுக்குள்ளேயும் படந்தான்: வெளியே போனலும் பயம்தானுங்க.

சா:...அதெல்லாம் பழைய கதை இப்போது உன் புருஷன் பெரிய வீரன். எட்டுத் தலைகளை வெட்டி வீழ்த்தினன்; பட்டம் கொடுக்கப் போறாங்க பார்

அ:—நெசமாவங்களா...

சா:—பொய் பேசாது இந்த வாய்... நம்பாதவர் நரகம் போவார்கள்...

அ: —மன்னிச்சிடுங்கோ ...இல்லாமலா சொல்லுவிங்க...நாலோங்க மாதிரி துள்ளிகிட்டு பட்டாளத்துக்குப் போனுங்க பலபேரு; என் புருஷன் ஆம்மாதிரி நகர்ந்து போனதுரு... அங்கே...என்னடானன்னு சிங்கமா இருந்திருக்காரு...சூட்சமம் தெரியாமே நான் கிடந்தேன்.

சா: —எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ யார் கண்டார்கள் என்ற பழமொழி தெரியாதா?

அ: —(சோகமாக) பாவம்! இவ்வளவு புகழ் பெறப் போறவரை நான் என்னென்ன சொல்லி ஏசிவிட்டு இருந்தன் தெரியுங்களா? சமயக் கட்டுப் பக்கம் போனு உடனே கூச்சலிடுவேன். என்ன அது பெருச்சாளி மாதிரி, சட்டி பானையை உருட்டறன்னு...மனசு வெகு பாடுபட்டிருக்கும்...?

சா: —பரவாயில்லே. அவன் பொறுமைசாலி. மன்னித்து விடுவான். எதற்கும் ஒரு மண்டலம் மண்டி பூசை நடத்து.

அ: —மண்டி பூசைன்னு?

சா.—காலேயும மாலேயும் உன் புருஷனே எண்ணிக் கொண்டு மண்டியிட்டு பூஜை நடத்து. அவனுக்குப் பிடித்தமான பண்டம், பலகாரம் படைத்து யாராவது சாதுக்குக் கொடு.

(அன்னம் கும்பிட்டுவிட்டுச் செல்கிறாள்) சில நாட்களுக்குப் பிறகு சாதுவின் இருப்பிடம் வளர்ச்சி அடைந்திருப்பது தெரிகிறது.

பெண்கள், பலகாரத் தட்டுகளுடன் வந்து, கும்பிட்டு விட்டுப் போகிறார்கள். அன்னம் வருகிறாள் கூடையுடன். சாது உட்பக்கம் இருக்கிறார் அன்னம் மரத்தடியைச் சுத்தம் செய்கிறாள்.

ஆசனத்தின் தூசியைத் துடைக்கிறாள். கங்கணம் கிடைக்கிறது, ஆச்சர்யப்படுகிறாள். உள்ளே எட்டிப் பார்க்கிறாள்: வெளியே வருகிறாள்... கோபம் கொள்கிறாள்! ஆகட்டும்! ஆகட்டும்! என்று வீரலே ஆட்டியபடி நிற்கிறாள். சாது வருகிறார்.

ஏதுமறியாதபடி அன்னம் வணங்கி விட்டு, பலகாரத் தட்டை வைக்கிறாள்.

சாது: —பெண்ணே! உன் புருஷன் பிரம்மானந்தமாக இருக்கிறான்.

அன்னம்:— இருக்கும்ங்க... உங்க மகிமை இலேசானதா...சாமி! ஒரு விஷயம் சொல்லலாமா. கூடாதான்னு யோசிச்சு யோசிச்சுப்பார்த்தேன்...கடைசியிலே சொல்லியே போடறதுன்னு தீர்மானிச்சுட்டேனுங்க

சா:—என்ன விஷயம் அன்னம்.

அ: —எனக்கு நீங்க இப்படி மரத்தடியிலே கிடக்கிறது கொஞ்சம் கூடப் பிடிக்கலேங்க...

சா: —பெண்ணே; சாதுக்களுக்கு மரத்தடியும் ஒன்றுதான்; மாளிகையும் ஒன்றுதான்.

அ: —அது நீங்க, ஆனு, வீடு வாசல் எதுவும் கிடைக்காது போனு இப்படி இருக்கலாம். உங்களோட, தவசு எப்படிப்பட்டது? மகிமை எப்படிப்பட்டது? நீங்க போயி இங்கே இருந்தா?...

சாது;—பரவாயில்லே, அன்னம்...

அ: —அது சரியில்லேங்க, நீங்க நம்ம வீட்டுத் திண்ணையிலே வந்து குந்திக் கொள்ளுங்களேன் நான் உங்களுக்கு சகல பணிவிடையும் செய்து கிட்டு இருக்கிறேன்; எங்க பக்கத்துப் பெண்களெல்லாம் கூடப் புதுசு புதுசா வருவாங்க, பூஜை செய்ய...

சாது:— ஏன் அவர்களும் இங்கேயே வரலாமே...

அ:—ஏன், நீங்கத்தான் அங்கே வந்தா என்னவாம்?

சாது:—சரி...நீ இவ்வளவு பக்தியுடன் கூப்பிடுகிறபோது...

(அன்னம்; பூஜை சாமான்களை எடுத்துக் கொள்கிறாள். சாது, பின் தொடர்கிறான்.

அன்னம் வீட்டுத் திண்ணை,

அங்கு, ஆசனம்போட்டு சாதுவை அமரச் சொல்கிறாள்.

பலரும் வந்து கும்பிடுகிறார்கள். அன்னம் அவர்களிடம்)

அ:—அவரோட தவசு கெட்டுவிடப் போவது, வந்தமா. பார்த்தமா, கும்பிட்டமான்னு போங்க...

(சாது, கண்களை மூடிக்கொள்கிறார் ஒரு சிறுவன் மீசை வைத்துக் கொண்டு ராஜ நடையுடன் வருகிறான்.

அன்னம், சிறுவனைக் கண்டு சிரித்தபடி)

அ: —இது என்ன வேஷம்?

(என்று கேட்டதும் சாது பதறிக் கண்களைத் திறந்து பார்க்க)

அ:—பாருங்க சாமியாரே! வேஷம் போட்டுக்கிட்டு திரியுது.

[நிமிஷம் அடைந்து கண்களை மூடிக் கொள்கிறார் சாது]

அன்னம் ஒரு செம்பில் தண்ணீர் வைத்துவிட்டு]

அ: சாமி! ராத்திரிக்கு தாகமா இருந்தா குடிங்க...

[இரவு வளருகிறது சாது படுத்துக் கொள்கிறார். அன்னம் வெளியே வந்து பார்த்துவிட்டு ஆகட்டும் ஆகட்டும் என்றஜாடை காட்டியபடி, உள்ளே போகிறாள் சாது தூக்கம் பிடிக்காமல்படுத்துப் புரள்கிறார். மெள்ளத் தூங்குகிறார்]

அ: (அலறியபடி வெளியே வந்து) சாமியாரே! சாமியாரே!...

[சாது பதறியபடி]

சாது: என்ன? என்ன?

அ: (பயந்தவன் போல் நடித்து) உள்ளே, ஏதோ ஒரு உருவம், கருப்பா, உலவுகிற மாதிரியா இருக்குதுங்க.

[பயத்தால் தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு]

சாது: உருவமா? உலவுதா?

[கலக்கமடைகிறான்]

அ: உலாவற மாதிரியா இருந்துது—விழிச்சிக்கிட்டேன் — தேடிப்பார்த்தேன். ஒண்ணும் தட்டுப்படலிங்க.

சாது: தூக்கக் கலக்கமா இருக்கும்... இந்தா விபூதி நெற்றியிலே தடவிக் கொண்டு படுத்துக் கொள்ளு, பயம் போய்விடும்.

[விபூதிக்குப் பதிலாகபலகாரம் தர அன்னம் சிரிக்க, சாது தன் தவறைத் திருத்திக் கொள்கிறான். விபூதி தர அன்னம் அதைப்பூசிக் கொண்டு, மேலும் தயக்கமடைந்தவள்போல, அங்கேயே நிற்கிறாள்.]

சாது: என்? பயமாகவே இருக்கிறதா?...

அ: ஆமாங்க...

[கேட்கத் தயக்க முற்றுக்கேட்பவள் போல.]

என்னங்க...உன்னே வந்து படுத்துக் கொள்றிங்களா... பேச்சுத் துணேயா...பயம் போய்விடும்...

சாது, சரி என்று சம்மதித்து உள்ளே செல்கிறார்]

அன்னம் வீடு, உட்புறம்.

ஒரு கயிற்றுக்கட்டிலின் மீது படுக்கை போடப்பட்டிருக்கிறது,

அதிலே அன்னம்ஜாடைகாட்ட சாது அதிலே படுக்கிறான்.

சற்றுத் தொலேவில், ஒரு பெஞ்சியின் மேல் அன்னம் படுக்கிறாள்.சற்று நேரத்தில்

அ: (மெல்லிய குரலில்) சாமியாரே தெரியுதா—அதோ...அதோ... (ஒரு பக்கம் காட்டி) உருவம் உலாவுது பாருங்க...

சாது: (பயந்து சுற்று முற்றும் மிரள மிரளப் பார்த்தபடி) ஐயோ உருவமா? தெரியலேயே...

அ: காணேம் ... மறைந்துவிட்டது... படுத்துக் கொள்ளுங்க சாமி...

(கூறிவிட்டு அன்னம் படுக்கையில் உட்கார்ந்து கொள்கிறாள்)

சாது: உருவம் எப்படி இருக்குது?

அ: சரியாகத் தெரியவில்ல...டாரோ ஒரு ஆள் நடமாடற மாதிரியா இருக்கு. தலேயி லே ஒரு கிரீடம் தெரியுது...கையிலே வில்லு தெரியுது.

சாது: (கவனமாகக் கேட்டபடி) முருகனோ?

அ: இல்லிங்க. ஆறுமுகம் இல்லே, மயிலேயும் காணேம்.

சா: அப்ப முருகனில்ல...


அ: விடிவிலே இருந்து அம்பு சரமாரி டாக் கிளம்பி வருதுங்க...

சா: (பயந்து) அம்பு வருதா? எந்தப் பக்கம் எந்தப்பக்கம்?...

அ: எந்தப் பக்கத்திலே இருந்துபுறப் பட்டாலும் என்னா அம்பும்

[வெட்கப்படுவதுபோல பேச்சை நிறுத்திக் கொள்ள. சாது மேலும் மிரண்டு]

(தொடர்ச்சி 22-ம் பக்கம்)



அவளால் அவர்...

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

சா: எல்லா அம்பும்...?

அ: (தெரஞ்சும் பாவனையில்) போங்க, சாமியாரு, கிளறிக் கிளறிக் கேட்க றிங்க. எல்லா அம்பும்... (தன் ஒத யத்தைக் காட்டி) இங்கேதான் வந்து பாயுது...

சா: அம்பு பாயுதா? அடச் சிவமே!

அ: தடித்த குரலில்) ஆனா அம்பு வந்து பாய்கிறபோது (கண்களை மூடி ஆனந்தப்படுவது போலாகிறாள்.)

சா: நீ சால்வது விளங்குவில்லையே... ஒருவேளை மைதர்மனை ... டாக்டரைக் கொண்டுபோக அம்பு போடருனை.

அ: நீங்க ஒரு பைத்தியம்! யமன் பாசக்கயிறு அல்ல வீசுவான் அம் பல்லவா வருது...ஒண்ணும் தெரி யாத மாதிரிப் பேசறீங்களே அப்பு யார் போடுவாங்க...

சா: யாரு?

அ: (மோக மூட்டும் பார்வையுடன்) மம்முதன்...

சா: (திடுக்கிட்டு) அடிப்பாதகி! பாவி!

அ: ஏன், ஏன் சாமியாரே ஏசறீங்க? மன்மத பாணமடா மார்பைத் துளைக்குதடான்னு என் புருஷன் ஒரு பாட்டுக்கூடப் பாடும்.

சா: (கோபமாக) ஒதக்குப் பாடி னான்? இப்படி நீ பாதி ராத்திரியிலே ஒரு அன்னிய புருஷன் எதிரேபாடிக் காட்டவா? அடி துரோகி! துராதமா! காமாந்தகாரம் பிடித் தவளே!

[அன்னம், சாது அருகே சென்று]

அ: நான் என்ன செய்யட்டுங்க. அந் தப் பாவி... (இதயத்தைப் பிடித்த படி) பாணத்தைப் போட்டபடி இருக்கிறானே.

சா: போடுவாண்டி போடுவான்! விபச் சாரி! உன் புருஷன் மகா உத்தமன். அவன் தேசத்துக்காகச் சண்டை போடப் போயிருக்கும் நேரத்தில்... (பதறி) ஆஹாஹா! இப்படித் துரோகம் செய்வதா? நரகத்திலே தொங்கிற எண்ணெக் கொப்பரை யிலே போட்டு வாட்டுவார்கள் உன்னை.

அ: (அலட்சியமாக) எப்போ வாட் டப்போற கதையைச் சொல்றயே சாமியாரே! இப்பவே அப்படித்தான் இருக்கு எனக்கு

[பக்கத்தில் உட்கார, சாது பதறி எழுந்திருக்கிறான்.]

சா: அடி படுபாவி, மனம்பதறு கிறதே

அ: (கேலியாக) என்னய்யா இது, நீ என்ன எம் புருஷனை ஒப்பிடி, இதுக்கு, பதைபதைக்கிறயே நான் உன்னை வீட்டுக்கு வான்னு கூப்பிட் டப்பவே உனக்கு விவரம் புரிய லையா...

ஓங்குக அண்ணா புகழ்!
வாழ்க கலைஞர்!!

கலைஞரின் கரத்தை
வலுப்படுத்துவோம்
என்று இப் பொங்கல்
நன்னாளில் உறுதிகொள்
வோம்

இங்ஙனம்,
தே. கண்ணுசாமி
நாகை தி.மு.க செயலாளர்
திருப்பத்தூர் (வ. ஆ.)
—கி. கணேசன்



தமிழ் மகளிர்

பணிப்பெண்: சீத்தலை

முல்லை நிலத்து முழுமதி ஆய்ச்சியர்
கள்ளை நிகர்த்தும் கிள்ளைப் பேச்சினர்
அலுப்பு சலிப்பு அயர்வு தளர்வு
மலைப்பு தேக்கம் மனதினிற் கொள்ளார்;
அச்சம் மடமை கூச்சம் ஏனனம்
இச்சகம் நீக்கி இறும்பூ தெய்துவர்;
அரியின் குட்டியை இடையில் தூக்கி
நரியினைக் கண்டு நகைத்து நிற்பர்;
கனியொடு கண்ணை நோக்கினும் என்ன?
திண்தோள் மறவர் திறத்தைக காட்டிடும்
அடலே றென்னும் அரிமா அல்லவோ.
கடலென அவர்தம் கருத்தில் நிறைவர்!
காதல் மகளிரின் கரங்களைப் பிடித்திட
மோத விருப்பியே முனைந்து நிற்பராம்!
கொம்புகள் தீட்டிய காளைகள் தம்மைக்
கொம்புகள் ஒடித்து காலினை முறித்து
வெற்றி கொண்டே வெறியொடு நின்றிடும்
முற்றுக் காதலை முற்றிடும் நிகழ்ச்சியே
''ஏறு தழுவுதல்'' என்றே செப்புவர்!
வீறு கொண்டெழும் வீரர்கள் தம்மின்
காளை குத்திய செந்நிறப் புண்ணுடைத்
தோளையே விரும்புமாம் தோகையர் கூட்டம்!
செந்நிறத் தாமரை செக்கர் வானம்
முந்நீர்ப் பரப்பின் முகட்டற் பவளம்
ஆய்ச்சி மகளிர் கொள்ளா வெறுத்து,
பாய்ச்சிய கொம்பின் புண்கள் கொட்டும்
சிவப்புக் குருதித் தோளை தொத்துவர்;
உவப்புக் கொள்வர்; உலகை மறப்பர்!
மத்தால் தயரைக் கடைந்திடும் வேளை
முத்துப் போன்ற வெண்ணிறப் புள்ளியில்
ஏறு தழுவிய ஏறுகள் ஏற்ற
வீரக்கொள் தோளின் செந்நிறப் புள்ளிகள்
சேர்வதால் தங்கள் தோளுக் கழகென
ஆர்த்து மகிழ்வது ஆய்ச்சியர் பண்பே!

மூலக்கரு: —
பல்லூழ் தயர்கடையத் தாயம புள்ளிமேல்
கொல்லேறு கொண்டான் குத்தி மயக்குறப்
புல்லல்லாந் தோளிற்கு அணியெனைங் கோனே!

கலித்தொகை [முல்லைக்கலி]

சா: எப்படிப்பட்ட காரியம் செய்யத் துணிந்தாய். உன் புருஷன் காதிலே இது விழுந்தால்...

அ: (மேலும் அலட்சியமாக) அதுக் குப் பயபடபடறியா? இதோ பாரு, என் புருஷன் சுத்த இரண்டாங் கெட்டான்—நான் என்ன சொன்னா லும் நம்பிவிடும். இவரு பெரியதவசி நீங்க சண்டைக்குப் போயிருந்த போது ஓவருதான் எனக்குத் துணை யாக இருந்தாருன்னு சொன்னா உன் காலிலேகூட விழுந்து கும்பிடும் அது அது சுத்த ஏமாளி.

சா: சீ! நீ இப்படிப்பட்ட பெட்ட நடத்தைக்காரின்னு தெரிஞ்சிருந்தா நான் இந்த வந்திருக்கவே மாட் டேன்.

அ: அடச்சே நீ இப்படிப்பட்டவளைப் பற்னு தெரிஞ்சிருந்தா உனை நான் இங்க சேர்த்த இருக்கமாட்டேன்.

சா: கண்டாளி! பிடி சாபம்...

அ: ஆமாம் -வாயை மூடிக்கிட்டு கிட...சாமியாரு...காவியைக்கட்டிக் கிட்டு வேஷத்தைப்போட்டுகிட்டா சாமியாரு ஆயிட்டாரு ... மண்டி பூசை மகேஸ்வர பூசை... (அருகே சென்று கன்னத்தில் அடித்து ரேகை சாஸ்திரமல்லவா பார்க்கிறாரு. ரேகை சாஸ்திரம்.

தலையில் குட்டியபடி உள்ளதை உள்ளபடி சொல்கிறவரு -)

(சாது திகைத்து)

சா: அடி பிசாசே! பேயே!

அ: (மிரட்டி) பேசாதே - கூவாதே. உன் இலட்சணத்துக்குப் பேச்சு வேறேயா பேச்சு...

சா: உத்தமிகள் பிறந்த நாட்டிலே. கணவனைக் கண்கண்ட தெய்வ மென்று கொண்டாடு நாட்டிலே, கள்ளி நீ வந்து பிறந்தாயே...

[சாதுவைப்பிடித்துத்தள்ளியபடி]

அ: வீரனும் சூரனும் பிறந்து உயிரை யுந் கொடுத்து உரிமையைக் காக்கப் போராடும் நாட்டிலை நீயுந் பிறந் தாயே

(தலைப்பாகையைத் தட்டிவிட்டு) காலி முண்டாசு

(கழுத்து மாலைகளை அறுத் தெறிந்து) ருத்திராட்சை மாலைகள்

(தாடியைப்பிய்த்தெறிந்து) வேஷம் - ஜோர் ஏமாற்க

(உடையைக் கிழித்து) சாமியாரு உடை.

(சாது வேஷம் கலைந்து பலராமன் சுயஉருவில் நிற்க)

பண்டார வேஷம் போட்டுகிட்டு போறவங்க வாரவங்களை ஏச்சிக் கிடு...

(பலராமன் கெஞ்சுகிறான்)

ப: வேண்டாம்...அன்னம் வெளியே சொல்லாதே...மானம் போய் விடும்...பட்டாளத்திலே இருந்து ஓடி வந்தது தெரிஞ்சா நீ சேக்க மாட்டீயேன்னு பயந்து கொண்டு தான் இப்படி பண்டார வேடம் போட்டேன்...

அ: உன்னோட தந்திரத்தை யாரும் கண்டு பிடிக்க மாட்டாங்க என்கிற தைரியம்.

(மடியிலிருந்து கங்கணத்தை எடுத் துக் காட்டி)

உன் குட்டு இதனாலே அல்லவா வெளிப்பட்டது.

(பலராமன் பதைக்க)

இது, நாம்ப அவருக்குக் கொடுத்த சங்கணமாச்சே; இது எப்படி பண் டாரத்திடம் கிடைச்சுதுன்னு யோசிச்சு உள்ளே எட்டிப் பார்த்தா நீ அப்பத்தான் தாடியை ஒட்டி கிட்டு இருக்கிறே. நேரம் பொங்கி வந்தது. அல்ப சொல்பமா இருக்கப் படாது நம்மோட வேலை என்றதான் இங்கே கூட்டிகிட்டு வந்தேன்.

ப: படாத பாடு படுத்திவிட்டியே...

அ: -இதோபாரு. ஆம்பிளைங்க தந்திரம் எப்பவும் பிரமாதமில்லே. பொம் பளைங்களும் தந்திரம் செய்ய துன்னு ஆரம்பிச்சா அவ்வளவுதான் ஆம்பளைங்க பாடு ஆபத்தா முடியும் நீதான் பார்த்தியே, இப்ப எப்படி இருந்தது நம்ம மம்முத பர்ணம்

ப: (வெட்கத்துடன்) போகுது போ! அன்னம் சும்மா அதையே சொல்லி கேவி செய்யாதே...

அ: —புத்தியும் யுக்தியும் ஆம்பிள்ளை களுக்குத்தான் என்று எண்ணிக் கொள்ளாதே.

ப: அன்னம், என் மனசு என்ன பதறிச்சி தெரியுமா: நம்ம அன்னமா இப்படிப்பட்ட நடத்தைக்காரின்னு நினைச்சி, துடிச்சிப் போனேன் போ, துடிச்சி.

அ: —நானு படுபடுன்னு மனசுக் குள்ளே கொல்லிகிட்டேதான் இருந் தேன்.

ப: -பட்டாளத்திலே என்ன வேல இருக்க முடியல்லே அன்னம்...

அ: —இப்ப பட்டாளத்துக்குப் போறதா நீயே சொன்னாலும் நான் சம்மதிக்கப் போறதில்லையே...

(23-ம்பக்கம் பார்க்க)

தமிழர் திருநாளன்று வீரநடையோடு
வெளிவருகிறது!

மலர்ந்த மலர்கள்

போதாசன எழுதிய

இனிய படைப்பு!

பகுத்தறிவு தந்தை பெரியார் காஞ்சி கதிரோன் அண்ணா தமிழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர், புரட்சிகவி பாரதி தாசனர் போசிரியர் அன்பழகனர் ஆகியோரின் சிந்தனை கருத்துக்களைப்பற்றி அறிவுரைத்தேன் வாழ்த்துக் குவியல்கள்!

நான் அவளைக் கண்டேன். தெரு ஓரத்தில்
இன்பக் காதல் கவிதைகள் மலர் ரூ. 2

விவரங்கட்கு:

அசோகா நிலையம்,
80-15, குறுக்குத் தெரு, இலட்சுமிபுரம்,
பெங்களூர் - 560008.

அவளால் அவர்...

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

ப:—(ஆவலாக) அப்படியா அன்னம்...

அ:—உன்னுட்டம் பயந்தாங் கொள்ளிகள் இருந்தா, மத்ததுமல்ல கெட்டுப் போயிடும் வீராதி வீரரே!

(பாசத்தோடு பார்க்கு)

அ:...பார்வையைப்பாரு. பார்வையை போ! போ! படுத்துத் தூங்கு.

[படுத்துக் கொள்கிறான்.]

அ: என்னு, ஒண்ணு கேட்க மறந்து விட்டேனே...உனக்கு எங்கேகிடைச்சுது ந்த வேஷ சாமானெல்லாம்

ப:—ஊர்க் கோடியிலே. மரத்து டுக்கிலே.

அ: அங்கே எப்படி இருக்கும்?

ப:—பண்டாரங்க பலபேர் உண்டேயாரோ ஒருத்தனுடையது

அ: பொய்த்தாடி:

ப: ஆமாம் நிஜப் பண்டாரத்துக்குப் பொய்த்தாடி ஏன்?

அ: டிலே என்னமோ சூது இருக்கு... வா அந்த இடத்துக்குப் போய்ப் பார்ப்போம்.

ப: ந்த நேரத்திலேயா...?

அ: நான்தான் கூட வர்றேன் பயம் என்னவா வா.

இருவரும் செல்கின்றனர். மரத்தடி சேருகின்றனர்

ாரோ வருகின்ற காலடிச் சத்தம் கேட்டு மறைந்து கொள்கின்றனர்.

ஒருவன்:—பண்டார வேடத்துக்கான சாமானே மூட்டை கட்டி-இங்கே வைத்திருந்தேன். காணமல் போய் விட்டது.

இன்னொருவன்:-நர்ம ஆசாமிதான் எடுத்திருப்பான்.

மற்:-அண்ணே) இந்த வேசத்திலே தான்வேவு பார்க்க தோதாஇருக்கு.

இன்:-எமாந்ததுங்க. காலிலே விழுதுங்க காரியம் கனகச்சிதமா முடியுது.

மற்:—நம்ம கூட்டம் பூரா, வந்து சேரவே ாம்...

இன்: பூமடத்துக்குத்தானே.

மற்:-வேறே எங்கே...? அங்கேதான்.

இன்: சரி...வாங்க, போகலாம்.

(அவர்கள் சென்ற பிறகு)

அ: பாவிப்பயலுங்க, பண்டாரம் வேஷம் போட்டுகிட்டு,உளவு பார்க்க ருனுங்க...

பா: ஆமா...

சீனத்தில் சமுதாயச் சீர்திருத்தம்

குடும்ப வாழ்வில் ஏற்பட்டுவிட்ட பிற்போக்குத் தனம், பழமை ஆகியவைகளையும், திருமணத்தில் புகுந்து விட்ட மூடச்சடங்குகளையும் 'பரிசப்பணம்' கொடுக்கும் வழக்கத்தையும் எதிர்த்தும் காதல் திருமணத்தையும் சீர்திருத்தத் திருமணத்தையும் ஆதரித்தும் சீனத்தில் நாடுமுழுதும் அடுத்த ஆண்டு சீர்திருத்த இயக்கம் நடைபெறும் என்று அதிகார பூர்வமான ஹுவா செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இல்லறத்தில் கணவன்—மனைவி இருவரும் இணையானவர்கள் எனும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்றநோக்குடன் இந்த இயக்கத்தை தேசிய மகளிர் கூட்டமைப்பு நடத்துகிறது.

அ: சரி, சரி புறப்படு...

ப: வீட்டுக்குத்தானே...

அ: ஆமாம்...விருந்துக்கு... தொத்தவால் வீடு. கொத்தவால் தூக்கம் வராமல், உலவிக் கொண்டிருக்கிறார்.

[அன்னமும் பலராமனும் செல்கிறார்கள்.]

அ: எஜமான் எதிரிநாட்டு ஆளுங்க வந்திருக்காங்க...

கொ: உளவாளிகளா? எங்கே?

அ: பண்டார வெஷத்திலே இருக்கிறுங்க. பூமடத்திலே எல்லோரும் கூடப் போறுங்களாம்.

ப: அவங்க ரகசியமாப் பேசிக்கிட்டு இருந்ததை நாங்க ஒட்டுக் கேட்டுக்கிட்டு இருந்தோம்...

அ: இவரு. என் புருஷரங்க. பட்டாளத்திலே இருந்தாரு...

[பலர்மன் பதற]

உடம்புக்கு குணமில்லேன்னு வீட்டுக்கு வந்திருரு இவர் தான் உளவாளிங்க விஷயம் கண்டுபிடிக்க பண்டார வேஷம் போட்டுகிட்டு திரிஞ்சி...

கொ: கெட்டிக்கார ஆசாமி போர் வீரர் மட்டும் போதாது. யுத்தத்தில் ஜெயிக்க யுக்தியும் வேண்டும் உன் புருஷனுக்குப் பரிசு தரப் படும்; பூமடமா...

[கைதட்ட வேலையாள் வருகிறான். பத்து இருபது வீரர்களைக் கூப்பிடுகிறான்]

[போர் வீரர்கள் வர]

கொ: ன்னுடு வர்ருங்கள்.

[பூமடம் இருளடைந்து இருக்கிறது.

போர் வீரர்கள். ஒவ்வொரு வராக வருகிறார்கள். மறைந்து கொள்கிறார்கள்.

பண்டாரங்கள் பாடியபடி உள்ளே செல்கின்றனர்.

பாய்ந்து அவர்களைப் போர்வீரர்கள் பிடித்துக் கொள்கின்றனர். வேஷம் கலைகிறது. விலங்கிடப்படுகிறது.

கொத்தவால் பலராமனைத் தட்டிக் கொடுத்து, ஒரு சிறு பணமுடிப்பு தருகிறார். பலராமன் அதை அன்னத்திடம் தரும்படி ஜாடை காட்டுகிறான் அன்னம் பலராமனிடம் தரச் சொல்கிறார், கொத்தவால் மகிழ்ச்சியுடன்,

கொ: உன் கணவன், செய்த இந்தத் தொண்டு சிலாக்கியமானது... இப்படிப்பட்டவனைப் புருஷனைப் பெற்ற நீ பாக்கியசாலி

[பணமுடிப்பைத் தர, இருவரும் வீடு செல்கின்றனர்.]

வாசகர்களுக்கு எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

தினமும் காலையில் 'தினகரன்' படியுங்கள்!

(சென்னை, மதுரை, கோவை, நகரங்களில் அச்சாகி வெளிவருகிறது)

★ மாநில தேர்ய, சர்வதேசச் செய்திகள்!
★ கருத்தாழமிக்க தலையங்கம்
★ சந்தனையைத் தூண்டும் கருத்துப்படம்!
★ தரமிக்க சினிமாச் செய்திகள்!

நிறைந்த மக்கள் பத்திரிகை

"தினகரன்"

தினகரன், 92-ஏ, அண்ணாசாலை, சென்னை: 600018

மக்கள் ஆட்சியும் ஆட்சிமொழியும்..

(தொடர்ச்சி)

லும் மத்திய நிர்வாகம் நடத்துவதை ஏற்கவேண்டும்


ஒருமொழி பேசும் மக்களையே மிகப்பெரும்பான்மையினராகப் பெற்றுள்ள ஒரு நாடாயினும், அந்த நாட்டு ஆட்சி அந்த ஒரு மொழியிலேயே நடத்தப்படவேண்டும் என்று இன்று உலகம் கருதவில்லை. தனித்தனி மாநில அரசு அமைப்புக்களைக் கொண்டு தத்தம் மொழியில் ஆட்சி நடத்திக்கொள்ளும் உரிமை கொண்ட பல மொழி பேசும் மக்கள்வாழும் இந்தியாவின் மத்திய இணைப்புக்கூட்டு ஆட்சிக்கு – ஒரு பிரிவினர் தம் மொழி மட்டுமே ஆட்சிமொழியாக வேண்டும் என்பதை எப்படி நல்லறிவாளர் ஏற்றுக் கொள்வர்?

வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து, தனித்தனி மொழி பேசுவோருக்காக நடத்தப்படும் மத்திய ஆட்சியில் ஒரு வட்டாரத்தினரின் மொழியான இந்தியை மட்டுமே ஆட்சிமொழியாக்கியபின்னும் குடியரசில் வாழும் அனைவரும் ஒத்த உரிமை பெறுவர் என்பது வெறும் ஏமாற்றுப்பேச்சு! இவை அனைத்தினும் — நாட்டிலே உருவாக வேண்டிய ஒற்றுமை ஒரே ஆட்சி மொழியால்தான் அரும்பும், மலரும் என்பதும் அந்த ஆட்சி மொழியே — நாட்டின் பொது மொழியும் மக்களின் இணைப்பு மொழியும் ஆகும் என்பதும் — பேதமையாகும் மத்திய நிருவாகத்தில் ஆட்சி மொழியாக இடம் பெறுவதால் அது மக்களின் பொது மொழி ஆகிவிடாது! அதே போன்று ஒரு வட்டார மொழி — மக்கள் இயற்கைத் தேவைகள் — தொடர்புகளைக் கடந்து அனைத்து வட்டாரத்துக்கும் தொடர்பு மொழியும் ஆகிவிடாது! சுதந்திரம் — அனைத்து மொழியினருக்கும் பொருளுடையதாகவும் குடியரசுவல்லாமக்களுக்கும் ஒத்ததாகவும், ஆட்சி உரிமை — அனைவருக்கும் ஒப்பவாய்ப்பு தாகவும், மத்திய ஆட்சி இயங்கிட வேண்டுமெனில், மக்கள் ஆட்சியின் மத்திய நிருவாகம் மக்களின் மொழிகளின் உரிமை அடிப்படையை ஏற்று அவை அனைத்திலும் நடைபெற்றிட வேண்டும்.

ஒரு மாநில அரசினுல் மக்களின் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டு உள்ள எந்த ஒரு மொழியும் மத்திய ஆட்சி மொழியாகவும் ஏற்கப்பட வேண்டும். ஒரு மாநில மக்கள் மாநில அரசு நிருவாகம் எந்த மொழியில் இயங்கவேண்டும் என்று தீர்மானித்தாலும், அந்த மொழியைக்கருவியாகக் கொண்டே மத்திய அரசிலும் தமது உரிமைகளை அடையும் வண்ணம், மத்திய ஆட்சி மொழியாகவும் அம்மொழி ஏற்கப்படவேண்டும். ஒரு மாநில ஆட்சிமொழி மத்திய ஆட்சிமொழியாக இடம்பெறுகின்ற நாள் வரையில், அந்த மாநிலம் விரும்பும் வேறு எந்த ஒரு மொழியையும் மத்திய அரசு ஆட்சிமொழியாகபயன் படுத்தியே ஆகவேண்டும். அம் மொழி இன்றைய நிலையில் ஆங்கிலமாகவே இருப்பினும். அந்த மாநில ஆட்சிமொழி மத்திய ஆட்சிமொழியாக ஏற்கப்படும்வரை ஆங்கிலத்தை நீடித்துக்கொள்ளும் உரிமை மாநில அரசுக்கே இருக்கவேண்டும்.

இந்தியாவின் பரந்துவிரிந்த பலமொழி கொண்ட மக்கள் வாழும் துணைக்கண்ட அமைப்பினில், மத்திய ஆட்சி பயனுள்ள வகையில் செயல்பட்டு பாதுகாப்பு நிலைக்கவேண்டுமெனில். மத்திய ஆட்சிக்கு ஏற்கப்பட வேண்டிய மொழிகள் எவையெனக் தீர்மானிக்கும் உரிமை ஒவ்வொரு மொழி பேசும் மக்களுக்கும் உள்ள தனி உரிமையாக மதிக்கப்பட்டு மாநில அரசுகளுக்கே வழங்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மொழிவழியினருக்கும் மத்திய ஆட்சிமொழியாக ஒன்றைத் தீர்மானித்துக் கொள்வதில் முழு உரிமை ஒருக்கவேண்டும். எந்த ஒரு மாநில ஆட்சிமொழியும் — மத்திய ஆட்சிமொழியாகவும் செயல்படுத்தப்படுவது முறையாக வேண்டும். மொழி உரிமைகள்காக்கப்படுவதற்குவழி டாக. ஆட்சிமொழி பற்றி தீர்மானிப்பதில் மாநில அரசு விரும்பும் ஆட்சிமொழிஎதுவாயினும் அதனை மத்திய ஆட்சி மொழிகளிலே ஒன்றாக மத்திய அரசு ஏற்கும்போதே: ஆட்சி மொழிச் சிக்கல் தீரும்! மக்கள் ஆட்சி மலரும்!



(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அதிலும் நாம் பல வினாக்களைத் தொடுக்க ஞ்டியும்.

கூடிய முதல்வர்கள் இந்தியை எதிர்க்கவா கூடினர்கள். கூடியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கவில்லையா? தேவராஜ் அர்சுக்கு தான் தென்னகப் பெருந் தலைவர் என்று காட்டிக் கொள்வதிலும் அதன் மூலம் இந்திராவிற்கும் மத்திய சர்க்காருக்கும் அச்சுறுத்தல் ஏவுவதும் காரணமாக இருக்கவில்லையா? கூடியவர்கள் எதை எதையோ பேசி அதோடு எதோ கடமைக்காக இந்தியை பற்றியும் பேசவில்லை. இந்தியை எதிர்த்து என்ன தீர்மானம் நிறைவேற்றினர்கள். இந்தி திணிப்பு இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் என்ற கவலையை தெரிவிப்பது போலத்தானே தீர்மானம் போட்டார்கள்.

ஆனால் நாம் இப்படி எல்லாம் கேட்க விரும்பவில்லை. எம். ஜி. ஆரின் நல்ல முயற்சியை வரவேற்போம், இந்தி எதிர்ப்பை தென்னக முதல்வர்களே ஏற்றுக் கொள்ளச் செய்து விட்டார் எம். ஜி. ஆர். என்பதை ஏற்போம். அந்த எதிர்ப்பின் அடையாளமாக அவர்களே ஒன்றை ஒன்றைச் செய்யச் சொல்லட்டும் எம். ஜி. ஆர். போராட்டம் தேவையில்லை; கிளர்ச்சி தேவையில்லை; புரட்சி தேவையில்லை. அவர்கள் தி. மு. க. அரசு செய்ததைப்போல் எங்களுக்கு மும்மொழித் திட்டம் தேவையில்லை இருமொழித் திட்டமே போதும். எங்கள் தாய் மொழியும் ஆங்கிலமும் படித்தால் போதும் எங்கள் மாணவர்கள் என்று தீர்மானிக்கச் சொல்லட்டும். அதுபோதும். இப்படிச் செய்வது பெரியகாரியம் இல்லை அவர்களுக்கு: அவர்கள் அவரவர்கள் மாநிலத்தில் பெரும்பான்மை பெற்று ஆட்சி நடத்துகிறவர்கள்: இதனைச் செய்யாது அவர்களையும் இந்தியை எதிர்க்கச் செய்துவிட்டோன் என்பது வெறும் வெத்து வேட்டுதான். எம். ஜி. ஆர். இதனை மட்டும் செய்யட்டும்! செய்வார் என்று எதிர் பார்ப்போம்.

நண்பர்களுக்கும் வாடிக்கைக்காரர்களுக்கும் எமது மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

சொகுசான சுற்றுப்பயணங்களுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற புத்தம் புதிய அப்பாலிடர் டூரிஸ்ட் கார்கள் வாடகைக்கு இரவு பகல் எந்த நேரமும் கிடைக்கும்.

★ [விவரங்கட்கு]
கிருஷ்ணா டூரிஸ்ட் டாக்ஸிஸ்
15, சுப்ரமணிய முதலித்தெரு,
புரசைவாக்கம், சென்னை — 600007.


தொலைபேசி எண்: OFF 664187 ... WORK SHOP 661961
உரிமையாளர்: A. கிருஷ்ணமூர்த்தி

Wish You a Happy
'PONGAL'
FROM:
The Newsprint Specialists:-
R.K. News Print Agencies
&
The Designers & Printers:-
Singam Art Printers
Chintadripet,
MADRAS-600002.
Phone: 842605.
DELHI OFFICE:
14A/73, WEA,
KAROLBAGH NEW DELHI-110 005.
BOMBAY OFFICE:
94-96, ROAD, BAZAAR STREET
FORT, BOMBAY-400001.

பதிவு எண்: TNMS(C) 293

நம் நாடு

பொங்கல் மலர்














19 79

JANUARY

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

FEBRUARY

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28				

MARCH

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

APRIL

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30						

MAY

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

JUNE

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

JULY

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

AUGUST

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

SEPTEMBER

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

OCTOBER

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

NOVEMBER

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

DECEMBER

MON	TUE	WED	THU	FRI	SAT	SUN
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30